வெளியீடு 17-6-98 Issued 17-6-98

405/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 14, 1997 – தொகுதி 37 – எண் 2

Tuesday the 14th October, 1997 – Volume 37 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

வி V2U, 31'N97.
N97. 37·2
21844.

405/99

**14-10-1997**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 45-92 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (முதலாவது மற்றும் இரண்டாவது பட்டியல்) | 92-232 |
| 2. மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு தமிழகம் திரும்பிய பேரவைத் துணைத் தலைவருக்கு வாழ்த்து— | 52 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) சந்தனமரக் கடத்தல் வீரப்பனால் கடத்தி பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள ஆறு பேர்களை மீட்டல் | 233-257 |
| (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளமை | 257-281 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 281 |
| (ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98 வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து | 298-299 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள்-(அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 282 |
| (ஆ) சென்னை மாநகர காவற்படை சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு, 1997 | 282-283 |
| (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 283-284 |
| (ஈ) இந்திய சாலைச் சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 284-285 |
| (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனிஅலுவலர்கள் நியமன) (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 285 |
| (ஊ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 285-286 |
| (எ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 287 |
| (ஏ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 287-288 |
| 6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98-அளித்தல்– | 288-299 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்– | 299-300 |


218442

D
Y211,31'97 N97.37.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புரட்டாசி 28, ஈஸ்வர — திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 அக்டோபர் 14, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி"

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 1, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

**காவல் துறையினரின் சீருடைகளை மற்ற அமைப்புகள் பயன்படுத்துவதைத் தடை செய்தல்**

***5111—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையினர் பயன்படுத்தும் சீருடைகளை மற்ற அமைப்புகள் பயன்படுத்துவதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

காவல் மற்றும் பாதுகாப்புத் துறையின் சீருடைகளை மற்ற அமைப்புகள் பயன்படுத்துவதைத் தடை செய்ய இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் (இ.பி.கோ) 140 மற்றும் 171-ல், ஏற்கெனவே விதிகள் உள்ளன. அவற்றின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே தடைச் சட்டம் இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் காக்கிச் சட்டையை அணிந்து கொண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் போலவும், இன்ஸ்பெக்டர்கள் போலவும், ஸ்டார்கள் அணிந்து கொண்டு ஓட்டல்களில் வாட்ச்மேன்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்க்கும்போது அசப்பில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நிற்பது போல் இருக்கிறது. நேற்றுகூட, நான் அடையாறு வழியாக வந்தபோது, முழுக்க ஒரு துணை ஆய்வாளர் உடையை அணிந்துகொண்டு ஒருவர் தெருவைப் பெருக்கிக் கொண்டு இருந்தார். இவர் இன்ஸ்பெக்டர் மாதிரி இருக்கிறாரே, இவர் பெருக்கிக் கொண்டு இருக்கிறாரே என்று நினைத்து, கிட்டப்போய் பார்க்கும்போதுதான் அவர் செக்யூரிட்டி என்று தெரிந்தது. காவல் துறையின் கம்பீரம் காக்கி உடையில்தான் இருக்கிறது. அந்த காக்கி உடையை மற்றவர்கள் அணியும்போது அந்த காக்கி உடையின் கம்பீரம் குறைகின்ற காரணத்தினால் தனிப்பட்ட நபர்களும், இப்படிப்பட்ட வாட்ச்மேன்களும் அதனை அணிவதை இந்த அரசு தடை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை இவற்றில் பணிபுரியும் படை வீரர், கடற்படை வீரர் அல்லது விமானப்படை வீரர் இவர்கள் அல்லாதார் எவரேனும் மேற்சொன்ன படை வீரர்கள் உபயோகிக்கும் உடை அல்லது அடையாளச் சின்னங்கள் போன்றவற்றை ஒத்திருக்கும் வகையில் உடை அணிவதோ அல்லது அடையாளச் சின்னங்களை வைத்திருப்பதோ போன்ற செயல்களைச் செய்வாராயின் அவர்களுக்கு மூன்று மாத சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய்க்குக் குறையாத அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும் என்று இருக்கிறது.

காவல் துறையினர் மற்றும் பாதுகாப்புத் துறையினர் பயன்படுத்தும் சீருடைகளை மற்ற அமைப்புகள் பயன்படுத்துவதைத் தடை செய்ய இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 140, 171-ல் ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த பொதுப் பணியாளர்கள் உபயோகிக்கும் உடைகள் மற்றும் அவர்கள் அணியும் அடையாளச் சின்னங்கள் ஆகியவற்றை ஒத்திருக்கும் வகையில் அவர்கள் அல்லாதோர்



எவரேனும் அவர்களைப் போன்ற தோற்றம் அளிக்க வேண்டும் என்று மற்றவர்கள் நம்பத் தகுந்த வகையில் உடைகளை அணிவதோ அல்லது அடையாளச் சின்னங்களை எடுத்துச் செல்வதோ போன்ற செயல்களில் ஈடுபடுவாராயின் அவர்களுக்கு 3 மாதங்களுக்குக் குறையாத அளவுக்கு சிறைத் தண்டனை அல்லது 200 ரூபாய்க்குக் குறையாத அளவுக்கு அபராதத் தொகை அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என்று இருக்கிறது. இருந்தாலும் இப்போது காவல் துறை இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துருவில்-காவலர், வன இலாகா அதிகாரி, ஊர்தி இயக்கி ஆய்வாளர் அல்லது பிற அரசுத் துறை அல்லது மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிறுவப்பட்ட கழகங்கள், வாரியம் அல்லது 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டப் பிரிவு 617-ல் விளக்கப்பட்டுள்ளவாறு ஒரு அரசு நிறுவனம் அவற்றிலுள்ள பணியாளர்கள் போன்ற பணி நிலைகளின் உடைகளை அணிவதோ அல்லது அவர்கள் உபயோகிக்கும் சீருடை மற்றும் அடையாளச் சின்னங்களை வைத்திருப்பதோ, இவற்றின் மூலம் ஒரு சிறு அளவாவது இவர்களைப் போன்று தோற்றம் அளிக்கும் வகையில் நடந்து கொள்வதோ இப்பிரிவின் கீழ் குற்றமாகும் என்று ஒரு கருத்துருவை அனுப்பி இருக்கிறார். இத்தகைய உடைகளை அணிவது, அடையாளச் சின்னங்களை வைத்திருபபது போன்ற செயல்களை நாடக நிகழ்ச்சிகளுக்கோ அல்லது திரைப்படம் மற்றும் வீடியோ திரைப்படங்களில் நடிப்பதற்காகவோ மாத்திரம் இருக்கலாம் என்கின்ற கருத்துரு பரிசீலனையில் இருந்து வருகிறது. நாசர் வெளியிலே இப்படிப்பட்ட உடையை அணிய முடியாது, ஆனால், சினிமா நாசர் அணியலாம் (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது வீடுகளிலும், தனியார் நிறுவனங்களிலும், பொது நிறுவனங்களிலும் காவல் பணிக்கு ஆட்கள் நிச்சயமாக தேவைப்படுகிறார்கள். தனியார் துறையிலே செக்யூரிட்டி சர்வீஸ் என்ற பெயரிலே பல்வேறு நபர்கள் அதை அதிக இலாபத்துடன் ஒரு கட்டுப்பாடற்ற முறையிலே இயக்கி வருகிறார்கள். ஏற்கெனவே தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்ற இராணுவப் பணியாளர்களையும் அல்லது காவல் துறையினரையும் வைத்துக்கொண்டு நம்முடைய அரசாங்கமே ஒரு செக்யூரிட்டி சர்வீஸ் என்ற வகையிலே நடத்தலாம்

என்று சென்ற கூட்டத் தொடரிலே முன்மொழிந்தார்கள். அது நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் பயன்படுத்தும் சீருடைகளை மற்ற அமைப்புகள் சில பேர் உடுத்திக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஏதாவது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? அப்படி எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? காவல் துறைக்கு ஏற்கெனவே உள்ள சீருடைகளை மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? அது மட்டுமல்லாமல் சில பேர் இந்தக் காவல் துறையினரின் சீருடைகளான காக்கிச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு கொலை, கொள்ளை போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் சம்பந்தமாக ஏதேனும் அரசுக்கு புகார்கள் வந்துள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற சீருடைகளில் எந்த மாற்றமும் செய்வதாக தற்போது உத்தேசம் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு எந்தவிதமான புகார்களும் இதுவரையில் வரவில்லை. எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்ற விவரமும் இப்போது என் கைவசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு காவலர்களுக்குச் சிகப்புத் தொப்பி இருந்தபோது பொது மக்கள் மத்தியிலே கொஞ்சம் பயம் இருந்தது. ஆகவே சீருடையை மாற்றாமல் இருந்தாலும் தொப்பியையாவது பழையபடி சிகப்புத் தொப்பியாக மாற்றுகிற காரியத்தை தமிழக முதலமைச்சர் ஐயா அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மாற்றம் விரும்புவது உடையிலும் தொப்பியிலும் அல்ல. மனதில். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது காவல் துறையில் மட்டும் காக்கிச் சட்டைகள் கொடுப்பது மாதிரி, சில வீடுகளில் காவலுக்கு இருக்கக்கூடியவர்கள், உள்ளாட்சி மன்றங்களில் இருக்கக்கூடியவர்கள், மற்ற துறைகளிலும் இந்த காக்கிச் சட்டையை வைத்திருக்கிறார்கள். அவைகளை மாற்றி ஒவ்வொரு துறைக்கும் வெவ்வேறு கலர்கள் என்று நிர்ணயம் பண்ணினால் நன்றாக இருக்கும். அந்த மாதிரியான எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நல்ல கருத்து. அது எந்த அளவுக்குச் சட்ட ரீதியாகச் செயல்படுத்தப்பட முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுடைய சீருடையில் மாற்றம் காண வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகவே-உத்தமர் காந்தியடிகள் விருது வழங்குகிற நிகழ்ச்சியிலே குறிப்பிட்டதைப்போல-மது தயாரிப்பவர்களைத் தடை செய்வதற்கு குண்டர் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதேபோன்று மது அருந்தி தங்களுடைய பணிகளிலே ஈடுபடுகின்ற காவலர்கள், அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலியே பயிரை மேய்கின்ற வேதனையை எந்த அரசும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. பொறுத்துக் கொண்டிருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[1997 அக்டோபர் 14

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட உடைகளால் குறிப்பிட்ட துறையைச் சார்ந்தவர்கள் என்று அறிய முடிகிறது. எம்.எல்.ஏ.-க்களில் பலர் சில இடங்களில் இனம் காட்டப்படாமல் அல்லது அவர்கள் தெரிந்துகொள்ளப்படாமல் தவறாக நடத்தப்படுகிறார்கள். எனவே சட்டமன்றம் நடைபெறும் போதாவது எம்.எல்.ஏ.-க்களுக்கு இந்த உடையில்தான் வர வேண்டும் என்று ஒரு சீருடையை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உடை அணிந்து வந்தாலே போதும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுடைய சீருடையில் மாற்றம் இல்லை என்றாலும் கூட காவலர்களுடைய உடல் அமைப்பில் அவர்கள் பணியாற்றுகின்ற காலத்தில் மாற்றம் வந்துவிடுகிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தினந்தோறும் சுறுசுறுப்பாகப் பணியாற்ற உடற்பயிற்சி செய்வதைப்போல - பல பத்திரிகைகளில் கார்ட்டூன்களில் எல்லாம் கிண்டலாகப் போடுகிறார்கள்; தொப்பை இருந்தால் போலீஸ் வேலைக்குப் போகலாம் என்று—அவர்களுடைய உடல் அமைப்பைக் குறைக்க — தினந்தோறும் அவர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று அரசு அவர்களுக்குக் கட்டளையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய யோசனை. அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்குக் காவல் துறையில் இருக்கிறது. அது கண்காணிக்கப்பட வேண்டும். அதுபற்றி பெரிய அதிகாரிகளோடு கலந்தாலோசித்து ஆவன செய்யப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்குத் தகுதியான உடல் அமைப்பு இல்லாதவர்களை, அதாவது காவல் துறைக்கு வந்த பின்னால் அப்படி உடல் அமைப்பு வந்திருப்பவர்களை அலுவலகத்தில் ஏதாவது பணியில் அமர்த்தலாம். இதுபோன்ற அந்த பீல்டில் வேலை செய்யக்கூடாது என்ற வகையில்



1997 அக்டோபர் 14]

ஏதாவது மாற்றம் செய்ய அரசிடம் ஆலோசனை உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலையில் அலுவலகப் பணிக்கு அனுப்பினால் தொப்பை இன்னும் அதிகமாகிவிடும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்பதற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மொரிசியஸ் நாட்டுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சில துறைகளுக்கு உள்ள அந்தச் சீருடைகளை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லியிருந்தாலும்கூட போலீஸ் டிராஃபிக் வார்டன்கள் அந்த உடையை உடுத்தலாம்; அதேபோல் இருக்கலாம் என்று அரசாணையே இருக்கிறது. அதனால் பல ஊர்களில் போலீஸ் டிராஃபிக் வார்டன்கள் இதுபோன்ற உடையை அணிந்து கொண்டு வருகிறார்கள். அதனால் சில பிரச்சினைகள் எழுவதாகக் கூட போன வாரம் வேலூரில் வந்த தினமணி பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டிராஃபிக் வார்டன்கள் அதுபோன்ற உடையை உடுத்தலாமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். வனத் துறையில் பொதுவாக காக்கிக்குப் பதிலாக பச்சையை அவர்களுக்குத் தனியாக அளித்து விடலாம். அதேபோல் போக்குவரத்துக் கழகம் போன்ற வாரியங்களில் உள்ள செக்யூரிட்டிகளுக்கு எல்லாம் வேறு ஏதாவது நீல வண்ணம் போன்ற வண்ணங்களில் தனியாக உடை கொடுத்து விடலாம். இப்போது ஆர்.பி.எப். இந்த உடையைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கும் வேறு வண்ணத்தில் உடையைக் கொடுத்துவிட்டு காவல் துறையில் பயன்படுத்துகின்ற உடையை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது என்ற ஒரு தடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 14

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரிவினர் உடுத்துகின்ற உடைக்கும், அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உடைக்கும், மற்றொரு பிரிவினர் உடைக்கும் சிறு வித்தியாசமாவது இருக்கவேண்டும் என்பதில் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த எண்ணங்கள் பரிசீலிக்கப்படும்.

## 2. மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு தமிழகம் திரும்பிய பேரவைத் துணைத் தலைவருக்கு வாழ்த்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் துணைத் தலைவருக்கு மிக நெருக்கமான நண்பர் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, அவர் மட்டும் வாழ்த்தினால் போதாது என்ற வகையில் வெளிநாடு சென்று வந்த துணைத் தலைவர் அவர்களுக்கு அவையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து திரு. கே. சுப்பராயன்.

## 1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

## (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைப் பொறுத்தவரையில் உடையைக் காட்டிலும், உடலைக் காட்டிலும், மிக முக்கியமானது உள்ளம்தான். குற்றவாளிகளை அணுகும் முறைகளில் அடிப்படையான மாற்றம் தேவைப்படுவது உலக அளவிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஓர் உண்மையாகும். எனவே, மனிதத் தன்மையோடு கூடிய முறையில் குற்றவாளிகளை அணுகும் முறையை உருவாக்குவதற்குப் பொருத்தமான பயிற்சி முறையை உருவாக்க மாநில அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தும் இடம் பெற வேண்டும் என்ற வகையில் பயிற்சி முறையே அப்படித்தான் இருக்கவேண்டும் என்று இப்போது கூறப்பட்டிருக்கிறது.



1997 அக்டோபர் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2. திரு. அ. லெ. சுப்பிரமணியன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2—

## தொழில் வளர்ச்சி மையம் அமைத்தல்

***6752—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் அருகே மத்திய அரசின் உதவியோடு தொழில் வளர்ச்சி மையம் ஒன்று அமைக்கப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். மத்திய அரசின் உதவியோடு திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் மற்றும் பிராஞ்சேரி கிராமங்களில் 2020 ஏக்கர் பரப்பளவில், ரூ.39.68 கோடி முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) தொழில் வளர்ச்சி மையத்தைத் தொடங்க உள்ளது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் வேலை துவங்கப்படவில்லை. எனவே, மத்திய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. முரசொலி மாறன் அவர்கள், மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் போன்றவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது செல்வாக்கைப் பயன்படுத்தி உரிய உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொழில் வளர்ச்சி மையமானாலும் முதலில் நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும். இந்த கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையத்தைப் பொறுத்தவரையில் 2020 ஏக்கர் என்பது குறிக்கோள். ஆனாலும்கூட இதுவரையில் 1947

ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள நிலத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒன்று, இதற்கான விளம்பரங்கள் எல்லாம் நல்லமுறையில் செய்யப்பட்டு இருந்தும்கூட தொழில் முனைவோர்களிடமிருந்து 19 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யக் கோரித்தான் இதுவரையில் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. எனவே, நெல்லை மாவட்டத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் முனைவோர்களைத் தேடிப் பிடித்து கங்கைகொண்டானிற்கு வருமாறு செய்கின்ற அந்தப் பணியைச் செய்தால் தொழில் துறை, மத்தியில் இருக்கின்ற தொழில் துறையானாலும் சரி; மாநிலத்திலே இருக்கிற தொழில் துறையானாலும் ஆர்வத்தோடு அந்தப் பணியிலே ஈடுபட முடியும்.

(முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி* ஜில்லாவிலே நிலங்களைக் கையகப் படுத்தியதைப் போன்று, திண்டுக்கல் மாவட்டத்தில் 1989-90-ஆவது ஆண்டே, அதுவும் நிலக்கோட்டை தொகுதியிலே சுமார் 419 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த மக்களால் பணமும் கொடுக்கப்பட்டு, இதுவரையில் எந்தவிதமான ஒரு சின்ன வேலைகூடச் செய்யப்படாமல் அப்படியே இருந்து கொண்டு வருகிறது. எனவே, இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, மத்திய அரசின் உதவியோடாகிலும் அங்கே தொழில் வளர்ச்சி மையத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு முதல்வரவர்கள் செய்வதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நிலக் கோட்டையைப் பொறுத்தமட்டில் 400 ஏக்கரா நிலம் கையகப் படுத்தப்பட்டு அதில் முதல் கட்டமாக 250 ஏக்கரா பரப்பிலே சில பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளெல்லாம் முடிவுற்ற பிறகு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியவாறு அங்கே தொழில் வளாகம் அமைவதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை டாசிட் மையத்தில் மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுடைய உத்தரவின் பேரில் மிகத் துரிதமாக வேலைகள்



நடந்து கொண்டு இருக்கின்றன. சென்ற கால ஆட்சியின் தவறான வழிகாட்டுதலின் பேரில் நிலங்களைக் கையகப்படுத்தும் பணிக்கு அரசுக்குக் கொடுக்க முன்வராத சிலபேர் கோர்ட்டுக்குப் போய்த் தீர்ப்பாகி இருக்கிறது. அவர்கள் அனைவரும் சேர்ந்து நிலத்தைக் கொடுப்பதற்குத் தற்போது தயாராக முன் வந்திருக்கிறார்கள். அதை Private negotiation என்ற அடிப்படையில் கருதி அரசு எடுத்துக் கொள்வதற்கு முன்வருமா, அதற்கு முதலமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பெருந்துறையைப் பொறுத்தவரையில் திட்டமிடப்பட்ட நிலம் 2,800 ஏக்கரா ஆகும். அதிலே 2,500 ஏக்கரா நிலம் கையகப்படுத்தப்பட்டாகி விட்டது. அதில் முதல் கட்டமாக 1150 ஏக்கராவில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த அரசின் தீவிர முயற்சியின் காரணமாகச் சாலை வசதி, தெருவிளக்கு, நிர்வாகக் கட்டிடம் கட்டுவது போன்ற பணிகளெல்லாம் தொடங்கப்பட்டுள்ளன. அவர்கள் குறிப்பிட்டதைப்போல மற்றும் உள்ள நிலத்தைக் கையகப்படுத்த ஆவன செய்ய அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கடும்வறட்சிப்பகுதியான சங்கரன்கோவில் தாலுக்காவில் உள்ள மக்கள் தொழில் வாய்ப்பு இல்லாமல் கேரளாவிற்கு அகதிகளாகச் செல்வதை அரசு அறியுமா? வறட்சிப் பணிகளில் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்காமல், இயந்திரம் வைத்து வேலை நடைபெற்று விஞ்ஞான ரீதியில் ஊழல் நடைபெறுவதை அரசு அறியுமா? இதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் அளிப்பாரா என்பதைத் தங்கள் மூலம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூல வினாவையொட்டிய துணை வினாவே இல்லை. டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரம் கண்ட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த நிதியாண்டில் உருவாக இருக்கும் அத்தனை சமத்துவபுரங்களிலேயும் சிறிய அளவில் தொழில் வளர்ச்சி மையங்களை உருவாக்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 14

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இது 2,000 ஏக்கரா, 3,000 ஏக்கரா பரப்பளவிலே அமைக்கப்பட இருக்கின்ற தொழில் வளாகங்களைப் பற்றிய கேள்வி. இதில் மிகக் குறைந்த அளவில் ஏக்கரா கொண்ட சமத்துவபுரங்களில் இந்தத் தொழில் வளாகங்களை ஏற்படுத்துவது சம்பந்தமில்லாத செய்தியாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியான ஆண்டிமடம் பகுதியிலே நிலக்கரிச் சுரங்கம் வரவிருக்கிறது. அந்தப் பகுதியிலே துணைத் தொழில்கள் பெருகுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. அது மிகமிகப் பிற்படுத்தப்பட்ட பகுதி. ஆகவே, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் பகுதிகளிலே தொழில் வளர்ச்சி மையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள தொழில் வளர்ச்சி மையங்களில் ஒரு பகுதி வேலையாவது நடைபெற்று அந்தப் பணிகள் முடிவுற்றால்தான் அடுத்த தொழில் வளர்ச்சி மையத்தைப்பற்றிச் சிந்திக்க முடியும். அதற்காக, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த மையத்தை ஏற்படுத்தவே மாட்டோம் என்று சொல்லமாட்டேன். அதுபற்றியும் யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான இராதாபுரத்தில் காற்றாலை மூலம் அதிகமான மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், கூடங்குளம் அணு மின் நிலையத்தையும் மிக விரைவிலே தொடங்கவிருப்பதாக மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு பிரதமர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே இதுவரை எந்தவொரு தொழிற்சாலையும் இல்லாத ஒரு குறையிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்கள் வேலையின்றி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொழில் வளர்ச்சி மையம் பற்றிய கேள்வி, தொழிற்சாலை அல்ல. உட்காருங்கள்.



1997 அக்டோபர் 14]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். நெல்லை மாவட்டத்தில், குறிப்பாக அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் காற்றாலை போன்ற வசதிகள் இருக்கின்ற காரணத்தினால்தான் இப்பொழுது ஒரு தொழில்நுட்ப தொழில் பூங்கா நாங்குநேரிக்கு அருகில் அமைப்பதற்கு டிட்கோ நிறுவனம் உத்தேசித்து அதற்காக அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற அயல்நாட்டவர்கள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அமெரிக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 26- ஆம் நாள் என்னைச் சந்தித்துப் பேசி, அந்த இடத்தை 29-ஆம் தேதி போய் பார்வையிட்டு நாங்குநேரிக்கு அருகில் இந்தத் தொழில் திட்டம் அமைவதற்கு திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் 2000 ஆவது ஆண்டுக்குள் நிறைவு செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**3—**

## முதுகலை தாவரவியல் பட்டதாரி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்தல்

*3505—**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் முதுகலை தாவரவியல் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதைக் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் முதுகலை தாவரவியல் பட்டதாரி ஆசிரியர்களைக் கட்டாயமாக நியமனம் செய்திடும் நிலை தற்பொழுது இல்லை.

[1997 அக்டோபர் 14

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அனைத்து மக்களும் விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். இந்த அனைத்துப் பள்ளிகளிலும் முதுகலை தாவரவியல் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்தால் அதிலே பயிலுகின்ற மாணவர்கள் நல்ல முறையில் பயின்று, வேறு வேலையை நம்பியிராமல், சொந்தமாக விவசாயத்திலே கவனம் செலுத்தி, நாட்டுக்கு உற்பத்தியைப் பெருக்கித் தருவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள பாடத் திட்டம் பயாலஜி என்ற பெயரில் அமைந்திருக்கிறது. அந்தப் பாடத் திட்டத்தை நடத்துவதற்கான தகுதி ஜுவாலஜி படித்தவர்களுக்கும், அதேபோல பாட்டனி, ஆகிய இரண்டு பாடங்களைப் படித்தவர்களுக்கும் இருக்கிறது. ஒரே பாடமாக பயாலஜி மட்டும் படித்தவர்களாகப் பட்டதாரிகள் இல்லை. ஆகவே, இதற்குரிய எண்ணிக்கையை, எந்த அளவுக்குப் போட முடியுமோ அந்த அளவுக்கு, ஒரு பகுதி பாட்டனி படித்தவர்கள், ஒரு பகுதி ஜுவாலஜி படித்தவர்கள் என்று இரண்டு வகையான படிப்பு உடையவர்களும் இடம்பெறுகிறார்கள். அடுத்து, பாட்டனி படிப்பதும் வேளாண்மைக்கு நேரிடையாக தொடர்புடையதல்ல. வேளாண்மைப் பாடம் ஒன்று மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக அமைந்திருக்கிறது. விருப்பப் பாடமாக அல்லாமல் பொதுவான பாடத்தில் அது இடம்பெற வேண்டுமென்ற கருத்து இருந்தாலும் கூட, எப்படி இடம்பெறச் செய்வது, என்ன வழிமுறை என்பது ஆராயப்படுகிறது. அதற்கான குழு ஆலோசனை சொல்லுமேயானால், அதைப் பாடத்திட்டத்தில் இணைக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் அது பற்றி ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**4**—

## உருது மொழிப் பாடப் புத்தகங்கள் அச்சிடுதல்

***9240**. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 14]

(அ) 6-ஆம் வகுப்பு முதல் ப்ளஸ்-2 வகுப்பு வரை உருது பாடப் புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் அச்சடிக்கப்படாததால், சிறுபான்மை மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் பெரும் அவதிக்குள்ளாயிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது ஏப்ரல் திங்களில். அதாவது கடந்த ஆண்டு இந்தப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதில் அதிக சிக்கல் இருந்த காரணத்தினால், வெளி மாநிலங்களிலிருந்து உருது மொழி, பிற மொழி ஆகியவற்றில் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் எழுந்த கேள்வி. இந்த ஆண்டுக்குத் தேவையான உருது மொழிப் பாட நூல்களை உரிய காலத்தில் மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. உருது மொழிப் பாடப்புத்தகங்கள் தாமதமாக அச்சிடப்படுகின்றன. பள்ளிகள் ஜுன் மாதம் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆனால், உருது மொழி பாடப்புத்தகங்கள் ஆகஸ்ட் மாதம்தான் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இந்தத் தாமதத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் என்ற கேள்விக்கு பதில் அளித்துள்ளார், நன்றி சொல்லிக்கொள்கிறேன். உருது மொழி பாடப் புத்தகங்களின் விலை அதிகமாக இருப்பதாக மாணவ மாணவியர்கள் கருதுகிறார்கள். அதன் விலையைக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருதுமொழிப் பாட நூல்கள் பிற மாநிலத்திலேயிருந்து-ஆந்திராவிலேயிருந்து-வரவழைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அப்படி வரவழைக்கப்படுவதில், உள்ளபடியே அவர்கள், அவர்களுடைய மாநிலத்திற்கு வழங்கிவிட்டு பிறகு நமக்கு

வழங்குகிறார்கள். நேரிடையாக உருதுமொழிப் பாடங்கள், இங்கே நம்முடைய ஆசிரியர்கள் தயாரித்து அச்சடிக்கிற ஒரு முறை இல்லை. இரண்டாவது அதிகப் பிரதிகள் அச்சிடப்பட வேண்டிய அவசியமும் இல்லை. பிற பாடங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, உருதுமொழியில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. அதுபோல பிற மொழிகளிலேயும், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றிலும் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. பிற மாநிலத்திலேயிருந்து வரவழைப்பதிலே சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பாடப் புத்தகங்கள் எவ்வளவு விரைவாக வழங்கப்பட வேண்டுமோ அப்படி வழங்குவதற்கு முயற்சிக்கலாம். இந்தப் பாடப் புத்தகங்களுக்கெல்லாம் ஒரே முறையிலேதான் விலைகள் வைக்கப்படுகின்றன. அந்த முறையைப் பின்பற்றித்தான் விலைகள் இருக்க வேண்டுமே தவிர, அதிகம், குறைவு என்று தனிப்பட்ட முறையில் கருதி, குறைக்கவோ, ஏற்றவோ நியாயமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

THIRU B. VENKATASAMY: Hon. Speaker Sir, the same condition prevails in the supply of Telugu and Kannada books in my constituency also. May I know from the Hon. Minister whether proper steps will be taken to supply them at the beginning of the academic year, i.e. June itself?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பிற மொழி ஏடுகள் எவையெவை வழங்கப்பட வேண்டுமோ அவை ஏறத்தாழ—அக்டோபர் மாதம் முதல் வாரத்திற்கு முன்னர்—செப்டம்பர் மாதத்திலேயே வழங்கப்பட்டிருக்கின்றன. வழங்கியதற்கான விவரங்கள் இருக்கின்றன. எங்கேனும் குறைபாடு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் அது சரி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்களை தன்னுடைய பதிலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்று, ஹைதராபாத்திலேயிருந்துதான் இந்தப் பாடப் புத்தகங்கள் தருவிக்கப்படுகின்றன என்பது. இரண்டாவது, உருது படிக்கக்கூடியவர்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள் என்ற கருத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னையிலேயே ஆயிரக்கணக்கான உருதுப் பள்ளிகள்





மூடப்பட்டிருக்கின்றன என்பது ஒன்று. இரண்டாவது, ஹைதராபாத்திலிருந்து தருவிக்க வேண்டிய அவசியம் என்ன? வேண்டுமானால் எங்கள் பகுதிக்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள், அந்த உரிமையைக் கொடுங்கள். தனியார்களே இருக்கிறார்கள். நாங்கள் அச்சிட்டு ஹைதராபாத்துக்கு அனுப்புகிறோம். எனவே, இங்கேயே அச்சிடக் கூடியவர்கள், ஹைதராபாத்காரர்களைவிட உருது தெரிந்தவர்கள் நிறையபேர்கள், நம்முடைய தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆகையால்தான், இதை இங்கேயே தனியார்களுக்குக் கொடுத்தாவது அச்சிட்டு உரிய காலத்தில் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா? உருது மொழிக்குப் போதிய உற்சாகம் இப்போது அளிக்கப்படவில்லை என்பது ஒரு குறையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு, முனைப்பாகச் செயல்பட அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருது மொழியில் மொழிபெயர்த்து வழங்கப்படக்கூடிய, தமிழ்நாட்டில் திட்டமிடப்படுகிற பாடங்கள் எல்லாம் உருது மொழியில் மொழிபெயர்த்து அச்சிட்டு வழங்கப்படுகின்றன. உருது மொழிப் பாடப் புத்தகம் மட்டும்-ஆந்திராவில், அவர்கள் ஏற்கெனவே உருதுமொழியில் அதிக அளவு தேர்ச்சி பெற்ற ஒரு கல்வி நிலையைப் பெற்றிருக்கிற காரணத்தால், மொழிப்பாடம் language text- அது மட்டும் உருது என்ற அடிப்படையில் அந்த மாநிலத்திலேயிருந்து வாங்கப்படுகிறது. அதேபோல், கேரளத்திலேயிருந்து வாங்கப்படுகிறது. ஒரு வேளை அந்தப் புத்தகம் திரு. லத்தீப் அவர்களுடைய திறமையால் பன்மொழிப் புத்தமாக ஆகிவிட்டால் என்ன செய்வது என்ற ஒரு அச்சம். இன்னொன்றைச் சொன்னார்கள், ஆயிரக்கணக்கான உருதுப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்து, ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்கள்தான், ஒரு வேளை மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து, அது காரணமாக மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அது ஒரு பெரிய தவறாக எனக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களிடம் அந்தப் பட்டியல் இருக்குமானால், அதைக் கொடுத்தால் எங்கெங்கே அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருந்தன என்பதைத் தெரிந்துகொள்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

[1997 அக்டோபர் 14

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரெய்லி முறையில் படிக்கக்கூடிய கண் தெரியாத மாணவர்களுக்குப் பாட நூல் நிறுவனத்தின் மூலமாக புத்தகங்கள் வழங்கப்படுகின்றனவா? இன்று காலையில்கூட ஒரு, கண் தெரியாத மாணவர், பிரெய்லி முறையிலே இருக்கின்ற அந்த டிக்ஷனரி 350 ரூபாய் என்று சொன்னார். எனவே, குறைந்த விலையில் பாட நூல் நிறுவனத்தின் மூலமாக அதனை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூல வினாவோடு தொடர்புடைய துணை வினாவா?

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர்களுக்கான அந்தப் பாடப் புத்தகங்கள் எதுவும் பாடநூல் நிறுவனத்திலே தயாரிக்கப்படவும் இல்லை அல்லது வாங்கி வழங்கப்படவும் இல்லை. அது தனி அமைப்பு மூலமாக நடைபெறுகிறது. அது பற்றிய விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால், தெரிந்து அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

5—

**பெரியார் அரசு மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்குதல்**

***7213—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, பெரியார் அரசு மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிதி நிலைமைக்கேற்ப இம்மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.



1997 அக்டோபர் 14]

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை பெரியார் மருத்துவமனைக்கு இதுவரை அமரர் ஊர்தி வழங்கப்படவில்லை. ஏழை எளிய மக்கள் இறந்துவிட்டால் உடலை எடுத்துச் செல்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, உடனடியாக அமரர் ஊர்தி வாங்குவதற்கான நடவடிக்கையை எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல வாங்கிக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்து, ஏழை எளிய மக்கள் வெளியிலே சென்று தனியாரிடத்தில் அமரர் ஊர்தியைக் கேட்டால், அவர்கள் ஒன்றுக்கு மூன்று பங்கு வாடகை கேட்கிறார்கள். அந்த வாடகையை ஏழை எளிய மக்களால் கொடுக்க முடியவில்லை. எனவே, உடனடியாக அமரர் ஊர்தி வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கே உள்ள ஆம்புலன்ஸ் அவசர கேஸ்களை எடுத்துச்செல்வதற்கு முடியாத நிலையில் இருக்கிறது. அவசர கேஸை தஞ்சைக்கோ அல்லது திருச்சிக்கோ அல்லது சென்னைக்கோ எடுத்துச் செல்லவேண்டுமென்று சொல்லி ஆம்புலன்ஸைக் கேட்டால், அந்த ஆம்புலன்ஸ் நோயுற்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, நோயுற்ற அந்த ஆம்புலன்ஸைக் குணப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை பெரியார் அரசினர் மருத்துவமனையில் ஏற்கெனவே இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அங்கே 160 படுக்கைகள் இருக்கின்றன. தாலுக்கா மருத்துவமனைகளிலே 100 படுக்கைகளுக்கு மேல் இருந்தால் அங்கெல்லாம் அமரர் ஊர்தி வாங்கவேண்டுமென்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப அரசு அது பற்றி முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமரர் ஊர்திகளுக்கு அரசு ஒரு கட்டணம் நிர்ணயித்திருக்கிறது. கட்டணம் நிர்ணயித்த பிறகு, அதற்கான டீசலுக்கு கட்டுப்பாடு விதித்திருப்பதால், ஏழை எளிய மக்கள் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவே, இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 14

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள குடவாசல் மருத்துவமனை தாலுக்கா மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனைக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சமீபத்தில் வருகை தந்து ஆலோசனைகளை வழங்கியதால், அது தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால் அந்த மருத்துமனைக்கு வழங்கப்படுவதாக இருந்த அவசர ஊர்தி இன்னும் வழங்கப்படாமல் உள்ளது. அது விரைவில் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏறக்குறைய 156 தாலுக்கா மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கெல்லாம் முதற்கட்டமாக ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்கவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. அதில் ஏறக்குறைய 76 தாலுக்கா மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டாகி விட்டது. மீதம் இருக்கிற தாலுக்கா மருத்துவமனைகளுக்கு இந்த டிசம்பர் மாதத்திற்குள்ளாக ஆம்புலன்ஸ் வண்டிகள் வழங்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் முடிந்த பிறகு அரசு அதுபற்றி யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசில் முதலமைச்சர் சொகுசாகச் செல்வதற்காக வாங்கப்பட்ட விமானம் பயன்படுத்தப்பட முடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை அரசினுடைய கையிலிருந்து கழுவிவிட்டு, அதை விற்றுவிட்டு, அதன் மூலமாக வருகின்ற பணத்தை வைத்து, இப்படிப்பட்ட ஆம்புலன்ஸ் வண்டிகளை பொது மக்களுக்குப் பயன்படும் விதத்தில் வாங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில் வாங்கப்பட்ட விமானத்தை விற்பதற்கான முயற்சி இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு, அதை



1997 அக்டோபர் 14]

வாங்குவதற்கு யாரும் முன்வராத சூழ்நிலையில், அதை இப்போது முதலமைச்சர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குவதற்காக 10 கோடி ரூபாயை இந்த ஆண்டு வழங்கியிருக்கிறார்கள். அதில் கிட்டத்தட்ட 250 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 10 கோடி ரூபாய் இந்த ஆண்டு கேட்டிருக்கிறோம். அதுவும் கிடைத்துவிடும். அந்தப் பணம் கிடைத்த பிறகு எல்லா மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்படும். எனவே, விமானத்தை விற்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி (குறுக்கீடு) உட்காருங்கள். திரு சுந்தரம், நீங்கள் எழுந்து நின்று கொண்டு சபையை நடத்துகிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) கையைத் தூக்கினாலும் நான் கூப்பிட்டால்தான் நீங்கள் பேச வேண்டும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. வ. வேலுசாமி.

**திரு வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனையிலே வேலை பார்க்கக்கூடிய மருத்துவர்களுடைய தொழிலானது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சுந்தரம் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு, எதிர்த்தாற்போல் இருப்பவர்களைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தால் நான் வெளியேற்றுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர்கள் பேசுகிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசாமல் இருங்கள். நீங்கள் பேசினால் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளிலே பணியாற்றும் மருத்துவர்கள் உயிர் காக்கக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூடிய பணியிலே இருக்கிறார்கள். 'எமர்ஜென்சி சர்வீசஸ்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு பணியிலே இருக்கக்கூடியவர்கள் ஏதாவது ஒரு பொதுக் காரணத்திற்காக திடீரென்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். அதனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் துணை வினாவினைக் கேளுங்கள். மூலக் கேள்வி ஆம்புலன்ஸ் பற்றியது.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மதுரையில் நடந்த சம்பவம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர், சிங்கம்புணரி பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த இரண்டு மருத்துவமனைகளிலும் அவசர ஊர்தி இருந்தும் பல ஆண்டுகளாக ஓட்டுநர்கள் இல்லாத நிலைமையில் அவை இயக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. பல முறை எடுத்துக்கூறியும் அங்கே ஓட்டுநர்கள் நியமிக்கப்படாத காரணத்தால், ஏழை எளிய மக்கள் அவசர ஊர்தி இருந்தும், அதைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே உடனடியாக, அவசரமாக ஓட்டுநர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே அரசிடம் இது பற்றி எடுத்துச்சொன்ன காரணத்தால் கடந்த மாதம் அங்கே ஓட்டுநர்களை நியமிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

6—

**அனைத்துப் பிரிவு விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்**

***7654*—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





வாசுதேவநல்லூர் தொகுதியில் ரூ. 10,000 கட்டி மின் இணைப்பு பெற்ற விவசாயிகளுக்கும் மற்ற விவசாயிகளைப் போல் இலவச மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மின்சாரம் இலவசமாக ஏற்கெனவே வழங்கப்படுகிறது. விவசாயிகள் ரூ. 10,000 கட்டினால் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. ஆனால் ரூ. 10,000 கட்டிய விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்தவுடன், அவர்களிடமிருந்து வருடத்திற்கு 2 முறை மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. அதை ரத்து செய்து, மற்ற விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதைப் போல, இவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ. 10,000 செலுத்தினால் மின்சார பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குகிறார்கள். ஒரு குதிரைத் திறனுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 250 வீதமோ அல்லது ஒரு யூனிட்டுக்கு 50 பைசா வீதமோ செலுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கட்டளை. ஏற்கெனவே 15 லட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தை அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இதனாலேயே ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. இலவச மின்சாரமே கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கமும், உலக வங்கியும் மாநில அரசாங்கங்களை வற்புறுத்தி வருகின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையிலே, சுய நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் நிச்சயமாக அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 10-10*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையிலே மின்சாரம் என்பது விவசாயிகளுக்கு அத்தியாவசியமான தேவைகளில் ஒன்றாக இருந்து வருகிறது. நம்முடைய

தமிழக அரசு குறைந்த அளவு நீரைக் கொண்டு நிறைவான மகசூலைப் பெறக்கூடிய பல்வேறு திட்டப் பணிகளைச் செய்து வருகின்ற இந்த காலகட்டத்தில், விவசாயிகள் வெட்டுகின்ற கிணறு புறம்போக்கு நிலத்தில் இருந்தாலும் அல்லது பட்டா நிலத்தில் இருந்தாலும் அவர்களுக்கு உடனடியாக மின்சார இணைப்பு வழங்க வேண்டும். அதே நேரத்தில், சீனியாரிட்டி என்று இல்லாமல் உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் 4 இலட்சம் விவசாயிகள் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டு கடந்த 10 ஆண்டுகளில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய சூழ்நிலையில் நாம் ஆண்டொன்றுக்கு 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின் இணைப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ப்ரையாரிட்டி, சீனியாரிட்டி இல்லாமல் கொடுப்பது என்று சொன்னால் 4 இலட்சம் பேருக்கும் நாம் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். ஒரு மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு ரூ. 50,000 செலவாகிறது. சுமார் இருபதாயிரம் கோடி ரூபாய் இருந்தால்தான் இந்தத் திட்டத்தை நாம் அமல்படுத்தமுடியும். அப்படியே அமல்படுத்துவதாக இருந்தாலும் 4 இலட்சம் மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்க ஏராளமான கருவிகளெல்லாம் வாங்க வேண்டும். எனவே, அது இயலாத ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**7—**

## சீவலப்பேரி குடிநீர்த் திட்டம்

***2004**—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, 'சீவலப்பேரி குடிநீர்த் திட்டம்' எந்நிலையில் உள்ளது?



(ஆ) அத்திட்டத்தினால் பயனடையும் கிராமங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள விளாத்திகுளம், புதூர், கடம்பூர் மற்றும் 189 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.15.29 கோடியில் தயாரிக்கப்பட்டு ரூ.2.64 கோடியில் விகிதாச்சாரத் தொகையாக விளாத்திகுளம் பேரூராட்சிக்கு வழங்கிட அரசு ஆணை வழங்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தாமிரபரணி ஆற்றில் சீவலப்பேரி அருகில் தற்போது 4 எண்ணம் நீர் உறிஞ்சு குழாய்கள் அமைக்கப்பட்டு, நீர்த்தேக்கத்தொட்டி, நீர்மின் இணைப்பின் அறை, குளோரின் அறை ஆகியவை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) இத்திட்டத்தினால் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் 104 குடியிருப்புகளுக்கும், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 57 குடியிருப்புகளுக்கும், புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் 18 குடியிருப்பு களுக்கும், கயத்தார் ஊராட்சி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளுக்கும், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் 2 குடியிருப்புகளுக்கும், ஆக மொத்தம் 189 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட கூட்டுக் குடிநீர்த் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 200 கிராமங்களுக்கு மேலாக பலன் தரக்கூடிய இந்த சீவலப்பேரி குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். ஏனெனில், ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய பகுதிகள் அடிக்கடி வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள். அங்குள்ள மக்கள் குடிப்பதற்குக்கூட நீர் கிடைக்காமல் அவதிப்படக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரில் ஒருமுறை தெரிவித்ததையொட்டி சென்ற வாரம் நான் சீவலப்பேரிக்கே சென்று, தாமிரபரணி ஆற்றுப் படுகையில் வெட்டப்பட்டுள்ள கிணறுகளைப் பார்வையிட்டதோடு, குழாய்கள் எவ்வளவு தூரம் இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிந்தேன். இதற்கு முன்னாலே

[1997 அக்டோபர் 14

துரிதமாகத்தான் அந்த வேலைகள் நடந்து கொண்டிருந்தன. மீண்டும் அந்த வேலைகளை நான் துரிதப்படுத்தியிருக்கிறேன். கூடுமானவரையில் எந்த அளவிற்கு அந்தப் பணிகளைத் துரிதமாக முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. டி. செல்வராஜ், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**8—**

**உடுமலைப்பேட்டையில் பாதாளச் சாக்கடை அமைத்தல்**

***4431*—திரு. டி. செல்வராஜ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையில் பாதாளச் சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) உடுமலைப்பேட்டையில் பாதாளச் சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை.

**திரு. டி. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை நகரத்தைப் பொறுத்தமட்டில், அது ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஜனத்தொகை கொண்ட நகரம். எனவே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று அந்நகர் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உடுமலைப்பேட்டை நகராட்சியில் மக்கள் தொகை 58,672 பேர் இருக்கிறார்கள். இருந்தாலும், பாதாள சாக்கடைத் திட்டம் என்பது அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வரக்கூடிய காரியம் அல்ல.



1997 அக்டோபர் 14]

காரணம், நிதி ஆதாரங்களைத் திரட்டுவதும், அந்தப் பணிகளை எடுத்துக் கொள்வதற்காக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதும், நில ஆர்ஜிதம் செய்வதும், அதைப்போலவே நகர்ப்புறங்களில் கடைத் தெருக்கள் வழியாகவும், தெருக்கள் வழியாகவும் பாதாளச் சாக்கடையை அமைப்பதும் மிகவும் சிரமமாக இருக்கிறது என்று அடிக்கடி வருகின்ற புகார்களிலிருந்து தெரியவருகிறது. எனவே, சாக்கடை நீரையும், மழை நீரையும் வேறு வகையில் அகற்ற முடியாது என்ற நிலை ஏற்பட்டாலொழிய அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை இருக்கிறது. அதற்கு உதாரணம், ஈரோடு நகராட்சியில் தற்போது நடைபெற்றுக் கொண்டுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டம், நீண்ட நெடு நாட்களாக பல தொல்லைகளுக்கு ஆட்பட்டு, இப்பொழுதுதான் துரிதமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**9—**

**வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்தல்**

***9243*—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம் விவசாயத்தையே முழுவதும், நம்பியிருக்கிற மாவட்டம். விவசாயத் தொழிலையே பெரிதும் செய்து

[1997 அக்டோபர் 14

கொண்டிருக்கிற அந்த மாவட்டத்திலே, ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது என்பது, மிகப் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அது நமது முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டம் என்கிற காரணத்தினாலும், அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பியிருக்கிற பகுதி என்கிற காரணத்தாலும், இது குறித்து மீண்டும் பரிசீலித்து, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை, திருவாரூர் மாவட்டத்திலே அமைக்க அரசு முன்வருமா என்பதையும், அப்படி அமைக்க முன்வருகிறபோது, அதனை மன்னார்குடி பகுதியிலே அமைப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே, வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், ஆடுதுறையில், நெல் ஆராய்ச்சி நிலையமும், தஞ்சையில் நீர் மேலாண்மை பயிற்சி மையமும், வேப்பங்குளத்தில், தென்னை ஆராய்ச்சி நிலையமும் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண் தொழில் நுட்பத்தைக் கிராமங்களிலே எளிதாகப் பரப்பும் நோக்கோடு, பள்ளிகளிலே, வேளாண்மைக் கல்வியை அறிமுகப்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தி அதனையடுத்து, நானும், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், மேலும் சம்பந்தப்பட்ட இரு துறையின் அலுவலர்களும் கலந்து பேசி, 1998-99-ஆம் கல்வியாண்டில், வேளாண் கல்விப் பாடத் திட்டத்தைப் பள்ளியில் அறிமுகப்படுத்த, அதற்கான ஒரு செயல் திட்டத்தை வகுக்க, ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை இந்தக் கேள்வி நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், இந்த மாவட்டத்தின் அருகிலேயுள்ள திருச்சி மாவட்டத்தில், நாவலூர் கொட்டப்பட்டு என்னும் இடத்தில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியும், குமுளூரில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரியும் செயல்பட்டு வரும் நிலையில், திருவாரூர் மாவட்டத்தில் ஒரு வேளாண் கல்லூரியோ, அல்லது வேளாண்மைப் பல்கலைக்கழகமோ அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 14]

10—

## கால்வாயைத் தூர்வாரி சீரமைத்தல்

***6744—டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, மேல்புறம ஊராட்சி ஒன்றியம், திற்பரப்பு வலதுகரைக் கால்வாயை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1998, ஏப்ரல் மாத வாக்கில், பணிகள் தொடங்க அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

**டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திற்பரப்பு வலதுகரைக் கால்வாயில் தூர் எடுக்க நிதி ஒதுக்கீடு செய்திருப்பதற்காக, நான் பொதுப்பணித் துறை அமைச்சருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், திற்பரப்பு நீர்த்தேக்கத்தில், ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. தூர் எடுக்கும்போது, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதோடு, முடுக்கோடு, வெள்ளங்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பழுதடைந்த கால்வாய்களைச் செப்பனிடவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திற்பரப்பு அணைக்கட்டின் வலதுகரை, இடதுகரை கால்வாய்கள், அருவிக்கரையின் இடது, வலது கரை, கால்வாய்கள் ஆகிய நான்கையும் தூர் எடுப்பதற்கு, உலக வங்கி உதவியுடன் ரூ. 63 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியைச் செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் அரசு கவனத்தில் கொண்டு பணியாற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கால்வாயைப் பற்றிக் கேட்பதாக இருந்தால், திரு. டி. மணி கேட்கலாம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளே வருகின்ற திற்பரப்பு வலது கரைக்

கால்வாயை ஒட்டி வருகின்றது அந்தத் திற்பரப்பு நீர்த் தேக்கப் பகுதியில், பெருவாரியாக மணல் எடுக்கப்பட்டு, அதன் காரணமாக அங்கு சேதாரம் அதிகமாகி வருகின்ற ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அதற்குள்ளே மணலை எடுத்து, மிகப் பெரிய அவலத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுபோன்று, அந்த ஒன்றியத்திற்குள்ளே வருகின்ற இன்னொரு கால்வாய் மொய்யாறு இடது கரைக்கால்வாய்; அதைப்போன்று அதையொட்டி வருகின்ற மஞ்சாங்குடி பகுதியிலே வருகின்ற கால்வாய்கள்; இவற்றிற்கெல்லாம் தூர் வாரி 10 வருடங்களுக்கு மேல் ஆகின்றன. அவற்றில் 4 அடி முதல் 6 அடி வரையிலும் மணல் நிரம்பியுள்ளது. அவற்றிலே தண்ணீர் செல்வதில்லை. எனவே, அந்தத் திட்டத்தோடு, இந்தப் பணிகளையும் உட்படுத்தி, அந்தக் கால்வாய்களில் தூர் வாரக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் வாருவதாலும், நீண்ட நாட்களாக தூர் வாராததாலும் தான் பிரச்சினைகள் ஏற்பட்டு ஆறு தூர்ந்து போய் இருப்பதோடு, கரைகள் உடைந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் செப்பனிடுவதற்காகத்தான் ரூ. 63 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. கே. வேணு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**11—**

### வழிநில்லாப் பேருந்துகள் இயக்குதல்

***6380*—திரு. கே. வேணு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, சிப்காட் தொழிற்பேட்டை முதல் சென்னை வரை வழிநில்லாப் பேருந்துகள் *(பாய்ண்ட் டு பாய்ண்ட்)* இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி 'சிப்காட்' தொழிற்பேட்டை வழியாக விழுப்புரம் கோட்டம்-3 போக்குவரத்துக் கழகம் 43 பேருந்துகளை இயக்கி வருகிறது. தினசரி 80 நடைகள்





இயக்கப்படுகின்றன. எனவே, சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி, 'சிப்காட்' தொழிற்பேட்டை வரை வழிநில்லாப் பேருந்துகளை இயக்க சாத்தியம் இல்லை.

**திரு. கே. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி 'சிப்காட்' பகுதியில் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இருப்பதால் அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சென்னையிலிருந்து வருகை தருகிறார்கள். ஆனால் கும்மிடிப்பூண்டி 'சிப்காட்' வளாகத்திற்கென்று எந்தவிதமான பேருந்தும் வருவதில்லை. ஆகையால் முதலமைச்சருடைய அறிவுரைக்கேற்ப, ஒரே நாளில் 112 புதிய பேருந்துகளை விடக்கக்கூடிய இந்த அரசு, சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி வரையிலும் வழிநில்லாப் பேருந்துகளை விட வேண்டும். எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்து பேருந்து விடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிநில்லாப் பேருந்துகளை இயக்குகிறபோது வழியிலே இருப்பவர்கள் எல்லாம் அந்தந்த ஊர்களிலே பேருந்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டு கோரிக்கைகள் வருவதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் நன்கு அறிவார்கள். ஆகவேதான் கூடுமான வரை இந்த P.P. அதாவது Point to Point என்று சொல்லப்படுகிற வழி நில்லாப் பேருந்துகளை இயக்குவதை இந்த அரசு விரும்புவதில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அந்த இடத்திற்குப் பேருந்து இல்லாமல் இருக்குமானால் புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசு முயற்சிக்கும். ஆனால் அதுவழிநில்லாப் பேருந்துகளாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**12—**

### IMPROVEMENT OF BORDER HIGHWAYS ROADS

***6522—Thiru. B. VENKATASAMY:**

Will the Hon. The Minister for Transport be pleased to state:

(a) Whether there is any proposal to improve the border Highways Roads, (a) Bagalore to Malur Road, Bagalore to Bángalore Road upto Surjapoor, Poonapalle to Anekal Road, Gumpalapuram to Anekal Road and Thaggatty to Unirinepally of Karnataka; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள மாநிலச் சாலைகளை மேம்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை எழுத்து மூலமான என்று பதிலில் கூறப்பட்டிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள பாகலூர் என்ற கிராமம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அதற்குரிய சாலை வசதிகள் இந்த ஆண்டு செய்து தரப்படும்.

**Thiru B. VENKATASAMY**: Hon. Speaker Sir, I have already told that the border roads of our State near Karnataka are in a badly damaged condition. For example, Bangalore to Malur. Bagalore to Surjapoor. Poonapalle to Anekal Road. Thaggatty to Unirinepally. All these roads are in a badly damaged condition. Even a cart cannot go in these roads. All the people from Karnataka State who first enter into our State would get bad impression on seeing these damaged border roads. Four or five kilometre roads are in a badly damaged condition. I request the Hon Minister to depute specially one Engineer or somebody to see that these defects are rectified; otherwise the prestige of Tamil Nadu will be in a great danger. May I request the Hon. Minister to examine this and see that the border roads are repaired urgently.

**Hon. SPEAKER:** Have you understood the reply? Have you followed the Hon. Minister's reply to the main question?

**Thiru B. VENKATASAMY**: In Bangalore road, they are doing some work. But the other roads are still in a badly damaged condition.

**Hon. SPEAKER:** That must be acknowledged by you. You need not talk about other roads. Sit down. Hon. Transport Minister.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்தச் சாலையைத் தவிர, மற்ற சாலைப் பணிகளைச் செய்வதற்குத் தனியாகப் . பொறியாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. இருக்கிற பொறியாளர்களை வைத்தே அது மிகவும் மோசமடைந்திருக்குமானால்—ஏனென்றால் சில பகுதிகளில் 1996-97-ல் கூட பணிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்தப் பணிகள் எல்லாம் அதாவது 1995-96-ல் செய்த பணிகள் எல்லாம் சரியாக இல்லாமல் இருக்குமானால் அவற்றை ஆய்வு செய்து வருகிற நபார்டு



திட்டத்தின்கீழே அவைகளை எடுத்துக் கொள்ள இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. துரை. சந்திரசேகரன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**13—**

## கல்லூரிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்

***559*—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசர் கல்லூரிக்குப் புதிய கட்டிடம் கட்டும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவையாறு அரசர் கல்லூரிக்குத் தனியே கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது நிலுவையில் இல்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமீபத்தில் புதிய இசைக் கல்லூரியை அந்த வளாகத்தில் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்த இசைக் கல்லூரி சத்திர நிர்வாகத்தின்கீழ் 10,000 ரூபாய் வாடகை செலுத்தி குறுகிய 2 அறைகளில் நடைபெற்று வருகின்றது. இசைக் கல்லூரிக்காகச் சத்திர நிர்வாகத்தில் 16 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வாங்கப் படாமல் அப்படியே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியினுடைய அனைத்து நிலையையும் நன்கு அறிவார்கள். எனவே வருகிற ஆண்டிலாவது அதற்கென நிதி ஒதுக்கப்பட்டு புதிய கட்டிடம் அமைத்துத் தருவார்கள் என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 14

முற்பகல் 10-25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி ஏற்கெனவே 1980-ல் 20.85 ஏக்கர் நிலம் இதற்காகக் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலே பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது போக இசைக்கல்லூரிகளுக்காக 13 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இடத்தைப் பொறுத்தவரையில் சிக்கல் இல்லை. இப்போது வடமொழியும் தமிழ் மொழியும் சேர்ந்த இசைக் கல்லூரிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு தமிழ் இசைக் கல்லூரி என்று அரசால் தனியாக இயக்கப்படுகிறது. 1996-ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவின் 2-எப் என்ற திட்டத்தின்கீழ் இது இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே கட்டிடம் கட்டுவதற்கான 25 லட்ச ரூபாயைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே இது உறுதியாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. செங்கை சிவம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**14—**

### தனிநபர் நகைக்கடன் அளவை உயர்த்துதல்

***9204—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் தனிநபர் நகைக் கடன் அளவை உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனி நபர் நகைக் கடன் 50 ஆயிரம் ரூபாய் வரையிலே



1997 அக்டோபர் 14]

வழங்கப்பட்டுவருகிறது. தனியார் நிறுவனங்களால் பொது மக்களுடைய பணம் பல கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்ட காரணத்தால் மக்கள் கூட்டுறவு வங்கிகளை நாடி வந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சென்னையில், 'மைலாப்பூர் பெனிபிட் பண்ட்', 'புரசைவாக்கம் பெனிபிட் பண்ட்' போன்றவை அதிகபட்சமாக 2 லட்ச ரூபாய் வரையிலே நகைக் கடன் வழங்கி நல்லமுறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், நகைக்கு ஈடாகத்தான் இந்தக் கடன் வழங்கப்படுகிறது. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து நகைக்கடன் ரூ.50 ஆயிரம் என்பதை பொதுமக்கள் நன்மை பெறும் வண்ணம் 2 லட்சம் ரூபாயாக உயர்த்தித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1994-ஆம் ஆண்டுவரை தனி நபர் நகைக் கடன் உச்சவரம்பு 25 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருந்தது. 1996-ல் அது 40 ஆயிரம் ரூபாய் என்று ஆனதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-ஆம் முறையாக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, அந்த உச்சவரம்பை 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அனைத்துப் பிரிவினரும், நலிவுற்ற பிரிவினரும் பயன்படுகிற அளவில் உச்சவரம்பை நிர்ணயித்திருக்கிறோம். கூட்டுறவு வங்கிகள் உச்சவரம்பை உயர்த்தினால் ஒரு சாரார் மட்டுமே பயன்பெற முடியும். அனைத்து மக்களுக்கும் அந்தப் பயன்கள் போய்ச் சேராது என்ற காரணத்தால்தான் உச்சவரம்பை 50 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்:

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் நகைகளை அடகு வைக்கிறார்கள். ஆனால் பல்வேறு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டக வசதி இல்லாத நிலை இருக்கிறது. எனவே, ஒவ்வொரு கூட்டுறவு வங்கியிலும் அவசரமாக, அவசியமாக பாதுகாப்புப் பெட்டகம் வைக்க அரசு உத்தரவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சட்டமன்றத்தில் அறிவித்தபடி 1800-க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகம், கிரில் வசதி, மற்றும் 'ஸ்ட்ராங் ரூம்' கட்டுவதற்குரிய

அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சிகளை 5 ஆண்டு காலத்திலே நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகைக் கடன் உச்சவரம்பை 2 லட்ச ரூபாய் என்று கொடுக்காவிட்டாலும்கூட - நகைக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. பணம் கட்டாமல் போனால் நீங்கள் ஏலம் போட்டுக் கொள்ளலாம்- குறைந்தபட்சம் ஒரு லட்ச ரூபாய் வரையிலாவது அந்தக் கடன் கொடுக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழகம் முழுவதும் 2,500 கோடி ரூபாய் வரை நகைக்கடன் வழங்க உத்தரவிடப்பட்டது. இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3,000 கோடி ரூபாய் வரையில் நகைக்கடன் வழங்கலாம் என்ற அனுமதியை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஆலோசித்த பிறகு, முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

15—

## இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவங்குதல்

***4934—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் புதியதாக இ.எஸ்.ஐ. மருத்துவமனை துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.



**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் பகுதி, தீப்பெட்டி, பீடி, நூற்பாலைகள் போன்றவற்றில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அங்கே இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒரு சிறிய வாடகை அறையிலே இருக்கிறது. 5,000 தொழிலாளர்கள் வரக்கூடிய அங்கே ஒரு படுக்கை வசதிகூட இல்லை. அங்கே இ.எஸ்.ஐ. மருத்துவமனைக் கட்டிடம் கட்ட இந்து அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்ட சர்வே எண் 417-ல் உள்ள 1.74 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒப்புதல் கொடுக்கப்பட்டும் இதுவரை எந்தவித செயல்பாடும் இல்லாமல் உள்ளது. எனவே, இந்து அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்ட அந்த இடத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே அங்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை இயங்கி வருகிறது. இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். ரூ. 4,900-ல் வாடகைக் கட்டிடத்திலே அது இயங்கி வருகிறது. வேறு ஒரு புதிய இ.எஸ்.ஐ. மருத்துவமனை குடியாத்தத்திற்குத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது. காரணம் இந்த இ.எஸ்.ஐ. மருத்துவமனை மட்டுமல்லாமல் குடியாத்தத்திலே அரசு மருத்துவமனை இருக்கிறது. வேலூரிலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை இருக்கிறது. அது மட்டுமல்லாமல் மேல்விசாரம், ஆற்காடு போன்ற பகுதிகளிலேயும் இருக்கிறது. இராணிப்பேட்டையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சொந்தக் கட்டிடங்களைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தினை பரிசீலித்து, நிதிநிலைக்கு ஏற்ப வாடகைக் கட்டிடங்களிலிருந்து மாற்றி புதிய கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

16—

**விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை இயங்கச் செய்தல்**

***1323—திரு. கே.ஆர். இராமசாமி:***

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஓரியூரிலுள்ள அரசுக்குச் சொந்தமான 49 தறிகளுடன் கூடிய விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். இராமநாதபுரம் மாவட்டம் ஓரியூர் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 20-2-1992 முதல் செயல்படவில்லை.

(ஆ) இச்சங்கத்திற்கு புத்துயிர் ஊட்டி செயல்படுத்த சங்கத்தின் உறுப்பினர்கள் ஆர்வம் காட்டாததால் இச்சங்கத்தை மீண்டும் செயல்படுத்த இயலாத நிலையில், சங்கம் 1992-ஆம் ஆண்டு ஜூன் மாதம் கலைக்கப்பட்டது.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசைத்தறியை நம்பி பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய இந்தச் சங்கத்தினைச் சார்ந்தவர்கள் இப்போது அதனை நல்ல முறையிலே நடத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள். எனவே, அரசு இதனை மறுபரிசீலனை செய்து அந்த விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் இயங்கிடச் செய்வதற்கு ஆவன செய்ய முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-6-1992-ல் அதை மீண்டும் புதுப்பிக்க பொதுப் பேரவை கூட்டப்பட்டது. ஆனால், 111 உறுப்பினர்களில் 4 உறுப்பினர்கள் மட்டும் வந்த காரணத்தினால் வேறு வழியின்றித்தான் இந்த விசைத்தறிச் சங்கத்தினை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்றைக்கு பொதுப்படையாக ஏற்றுமதியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, தமிழகம் முழுவதும் விசைத்தறிக்கு மிகப்பெரிய சுணக்கம் இருக்கிற



படியால் அனைத்துத் தரப்பினருமே விசைத்தறிச் சங்கத்தையும் கூட்டுறவுச் சங்கமாக ஆக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். எனவே, வெளியிடங்களிலே செய்யும் உற்பத்தியினை முறையாக விற்பதற்குரிய வாய்ப்பினை உருவாக்கிக் கொண்டு, எப்படி எதிர்காலத்திலே விசைத்தறிச் சங்கங்களை உருவாக்குவது என்று நாங்கள் முடிவு எடுக்க இருக்கிறோம்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மார்க்கெட்டை ஏன் அரசே செய்து கொடுக்கக்கூடாது? அதிலே வேலை செய்கின்ற நூற்றுக்கணக்கான தொழிலாளிகளும் அவர்களது குடும்பங்களும் இன்று மிக மிக நலிவுற்று வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதனை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, வியாபாரம் செய்யக்கூடிய பொறுப்பினை அரசாங்கமே ஏற்று அந்த விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்தை உடனடியாக இயங்கிடச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறையிலே இருக்கின்ற விசைத்தறிச் சங்கங்களுக்குத் தேவையான உற்பத்தி வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது தமிழகம் முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற சுணக்கத்தினை நீக்குவதற்குத் தனியாக ஒரு சிறு முயற்சி மூலம் இதனைச் செய்ய இயலாது. பாதுகாப்புத் துறை அமைச்சரையெல்லாம் சந்தித்து இப்போது இது குறித்துப் பேசி வருகிறோம். அவர்களிடமிருந்து பெருமளவில் நாங்கள் ஏதாவது உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றால் நிச்சயமாக இந்தச் சங்கங்களையெல்லாம் மீண்டும் புதுப்பிக்கின்ற பணியிலே இந்த அரசு ஈடுபட்டு அதற்கான முயற்சி செய்யும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

17—

**வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலம் வாங்குதல்**

***4727—திரு. இரா. மணிமாறன்:***

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

வீட்டுவசதி வாரியம், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனியாரிடம் நிலம் வாங்குவதில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வீட்டு வசதி வாரியம் மற்றும் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் தனியாரிடம் நிலம் வாங்குவதில் முறைகேடுகள் ஏற்படுமாயின் அதைத் தடுக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 10-35*

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியங்களுக்கு நிலத்தினை விற்கின்றபோது நிலவுடைமைதாரர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிறார்கள். தாங்கள் விற்கக்கூடிய நிலத்தினுடைய சர்வே எண்ணின் ஒரு பகுதியை அதிக விலைக்கு விற்றதாக பத்திரப் பதிவு செய்து கொண்டு, அதையே காரணம் காட்டி, அரசு அதிகாரிகளின் பரிந்துரைகளோடு கோடிக்கணக்கான அளவில் அரசாங்கத்தின் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து-குழு ஒன்று அமைத்தோ அல்லது வேறு விதமாகவோ-அரசாங்கப் பணத்தை கொள்ளையடிப்பதைத் தடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிலங்களை வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே மாவட்டத்திலே ஒரு குழுவும், அதைப்போல மாநில அளவில் சி.எல்.ஏ. அவர்கள் தலைமையிலே ஒரு குழுவும் இயங்கி வருகின்றன. ஆகவே அங்கே முறைகேடுகள் ஏற்படுவதற்கு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**18—**

## தொழிற்பேட்டை அமைத்தல்

***8014*—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 14]

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர், கிருஷ்ணராயபுரம், வெள்ளியணைப் பகுதிகளில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கடவூர், கிருஷ்ணராயபுரம், வெள்ளியணை பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கத் திட்டம் ஏதுமில்லை.

**திரு. ச. நாகரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியிலே, மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே, கடவூர் பகுதியிலே, வெள்ளியணைப் பகுதியிலே, கிருஷ்ணராயபுரம் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் அதிகமாக கரூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற டெக்ஸ்டைல்ஸ்களில், ஸ்பின்னிங் மில்களில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; தறி போன்ற வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதி மக்கள் எல்லாம் இன்றைக்கு தனிப்பட்ட முறையிலே தொழில் தொடங்கும் அளவுக்கு வாய்ப்புகள் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்குத் தொடங்கும் அளவுக்கு வாய்ப்புகள் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்குக் கரூரில் தொழில் நடத்துவது என்றால், வாடகைக் கட்டிடத்தில்தான் நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கரூர் பகுதியிலே வாடகைக்கு இடம் கிடைப்பது என்பது சாதாரண காரியம் அல்ல என்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக இந்த மூன்று பகுதிகளிலே அரசின் சார்பாக தொழிற்பேட்டைகள் அமைத்தால், அரசின் பல சலுகைகளை அந்தப் பகுதி மக்கள் எல்லாம் பெற்று, தனியாகத் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே அந்தப் பகுதிகளிலே தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல ஆர்வம் உள்ளவர்கள் முன்வந்தால், எதிர்காலத்தில் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 19, திரு. ஆர். ஆர். சேகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[1997 அக்டோபர் 14

19—

## குழந்தைகள் நலத் திட்டப் பணிகள்

***4370*—திரு. ஆர்.ஆர். சேகரன் :**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் செயல்படுத்தப்படுகின்றன?

(ஆ) நடப்பு ஆண்டில் அதன் இலக்குகள் எவ்வளவு?

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

குழந்தைகள் ஒரு நாட்டின் நாளைய எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள். ஆதலினால் சமீப காலமாக உருவாக்கப்படும் அரசுக் கொள்கைகள் மனிதவள மேம்பாட்டில் குறிப்பிடத்தக்கதொரு கவனத்தைச் செலுத்துகின்றன. குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஊட்டச்சத்து மிக்க உணவு, நோய்த் தடுப்பு, சுத்தமான சூழல், அடிப்படைக் கல்வி, அரவணைப்பு மற்றும் குறிப்பாக சமூகத்தில் மிகவும் ஒதுக்கித் தள்ளப்பட்டு பாதுகாப்பிற்கு வழி ஏதுமின்றித் தவிக்கும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டதுதான் தமிழ்நாடு அரசு குழந்தைகள் நல ஒட்டுமொத்தத் திட்டம் (15 அம்ச திட்டம்).

**இத்திட்டத்தின் நோக்கம்:-**

குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய 5 ஆண்டு தொடக்கக் கல்வி வலியுறுத்தப்பட்டுள்ளது. (அம்சம் 8), தாய்-சேய் நல நிலையை மேம்படுத்துதல் (அம்சம் 1 முதல் 6 வரை), திருமண வயதை 21 ஆக அதிகரித்தல் மற்றும் ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்குமாக குறைந்தபட்ச 3 வருட இடைவெளியை வலியுறுத்தல் (அம்சம் 7), குழந்தைத் தொழிலாளர் இல்லாத நிலையை உருவாக்குதல் (அம்சம் 11) பெண் சிசுவதையை முழுமையாக ஒழித்தல் (அம்சம் 13), எழுத்தறிவு மற்றும் பகுத்தறிவை உயர்த்துதல் (அம்சம் 9), குடிநீர் வசதியை மேம்படுத்துவதுடன் துப்புரவு வசதி மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்தை விரிவுபடுத்துதல் (அம்சம் 10), சீரிய முக்கியத்துவம் கொடுத்து



1997 அக்டோபர் 14]

குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனங்களைத் தடுக்கவும் சிகிச்சை அளிக்கவும் மற்றும் மறுவாழ்வு அளிக்கவும் ஆவன செய்தல் (அம்சம் 14, 15), பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தல் (அம்சம் 12) ஆகியவை 15 அம்ச திட்டத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும்.

**சேலம் மாவட்டத்தில் 15 அம்ச திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளும் நடப்பு ஆண்டில் அதன் இலக்குகளும் கீழே விரிவாகத் தரப்பட்டுள்ளன :-**

| அம்ச எண். (1) | திட்ட செயல்பாட்டின் பெயர். (2) | 1996-98-ம் ஆண்டிற்கான இலக்குகள் (3) |
|---|---|---|
| 1. | குழந்தைகளின் சராசரி பிறப்பு எடையை 3 கிலோவாக உயர்த்துதல் | குழந்தைகளின் சராசரி பிறப்பு எடையை 2.9 கிலோவிற்கும் சற்று அதிகமாக உயர்த்துதல் |
| 2. | தடுப்பு ஊசி முறைகளால் உயிர்க்கொல்லி நோய்களைத் தவிர்த்தல்: | |
| | அ. இளம்பிள்ளை வாதத்தை முழுமையாக தவிர்த்தல் | தற்போதைய நிலையை பராமரித்தல் |
| | ஆ. வில்வாத ஜன்னியை முழுமையாக தவிர்த்தல் | 100% சாதனை. அதனைத் தொடர்ந்து பராமரித்தல் |
| | இ. தட்டம்மை முழுமையாக தவிர்த்தல் | 95% தட்டம்மை மரணங்கள் குறைந்துள்ளது. அதனை தொடர்ந்து பராமரித்தல். |
| 3. | சிசு மரண விகிதத்தினை 30/1,000-க்கும் கீழ் குறைத்தல்: | 3. சிசு மரண விகிதத்தை 30/1000-க்கும் கீழ் குறைத்தல் |
| | அ. வயிற்றுப்போக்கு மூலம் ஏற்படும் மரணங்களை முழுமையாகத் தவிர்த்தல் | வயிற்றுப்போக்கு மரணங்கள் 60% குறைத்தல் |
| | ஆ. மூச்சுத் திணறல் மூலம் ஏற்படும் மரணங்கள் முழுமையாகத் தவிர்த்தல். | மூச்சுத் திணறல் மரணங்கள் 60% குறைத்தல் |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. | குழந்தைகளுக்கிடையே காணப்படும் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச் சத்து குறைபாடுகளைக் குறைத்தல் | கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுகளை 5%-த்திற்கு குறைவாகவும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுகளை 20%-த்திற்கு குறைவாகவும் குறைத்தல் |
| 5. | நுண்ணிய ஊட்டச்சத்து குறைபாடுகளை முழுமையாக நீக்குதல் | |
| அ. | வைட்டமின் ஏ-யின் குறைபாடுகளை முற்றிலும் நீக்குதல் | ஏ-வைட்டமின் குறைபாட்டினை தவிர்த்தல் |
| ஆ. | அயோடின் சத்தின் குறைபாடு முற்றிலும் நீக்குதல் | 90% சாதனை பெறுதல் |
| இ. | இரும்புச் சத்தின் குறைபாடு முற்றிலும் நீக்குதல் | 1990-ம் ஆண்டில் இருந்த நிலையில் 20% குறைத்தல் |
| 6.* | அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு மையங்களை "குழந்தை நட்பு" மையங்களாக மாற்றுதல் | அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு மையங்களை குழந்தைகள் நட்பு நிலையங்களாக மாற்றுதல் |
| 7. | சிறு வயது மற்றும் இடைவெளியற்ற கர்ப்பம் தரிப்பதிலிருந்து பெண்களை விடுவித்தல் | |
| அ. | பெண்ணுக்கேற்ற திருமண வயது 21 என்பதை மக்களிடையே வெகுவாகப் பரப்புதல் | 100% சாதனை 2000-ம் ஆண்டிற்குள் பெறுதல் |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| ஆ. | ஒரு குழந்தைக்கும் அடுத் குழந்தைக்கும் குறைந்தது 3 ஆண்டுகளாவது இடைவெளி இருக்க வேண்டும் | பிறப்பு விகிதத்தை 16/1000-க்குக் குறைத்தல். குறைந்தபட்ச பிறப்பு இடைவெளி 3 வருடங்கள் என உறுதி படுத்துதல் |
| 8. | அனைவருக்கும் தொடக்கக் கல்வி | 1. 6-11 வயதுள்ள அனைவரையும் முறைப்படியான பள்ளிகளில் சேர்த்தல். 5-ஆம் வகுப்பு வரை தங்கி படித்திடச் செய்தல்<br>2. 14 வயது வரையுள்ள பள்ளி செல்லாத அனைவருக்கும் முறைசாராக் கல்வி கற்பிக்க சேர்த்தல்<br>3. பள்ளி செல்லாமல் இடையில் நிறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கையை 1990-ன் நிலவரப்படி 75% குறைத்தல் |
| 9. | பெண்களின் கல்வி மற்றும் நிலையினை உயர்த்துதல் | 90% கற்பிக்கச் செய்து சாதனை பெறுதல் |
| 10. | பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் மற்றும் துப்பரவு வசதிகள் அனைத்து குழந்தை நல மையங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குக் கிடைக்க வழி வகுத்தல் | 100% சாதனையை அடைதல் |
| 11. | குழந்தைத் தொழிலாளர்கள் நிலைமையை ஒழித்தல் | 1. 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலைகளிலிருந்தும் திரும்பப் பெறுதல்<br>2. அனைத்து குழந்தை அடிமைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் |

| (1). | (2) | (3) |
|---|---|---|
| 12. | பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைப் பரப்புவது மற்றும் பெண் குழந்தை தகுதியை உயர்த்துவது. | இத்திட்டம் செயல்படுத்தப் படுவதில் உள்ள இடையூறுகளை அகற்றி 100% சாதனை புரிதல் |
| 13. | சமுதாயக் கொடுமையான பெண் சிசு அழித்தலை தமிழ்நாட்டில் ஒழித்தல் | இதை முற்றிலும் ஒழிப்பது |
| 14. | குழந்தைப் பருவ ஊனம் தடுப்பது மற்றும் மறுவாழ்வு வசதிகளை விரைவில் கண்டுபிடித்தல் | 100% சாதனை 2000-ம் ஆண்டிற்குள் பெறுதல் |
| 15. | பிறவி இதய நோய் மற்றும் இருதய அறுவை சிகிச்சையினை அடையாளம் காணுதல் | குழந்தைப் பருவ இதய நோய் முற்றிலும் நீக்கப்பட்ட முதல் மாநிலமாகத் தமிழகத்தை இருக்கச் செய்தல் |

**திரு. ஆர்.ஆர். சேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கைக்கு நன்றி. இதிலே 11 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 5-ஆம் வகுப்பு வரை தொடக்கக் கல்வி கட்டாயமாக வழங்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவ்வாறு துவக்கப் பள்ளிகளிலே குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா, அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கான வாய்ப்பு, அந்தக் குழந்தைகளுடைய பெற்றோரில் ஒருவர் இல்லை என்றால், அந்தக் குழந்தைகளைச் சேவை இல்லங்களில், அனாதை இல்லங்களில் சேர்க்கலாம். அவற்றிலே அந்தக் குழந்தைகள் தங்கிப் படிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



**20—**

### விடுதிகள் மற்றும் உணவகங்கள்

***3404—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு மத்திய-மாநில அரசு உதவியுடன் தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு மத்திய-மாநில அரசு உதவியுடன் தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு கேள்வி வந்தது. அப்போது, திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு மத்திய-மாநில அரசு உதவியுடன் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொன்னார்கள். இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே மத்திய அரசு, பயணிகள் தங்குவதற்கு, ஓட்டல்கள் அமைப்பதற்காக நிறைய நிதியை சுற்றுலாத் துறையை ஒதுக்கியிருக்கிறது. ஆகவே, மீண்டும் மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்தி, மாநில அரசு நிதி உதவியுடனும், மத்திய அரசு நிதி உதவியுடனும், உணவகங்கள், தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தின் தலைநகரில் ஒரு சுற்றுலா விடுதி கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு, விருதுநகரில் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தின் அருகில் ஒரு சுற்றுலா விடுதி கட்டப்பட்டு, முடிக்கும் தருவாயில் இருக்கின்ற காரணத்தால்,

[1997 அக்டோபர் 14

திருவில்லிபுத்தூரில் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் டவுனில் சொல்லவில்லை. பிளவக்கல் அணைப் பகுதிதான் சுற்றுலா, மாவட்ட டூரிஸ்ட் சென்டராக இருக்கிறது. அதனாலே, அதை அங்கே கட்ட வேண்டும் என்றுதான் சொல்கிறேனே தவிர, திருவில்லிபுத்தூர் டவுனில் சொல்லவில்லை. அதுமட்டுமல்லாமல் பிளவக்கல் பகுதி ஒரு அணைப் பகுதி. அங்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து அதை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளவக்கல் அணையில் சுவர் பூங்கா, ஓய்வறை, நடைபாதை போன்ற வசதிகளுக்காக 1 லட்சத்து 99 ஆயிரத்து 71 ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. அதைப் போன்று அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் உள்ள பில்லூரர் சந்தை அணைக்கு அருகில் 3 லட்சம் ரூபாய் செலவில் சிறுவர் விளையாட்டு சாதனங்கள், அமரும் பலகைகள், குடிநீர், கழிப்பறை, பூங்கா ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

## (ஆ.) உடுக்குறியிடாத வினாக்கள்

### (முதலாவது பட்டியல்)

1—

### நில எடுப்புப் பணிகள்

**வினா 1745—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether there is any proposal to acquire land adjacent to SIPCOT Industrial complex, Hosur phase II ?

(b) If so, when it will be acquired ?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏற்கெனவே சிப்காட் நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ள இரண்டாம் கட்டத் தொழில் வளாகத்தின் அருகில் ஒசூர் வட்டம், மாரணப்பள்ளி எனும் கிராமத்தில் 51,88.00 ஹெக்டேர் பரப்பளவில் பட்டா நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான நில எடுப்புப் பணிகள் நடந்து வருகின்றன. ஒரு குழுவின் மூலம் நேரடிப் பேச்சு வார்த்தையில் இயன்ற வரையில் இந்நிலங்களை வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

2—

### முதுநிலை பட்டதாரி ஆங்கில ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்

**வினா 2264—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதுநிலை (P.G.) பட்டதாரி ஆங்கில ஆசிரியர் பணியிடம் நிரப்பப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

காலியாக இருந்த இப்பணியிடம் 22-11-1996 அன்று நிரப்பப்பட்டுள்ளது.

3—

### விளையாட்டுத் துறையில் புதிய திட்டம்

**வினா 5673—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டுத் துறையில் தமிழகம் முதலிடம் வகிக்க புதிய திட்டத்தினை அரசு வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): பரிசீலனையில் உள்ளது. விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

விளையாட்டுத் துறையில் தமிழகம், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விளையாட்டுக்களின் அடிப்படையில் சிறந்த முறையில் திகழ்ந்து வருகிறது.

2. 8-2-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில், திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதற் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன :

(அ) மாவட்ட அளவிலான திறந்த வெளி விளையாட்டு அரங்கம் இன்னும் மீதமுள்ள 12 மாவட்டத் தலைநகரங்களில் கட்டுதல்.

(ஆ) மாவட்டங்களில் நீச்சல் குளம் கட்டுதல்.

(இ) மாநகராட்சி நகரங்களில் உள் விளையாட்டரங்கு கட்டுதல்.

(ஈ) கூடுதல் ஊரக விளையாட்டு மையங்கள் அமைத்தல்.

(உ) பொங்கல் விளையாட்டு-தினம் ஒரு விளையாட்டினை மீண்டும் நடத்துதல்.

(ஊ) விளையாட்டு வளர்ச்சிக்கு ஒரு நிதியம் அமைத்தல்.

(எ) தற்போதுள்ள விளையாட்டு வசதிகளை மேம்படுத்துதல்.

(ஏ) பின்னர் எழும் வேறு திட்டங்களைச் செயற்படுத்துதல்.

3. மேலும், சென்னையைத் தவிர்த்து, மாநிலத்தின் மற்ற நகராட்சி நகரங்களில் நவீன விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தி, அவைகளையும் விளையாட்டுத் தலைநகரங்களாகவும், மாவட்டங்களிலுள்ள விளையாட்டு ஆர்வலர்களைக் கொண்ட மாவட்ட விளையாட்டு ஆலோசனைக் குழுக்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



இம்மாநிலத்தில் விளையாடப்படும் பல்வேறு விளையாட்டுக்களை வரிசைப்படுத்தி அவைகளை மேம்படுத்த திட்டம் வகுக்கவும் செயற்குழுவுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கான ஒரு பொது நிதியம் ரூ. 10 கோடி மதிப்பில் ஏற்படுத்தவும், 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் உள்ள பள்ளி-கல்லூரி மாணாக்கர்களிலும் மாணாக்கரல்லாதோரிலும் விளையாட்டுக்களில் சிறந்து விளங்குவோரின் 100 நபர்களுக்கு அரசின் உதவித் தொகை வழங்கவும், மேலும் 100 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு புரவலர்களின் நிதி உதவியுடன் விளையாட்டு உதவித் தொகை வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. சென்னையில் உள்ள 5 நவீன விளையாட்டரங்கங்கள் மற்றும் நீச்சல் குளத்தைப் பராமரிக்க சென்னை மாநகராட்சி, விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படவுள்ளது. மாவட்டங்களிலுள்ள விளையாட்டு அரங்குகளைப் பராமரிக்க விளையாட்டு அரங்குகளின் வருமானத்தில் 40 விழுக்காடு நிதியை ஒருங்கிணைத்து ஒரு தனி நிதியம் அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான ஆண்டு விளையாட்டு விழாவினை (முந்தைய பொங்கல் விளையாட்டு விழாவினைப் போல்) மீண்டும் கொணர்ந்து 50-வது சுதந்திர தின விழாவின்போது இதனை சிறப்பாக நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் உலக அளவிலான கையுந்துப் பந்து (Volley ball) வளர்ச்சி மையம் அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அனைத்து விளையாட்டுச் சங்கங்களின் அலுவலகங்களை மையப்படுத்தி அவைகளுக்கு நேரு விளையாட்டு அரங்கின் இடவசதியைப் பொறுத்து, அவற்றிற்கு இடமளிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

4. மேற்கண்ட முடிவுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழகம் விளையாட்டுத் துறையில் முதலிடம் வகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4—

**ஓர் ஆசிரியர் ஆரம்பப் பள்ளி**

**வினா 6642—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) பள்ளி மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவ்விடங்களில் ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் உள்ள எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும் தலா இரண்டு ஓராசிரியர் பள்ளி வீதம் நான்கு ஓராசிரியர் பள்ளிகள் உள்ளன.

(ஆ) மேற்குறிப்பிட்ட நான்கு ஓராசிரியர் பள்ளிகளுக்கும் மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் பணியிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பகுதி 2 திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் பணியிடங்களிலிருந்து மேற்படி பள்ளிகளுக்கும் முன்னுரிமைப்படி பணியிடங்கள் அனுமதிக்கப்படும்.

5—

**தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்**

**வினா 6648—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி மகளிர் அரசு மேல் நிலைப்பள்ளியில் தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்காலியிடத்தில் புதிய ஆசிரியரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ)மற்றும்(ஆ): வினாவில் குறிப்பிட்ட தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் தற்போது நிரப்பப்பட்டு விட்டது.



1997 அக்டோபர் 14]

6—

**கொடி நாள் மூலம் வசூலான தொகை விவரம்**

**வினா 8461—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடி நாள் மூலம் (Flag Day) 1996-1997 ஆம் ஆண்டு வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகையினை மேலும் கூடுதலாக வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1995-ம் ஆண்டு கொடி நாள் நிதியென்பது 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ம் நாள் முதல் 1996-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6-ம் நாள் வரை வசூலிக்கபபடும் தொகையாகும். 1996-97-ம் ஆண்டு வசூல் என்பது 1996-ம் ஆண்டு டிசம்பர் 7-ல் இருந்து 1997-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் தேதிவரை வசூலாகும் தொகையாகும். 1995-ம் ஆண்டுக்கான கொடிநாள் நிதி இலக்கு ரூ. 2.88 கோடி, வசூலான தொகை ரூ. 3.03 கோடி.

(ஆ) 1996-ம் ஆண்டு கொடி நாள் நிதியாக வசூல் செய்திட 1995-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலாக 10 விழுக்காடு வசூலிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு 1996-ம் ஆண்டு கொடி நாள் நிதி ரூ.3.17 கோடியாக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாநகராட்சிகளுக்குக் கொடி நாள் நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1996-ம் ஆண்டு கொடி நாள் நிதி இலக்கு வருகின்ற டிசம்பர் திங்கள் 7-ம் நாளுக்கு முன் எய்தப்படும்.

7—

**விளையாட்டுத் துறை மார்க்கர்களை முழுநேர ஊழியர்களாக்குதல்**

**வினா 8583—திரு. இரா. மதிவாணன் மற்றும் திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

பள்ளிகளில் பகுதி நேர ஊழியர்களாகப் பணியாற்றும் விளையாட்டுத் துறை மார்க்கர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை. (அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல)

8—

**தாய்சேய் மருத்துவமனையைப் புனரமைத்தல்**

**வினா 3713—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி அரசினர் தாய்சேய் மருத்துவமனையைப் புனரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி அரசினர் தாய்சேய் மருத்துவமனையைப் புனரமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

9—

**230 கி. வாட் துணை மின் நிலையமாக மாற்றுதல்**

**வினா 6489—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரன் அழகுமுத்து மாவட்டம் சேடப்பட்டி தொகுதி, எழுமலை 110 கி.வாட் துணை மின் நிலையத்தை 230 கி.வாட், துணை மின் நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

10—

**110 மெகாவாட் மின்மாற்றியை இயக்குதல்**

**வினா 7240—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, கரட்டுப் பாளையம் கிராமத்தில் உள்ள வெட்டையம்பாளையத்தில் அமைக்கப்பட்டு இயங்காமல் உள்ள 110 மெகாவாட் மின்மாற்றியை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெட்டையம்பாளையம், 110/11 கி. வோல்ட் துணை மின் நிலையத்தில் 10 எம். வி. ஏ., மின்மாற்றி 1997 ஆம் ஆண்டு 'மே, மாதத்திற்குள் நிறுவப்பட்டு 'ஜுன்' மாதம் இயக்கி வைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

11—

**புதிய மயக்கவியல் கருவி வழங்குதல்**

**வினா 7257—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கிலுள்ள பழுதடைந்துள்ள மயக்கவியல் கருவிக்குப் பதிலாக புதிய கருவி ஒன்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனை அறுவை அரங்கிலுள்ள மயக்கவியல் மருத்துவக்கருவி பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்லமுறையில் இயங்குவதால், புதிய கருவி வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**12—**

### மின் இணைப்பு வழங்குதல்

**வினா 7579—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வள்ளிபுரம் ஊராட்சி, பெத்தாம்பாளையம் கிராமத்தில் காற்றழுத்த மின் மோட்டார் பொருத்தி ஓராண்டாகியும் மின் இணைப்பு வழங்கப்படாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் வள்ளிபுரம் ஊராட்சி, பெத்தாம்பாளையம் கிராமத்திலுள்ள 10 குதிரைத் திறன் மின் சுமையுள்ள மேல் நிலை குடிநீர்த் தொட்டிக்கு 12-4-1997 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.



D V211,31'N97 N97.37-2

1997 அக்டோபர் 14]

**13—**

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம்

**வினா 7642—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செந்துறையில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதியதாகக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1995-96 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் 70 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியது. இதில் செந்துறை ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும். செந்துறை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிட கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்புகள், மின் சாதனம், கழிவறை வசதி பணிகள் நிலுவையில் உள்ளன. கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும். கட்டிடப் பணிகள் முடிவடைந்தவுடன் புதிய கட்டிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படும்.

**14—**

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம்

**வினா 7707—திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

218442
சென்னை-600 005.

[1997 அக்டோபர் 14

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) 1996-97 ஆம் ஆண்டு பகுதி உ திட்டத்தில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதில் கடம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும்.

(ஆ) கடம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடம் அரசு புறம்போக்கு நிலமாகும். இந்நிலத்தை மாற்றம் செய்து ஆணை வழங்கிட மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் சைதாப்பேட்டை துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்கள் திருவள்ளூர் வட்டாட்சியரை கடம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட தேர்வு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளமையால் கட்டிடம் கட்ட அந்நிலத்தில் முன் நுழைவு அனுமதி வழங்கக் கோரியுள்ளார். முன் நுழைவு அனுமதியும், நில மாற்ற உத்தரவும் வருவாய்த் துறையினரிடமிருந்து பெறப்பட்டவுடன் பொதுப் பணித் துறையினர் கட்டிடப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பார்கள்.

**15—**

## துணை மின் நிலையம் இயங்குதல்

**வினா 8250—திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் தொகுதியில் இராசாத்தி வலசில் அமைக்கப்பட்டுள்ள (எஸ்.எஸ். 110/11 கி.வோ.) துணை மின் நிலையம் எப்பொழுது இயங்கும் ?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

காங்கேயம் மின் நிலைய மின் பளுவை குறைக்கவும், இராசாத்திவலசு பகுதியில் மின் அழுத்தத்தை மேம்படுத்தவும், இராசாத்திவலசில் ஒரு 110/33/11 கே.வி. துணை மின் நிலையம் ரூபாய் 435.13 இலட்சம் செலவில் அமைக்க வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மின் கருவிகள் அமைக்கும் பணி, முழுவதுமாக முடிக்கப்பட்டு விட்டது. மின் பாதை முழுவதுமாக அமைக்கப்பட்டுவிட்டது. மத்திய தகவல் தொடர்பு துறை அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வனுமதி கிடைக்கப் பெற்றவுடன் இம்மின் பாதை ஈங்கூர் உடுமலைப்பேட்டை 110 கே.வி. மின் பாதை மூலம் மின்னூட்டம் அளிக்கப்பட்டு, 16 எம். வி. ஏ. மின் மாற்றி அமைக்கும் பணியும் முடிக்கப்பட்டவுடன், இத்துணை மின் நிலையம் 1997 ஜூலை மாதம் இயக்கி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**16—**

## காற்றாலை மூலம் மின்சாரம்

**வினா 9706—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதியில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பதை ஆராய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம் சுரண்டையிலிருந்து 12 கி.மீ. தொலைவிலுள்ள நெட்டூர் பகுதியையும் 6 கி.மீ. தொலைவிலுள்ள ஆய்குடி பகுதியையும் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்திக்குச் சாதகமான காற்று அழுத்த பகுதியாகத் தேர்வு செய்துள்ளது. சுரண்டை பகுதி, காற்று அழுத்த பகுதியாக

[1997 அக்டோபர் 14

தேர்வு செய்யப்படவில்லை. புதிய காற்றாலை பண்ணைகளில் உற்பத்தியாகும் மின்சக்தியை தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புடன் இணைத்திட நெட்டூர் அருகில் கீழ் வீராணம் கிராமத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் ரூ. 881.132 இலட்சம் மதிப்பீட்டில் அமைவதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**17—**

**வருவாய்—வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம் விரிவுபடுத்துதல்**

**வினா 5695—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை—வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) விரைவில் விரிவுபடுத்தப்படும்.

**18—**

**புறம்போக்கு நில விடுகளுக்கு மனைப்பட்டா**

**வினா 5867—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம், 12-வது வார்டு வ. உ. சி. நகரில் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): குறிப்பிடப்படும் நிலம் 'ரோடு' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சாலை மேம்பாட்டிற்கு இது தேவையான இடம் என்பதால் ஒப்படை செய்ய இயலாது.



1997 அக்டோபர் 14]

**19—**

**தாலுகா அலுவலகக் கட்டிடம் கட்டுதல்**

**வினா 6904—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் தாலுக்கா அலுவலகக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி வட்டாட்சி அலுவலகம் 1-1-1997 முதல் செயல்பட்டு வருகிறது. கட்டிடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டிடம் கட்ட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**20—**

**வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டிடம்**

**வினா 7908—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி தாலுக்கா வட்டாட்சியர் அலுவலகம் கூட்டுறவு சங்கக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு உள்ளது.

[1997 அக்டோபர் 14

21—

**தலையாரிகளை முழு நேரப் பணியாளர்களாக நியமித்தல்**

**வினா 8367—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பணி புரியும் கிராமக் காவலர்களை (தலையாரிகள்) முழு நேரப் பணியாளர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

தலையாரிகள் உள்ளிட்ட பகுதி நேர கிராம உதவியாளர்கள் 01-06-1995 முதற்கொண்டே முழு நேர அரசு ஊழியர்களாக மாற்றி அமைக்கப்பட்டு உள்ளனர்.

22—

**வட்ட அலுவலகத்திற்குக் கட்டிடம்**

**வினா 8510—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள வட்ட அலுவலகத்திற்கு அரசுக் கட்டிடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அதற்கு புதிய கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் 01-01-1997 முதல்தான் செயல்பட்டு வருகிறது. கட்டிடம் இல்லாத புது வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டிடம் கட்ட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1997 அக்டோபர் 14]

23—

**வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதுப்பித்தல்**

**வினா 8522—திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், செங்கை வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

இல்லை.

24—

**குடிசை வீடுகள் தீ விபத்தில் எரிந்ததன் விவரம்**

**வினா 10530—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூர் நகரில் அருள்மிகு சுந்தரேச சுவாமி கோயில் மானியம் பகுதியில் 96 குடிசை வீடுகள் தீ விபத்தில் எரிந்து சாம்பலாகியதை அரசு அறியுமா?

(ஆ) பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உதவி செய்ய எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) தீ பற்றி எரியாத வீடுகள் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) இந்தத் தீ விபத்தில் முழுமையாகச் சேதமடைந்த 47 குடிசைகளுக்குத் தலா ரூ. 1,000-மும் பகுதியாகச் சேதமடைந்த 14 குடிசைகளுக்குத் தலா ரூ. 500-ம் ஆக மொத்தம் ரூ.54,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 5 கிலோ அரிசியும், 1 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டுள்ளது.

(இ) தீ விபத்தில் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக தீப்பற்றி எரியாத வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25— [1997 அக்டோபர் 14

**வீடுகளைப் புதுப்பித்தல்**

**வினா 10566—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சின்னபங்கு நத்தம் ஊராட்சி, பொடலூர் கிராமத்தில் தீ விபத்தால் எரிந்து சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்து கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மாவட்டப் பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தீ விபத்தில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 1,000-மும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகையன்றி தீ விபத்தில் சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்க வழிவகை இல்லை.

26—

**ராசிபுரம் காலனியில் வீடுகளைப் புதுப்பித்தல்**

**வினா 10567—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ராசிபுரம் காலனியில் தீ விபத்தில் எரிந்து சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாவட்டப் பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தீ விபத்தில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 1,000-மும் பகுதியாகச் சேதமடைந்த



1997 அக்டோபர் 14]

குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகையின்றி தீ விபத்தில் சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்க வழிவகை இல்லை.

27—

**தீ விபத்தில் எரிந்து போன வீடுகளைப் புதுப்பித்தல்**

**வினா 10568—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுட்ட அள்ளி ஊராட்சி, ஊர் நத்தம் கிராமத்தில் தீ விபத்தில் எரிந்து போன வீடுகளைப் புதுப்பித்துக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாவட்டப் பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தீ விபத்தில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 1,000-மும் பகுதியாகச் சேதமடைந்த குடிசைதாரர்களுக்குத் தலா ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகையன்றி தீ விபத்தில் சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கொடுக்க வழிவகை இல்லை.

28—

**தீ விபத்து நிவாரணத் தொகையை உயர்த்துதல்**

**வினா 11586—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீ விபத்தினால் சேதமடையும் வீடுகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் அரசு நிவாரணத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சென்னை மாவட்டத்தில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ.600-ம், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ.300-ம், இதர மாவட்டங்களில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ. 500-ம், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ.250-ம், வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது மாவட்டப் பாகுபாடின்றி சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தீ விபத்தில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ.1,000-மும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ரூ.500-ம் வழங்கப்படுகிறது. தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையை மேலும் உயர்த்திக் கொடுக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

### மெட்டல் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா 466—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் தாமரங்கோட்டையிலிருந்து செங்கப்படுத்தான்காடு செல்லும் மெட்டல் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாமரங்கோட்டை, செங்கப்படுத்தான் காடு சாலை பட்டுக் கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது ஆகும். இச்சாலை பட்டுக்கோட்டை முத்துப்பேட்டை அரசு மாவட்டச் சாலையில் பிரிந்து துவரங்குறிச்சி டி. மரவக்காடு அரசு இதர மாவட்டச் சாலையில் இணைகிறது. இச்சாலை சிறிது கப்பிச் சாலையாகவும் ஒரு



பகுதி மண் தளமாகவும் உள்ளது. மேற்படி சாலையை 1996-97 ஆம் வருடம் மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் 1.00 கி.மீ. நீளத்திற்கு மட்டும் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

30—

### சாலை வசதி செய்தல்

**வினா 1027—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து, வெள்ளூற்று பெருமாள் கோயிலுக்குச் செல்லும் பாதை மற்றும் சூரியன் காடு ஆகிய பகுதிகளுக்குச் சாலை வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியிலிருந்து வெள்ளூற்று பெருமாள் கோயிலுக்குச் செல்லும் பகுதிக்கு பாதை வசதி செய்து கொடுக்க செயற்குறிப்பு ஏதுவும் நகராட்சியில் இல்லை.

31—

### சாலையைச் சரி செய்தல்

**வினா 1169—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் ஒன்றியம் பட்டுகுடி, கூடலூர், புத்தூர், அம்மாப்பள்ளி தைக்கால் வரை சாலையைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுகுடி, கூடலூர், புத்தூர் அம்மாப்பள்ளி, தைக்கால் இணைப்புச் சாலை ஆகும். இதில் கல்லணை காவேரிப்பட்டினம் சாலை பிரிந்து எட்டுக்குடி வரை செல்லும் சாலை 1997-98 ஆம் ஆண்டு வேலை

[1997 அக்டோபர் 14

உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பட்டுக்குடி கிராமத்திலிருந்து கூடலூர் புத்தூர் வழியாக அம்மாப்பள்ளி தைக்காலுக்கு செல்லும் சாலையில் குடிகாடு வரை 3.00 கி.மீ. வரை பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள சாலையாகும். குடிகாடு கிராமத்தில் இருந்து அம்மாப்பள்ளி தைக்கால் 1.00 கி.மீ. வரை கடந்த ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கப்பிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இச்சாலையை தார்ச் சாலையாக்க ஊராட்சி ஒன்றியத்தில் ஏதேனும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட உள்ளது.

32—

**பாலம் கட்டுதல்**

**வினா 2315—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியம் ஒட்டலூர்—கோட்டையூர் சாலையில் பாலம் இதுவரை கட்டப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பாலம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள வினாவில் குறிப்பிட்டுள்ள இவ்விரு சாலைகளுக்கும் இடைப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதியின் அகலம் 600.00 மீட்டர் ஆகும். இருப்பினும், இது மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்திற்கு உட்பட்டதாதலால் இதில் பாலம் கட்ட பொதுப்பணித் துறையின் அனுமதி தேவைப்படுகிறது. ஆயினும் தற்போது படகுப் போக்குவரத்து நடைபெறும் இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் கட்டவும், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள இவ்விரு ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தவும் சுமார் ரூ.15.5 கோடி தோராயமாக தேவைப்படும். ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம், மற்றும் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் போன்ற திட்டங்களில் குறைந்த அளவே



1997 அக்டோபர் 14]

நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் ஊராட்சி ஒன்றியம் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ இப்பணியினை மேற்கொள்ள இயலாது.

33—

**வண்டிப்பாலம் கட்டித் தருதல்**

**வினா 2650—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, தர்மதானபுரம் ஊராட்சி, ஆட்டுக்கால் மடப்புரம்—ஆத்திககுடி தாழஞ்சேரி ஊராட்சி, கொற்கை ஆதிதிராவிடர் குடியிருப்பு கிழாய் ஊராட்சிப்பாக்கம், காவளமேடு—மண்ணியாறு, திருச்சிற்றம்பலம் ஊராட்சி குமாரமங்கலம் ஓடையாறு ஆகிய இடங்களில் வண்டிப் பாலங்களை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை தொகுதியில் மேற்கண்ட பாலப் பணிகள் நிறைவேற்றிட ரூ. 17 இலட்சங்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டுகளில் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கிராம சபா மூலம் தேர்வு செய்து ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டங்களில் சேர்த்து செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது.

34—

**தண்ணீர் தேங்குவதை சரிசெய்தல்**

**வினா 2689—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதியும் பூங்காநகர் தொகுதியும் இணையும் டிக்காஸ்டர் ரோட்டில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பூர் தொகுதியும் பூங்கா நகர் தொகுதியும் இணையும் டிக்காஸ்டர் ரோட்டில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதை சரி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**35—**

## இணைப்புப் பாலம் விரிவுபடுத்துதல்

**வினா 3096—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழபுரத்திற்கு வடக்கே மண்ணையாற்றின் மகாராஜபுரம் ஊராட்சியை இணைக்கும் பாலம் விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). கும்பகோணம் ஊராட்சியைச் சேர்ந்த சோழபுரம் பேரூராட்சியில் இருந்து மகாராஜபுரம் ஊராட்சியை இணைக்கும் சாலையில் மண்ணையாற்றில் 2.5 மீட்டர் அகலத்தில் 36 மீட்டர் நீளத்தில் உள்ள வண்டிப்பாலம், ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ளது. இது பாதசாரிகள் மற்றும் மாட்டு வண்டிகள் மட்டுமே செல்லக் கட்டப்பட்டுள்ள பாலம். மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி பாலத்தை விரிவுபடுத்த இயலாது. ஊராட்சி ஒன்றிய நிதியைக் கொண்டு புதிய பாலம் தற்போது கட்ட இயலாது.

**36—**

## மின்கம்பத்தை செப்பனிடுதல்

**வினா 3460—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



எ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பிச்சன்கோட்டகம் ஊராட்சி, தென்பாதி கிராமத்தில் பழுதடைந்துள்ள மின் கம்பத்தைச் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் பிச்சன்கோட்டகம் ஊராட்சி, தென்பாதி கிராமத்தில் பழுதடைந்த மின்கம்பத்தை உடனடியாக மாற்றித்தர தமிழ்நாடு மின்சார வாரியம் திருத்துறைப்பூண்டி உதவி மின் கோட்டப் பொறியாளருக்கு கோரப்பட்டது. பழுதடைந்த மின்கம்பத்திற்குப் பதிலாக புதிய மின்கம்பம் 6-3-1997 அன்று மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.

**37—**

## மயானத்திற்கு புதிய பாதை

**வினா 4038—திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், கீழ்புவனகிரி மயானத்திற்கு புதிய பாதை அமைத்துத் தெரு மின்விளக்கு பொருத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புவனகிரி பேரூராட்சியில் கீழ்புவனகிரி மயானப் பாதைக்குப் பேரூராட்சிகளின் அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் இரண்டு மின் குழல் விளக்குகள் மார்ச் 1997-ல் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், கீழ்புவனகிரி மயானத்திற்குச் செல்லும் பாதையினை வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச் 1997-ல் சாலை சீர்செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**38—**

## உரிமம் இல்லாத நாய்களை பிடிக்க நடவடிக்கை

**வினா 4701—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் உரிமம் இல்லாமல் திரியும் நாய்களைப் பிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிகளில் உரிமம் இல்லாமல் சுற்றித் திரியும் நாய்களைப் பிடிக்க நகர்மன்றத் தீர்மானம் இயற்றப்பட்டு அதன்படி விலைப்புள்ளி கோரப்படுகிறது. சிலர் நாய்களை வளர்ப்பதற்கு விருப்பப்படுவதால், நாய்களை வளர்ப்பதற்கு விரும்புபவர்கள் அந்த நாய்களுக்கு விரைவில் உரிமம் பெறுமாறு கோரி தினசரி நாளிதழ்களிலும், ஒலிபெருக்கி மூலமும், தண்டோரா மூலமும் விளம்பரப்படுத்தப்பட்டு சில நாட்கள் கெடுவிதித்துப் பின்னும், உரிமம் இல்லாமல் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. அவ்வாறு அழிப்பதற்காக ஆகும் தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது.

நாய்களை அழிக்கக்கூடாது என்று வழக்கறிஞர்களால் வழக்கு தொடுக்கப்பட்டு அவ்வழக்குகள் உள்ள பகுதிகளில் மட்டும் நாய்கள் அழிக்கப்படாமல், சட்ட ஆலோசகர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

39—

## பெண்கள் நவீனக் கழிப்பிடம் அமைத்தல்

**வினா 4739—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியில், புதிதாகப் பெண்கள் நவீனக் கழிப்பிடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) திருவில்லிபுத்தூர் நகராட்சியில் 1996-97 ஆம் ஆண்டில் அரசு நிதியுதவியுடன் கீழ்க்கண்ட இடங்களில் பெண்களுக்கு நவீன கழிப்பிடங்கள் தண்ணீர் வசதியுடன் கட்டப்பட உள்ளன:

(1) சந்தைப்பேட்டை தெரு-மதிப்பீட்டுத் தொகை ரூ.2 லட்சம்.

(2) ரைட்டன்பட்டி தெரு-மதிப்பீட்டுத் தொகை ரூ. 2 இலட்சம்.

40—

## சிறு பாலம் கட்டுதல்

**வினா 4887—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமத்திலே ஓமலூர்—சங்ககிரி சாலையிலிருந்து மணமேடு செல்லும் சாலையில் ஒரு சிறு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமத்தில் ஓமலூர்-சங்ககிரி சாலையிலிருந்து மணமேடு செல்லும் சாலையில் ஒரு சிறு பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை. ஆனால் 1997-98 ஆம் நிதியாண்டில் மேற்படி வேலையினை மாவட்டக் குழு பரிந்துரையின் திட்டத்தில் எடுத்துச் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41—

## கப்பிச் சாலையாக மாற்றி அமைத்தல்

**வினா 5184—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சி. கொத்தங்குடி சாலையை கப்பிச் சாலையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் சி. கொத்தங்குடி சாலை, 1996-97 ஆம் ஆண்டின் 65 சதவிகிதம் வேலையில் சேர்க்கப்பட்டு, கப்பிச் சாலையாக ரூ. 52,000 மதிப்பீட்டில் விரைவில் செய்து முடிக்கப்படவுள்ளது.

**42—**

### ஆரம்பப் பள்ளிக்குக் கழிப்பிடம்

**வினா 5185—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சி. கொத்தங்குடி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்குக் கழிப்பிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் சி. கொத்தங்குடி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்குக் கழிப்பிடம் நடப்பு நிதியாண்டில் கல்வி நிதியிலிருந்து செய்து முடிக்கப்படும்.

**43—**

### மயானங்களுக்கு கூரை அமைத்தல்

**வினா 5187—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 14]

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் வில்லியநல்லூர் குடியிருப்பு மற்றும் அகர ஆலம்பாடி ஆகிய இடங்களிலுள்ள மயானங்களுக்குக் கூரை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**44—**

### தார்ச் சாலைகள் அமைத்தல்

**வினா 5220—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னர்-திருமலை மாவட்டம் வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம் கூடலூரிலிருந்து திருமக்கம்பட்டி வரை, ஆர். புதுக்கோட்டை முதல் பில்லமநாயக்கன்பட்டி வரை, குஜிலியம்பாறை முதல் கரிக்கால் வழியாக குவாரி முடிய குஜிலியம்பாறை குலப்புரச் சாலையில் பெருமாம்பட்டி வழியாக மற்றும் பாளையம் முதல் பள்ளப்பட்டி வழியில் நாச்சிப்பட்டி பிரிவிலிருந்து உக்குவார்பட்டி வரை தார்ச் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): குஜிலியம்பாறை ஒன்றியம் முதல் கரிக்கால் வழியாக சி.சி.சி. குவாரிக்குச் செல்லும் 7 கி.மீ. சாலை கிராமச்சாலைத்

திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பாளையம் முதல் பள்ளப்பட்டி வரை செல்லும் நெடுஞ்சாலைத் துறையின் கீழுள்ள சாலையில், பாளையம் முதல் உக்குவார்பட்டி வரையுள்ள 2 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலை மாவட்டப் பரவலாக்கத் திட்டத்தின் கீழ் தார் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பேருந்து செல்லும் சாலைகளை தார்ச் சாலைகளாக அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள இரு சாலைகளைத் தவிர வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய 3 சாலைகள் அதாவது, டி. கடலூரில் இருந்து திருமக்கம்பட்டி வரையுள்ள சாலை, ஆர். புதுக்கோட்டை முதல் பில்லமநாயக்கன்பட்டி வரையுள்ள சாலை மற்றும் குஜிலியம்பாறை, சூலப்புரம் சாலையில் பிரிந்து செல்லும் பெருமாம்பட்டி சாலை ஆகியவைகளை தார்ச் சாலைகளாக அமைப்பதற்கு எடுத்துக் கொள்ள இயலாத நிலை உள்ளது.

**45—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 5727—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சியின் பெரும்பகுதி மக்களுக்கு குடி நீர் விநியோகம் செய்யும் ஆழ்குழாய்க் கிணறு பாதிக்குமளவிற்கு மலையக்கோயில் குட்டைக்கு அருகில் புதிய ஆழ்குழாய்க் கிணறு தனியார் ஒருவர் போட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன. ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சியின் பெரும்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்குழாய்க் கிணறு பாதிக்கும் அளவிற்கு மலைக்கோயில் குட்டைக்கு அருகில் க.ச.541/1 நிலத்தில் திரு. சண்முகம் என்பவர் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துள்ளார்.



(ஆ) பொதுமக்கள் நலன் கருதி பல்லடம் வட்டம்மலூர் கிராமம் க.ச.எண் 540 குட்டை புறம்போக்கில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பொது ஆழ்குழாய் கிணறு பாதிப்புக்குள்ளாகாத வண்ணம் ச.எண்.541-ல் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றை எவ்விதத்திலும் பயன்படுத்தாமல் இருக்கும்படியும், இதனை மீறி தண்ணீர் இறைக்க முற்பட்டால் பொது மக்களின் நலன் கருதி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவிட்டுள்ளார். இதனை ஆட்சேபித்து திரு. சண்முகம் என்பவர் வழக்குரைஞர் மூலம் 7-3-1997 ஆம் தேதி நோட்டீஸ் கொடுத்துள்ளார். எனவே, இது குறித்து அரசு வழக்குரைஞரை கலந்து உரிய சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மங்கலம் ஊராட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**46—**

## பாலம் கட்டுதல்

**வினா 6492—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் பார்த்திபனூருக்கு அருகே கள்ளிக்குடி செல்லும் சாலையில் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்ட கால்வாயின் குறுக்கே புதிய குழாய் பாலம் ரூ. 1,94,000 செலவில், கடந்த பிப்ரவரி 1997-இல் கட்டப்பட்டுள்ளது.

**47—**

## ஆற்றில் பாலம் கட்டுதல்

**வினா 6560—திரு. கே. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம். தருமபுரி தொகுதி. நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகத்திலிருந்து தம்மனம்பட்டி இடையே செல்லும் ஆற்றில் பாலம் ஒன்று கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சார்த்தம்பட்டி முதல் ஏரி கோடிப்பட்டி வரை தற்சமயம் நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தம்மனம்பட்டி முதல் இலளிகம் சாலையில் குறுக்கே சுமார் 20 மீ. அகலத்திற்கு பாலாறு செல்கிறது. இதில் தம்மனம்பட்டியிலிருந்து கண்ணனூர் வரை பாதை வசதி இல்லை. தற்சமயம் நடைபாதை மட்டுமே உள்ளது. புதியதாக பாதை அமைக்கப்பட்ட பின்பே தம்மனம்பட்டியிலிருந்து கண்ணனூர் குறுக்கே பாலம் கட்ட இயலும். இப்பாதை அமைக்கும் இடம் பட்டா நிலமாக உள்ளதால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின்பே சாலை அமைக்கவும் பாலம் கட்டவும் இயலும்.

**48—**

**பாதை செப்பனிடல்**

**வினா 6655—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், சோகத்தூர் ஊராட்சி, சிறுபிள்ளை கிராமத்தில் பாதை வசதியும் மற்றும் கொண்டகார அள்ளி ஊராட்சி/மணலூரிலிருந்து காணிகரம்பு வரை பாதையைச் செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

<u>சோகத்தூர், ஊராட்சி, சிறுபிள்ளை கிராமத்திற்கு சாலை வசதி :-</u>

சிறுபிள்ளை கிராமம் தருமபுரி-ஒகேனக்கல் செல்லும் பிரதான சாலையிலிருந்து 3.00 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில்





மொத்தம் 11 வீடுகளே உள்ளன. அவ்வீடுகளும் ஒரே இடத்திலும் இல்லாமல் ஆங்காங்கே இங்குமங்குமாக உள்ளன. இக்கிராமத்திற்கு தற்சமயம் மேய்ச்சல் புறம்போக்கு நிலம் வழியாகவும் பட்டாதாரரின் நிலம் வழியாகவும் செல்ல வண்டிப்பாதை உள்ளது. எனவே, பாதை அமைக்கும் அவசியம் தற்சமயம் இல்லை. இருந்த போதிலும் சாலை அமைக்க பட்டாதாரர்களிடம் நிலம் பெற்று நில ஆர்ஜிதம் செய்ய தருமபுரி ஆணையாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>கொண்டகார அள்ளி ஊராட்சி மணலூரிலிருந்து பாதை வசதி:</u>

மணலூரிலிருந்து காளிகரம்பு வரை செல்லும் ஊராட்சி சாலை 1.2 கி.மீ. ஆகும். இச்சாலையின் குறுக்கே ஒரு உள்ளூர் ஓடை செல்கிறது. இச்சாலையினை மேம்பாடு செய்து ஓடையின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட வேண்டும். இதனால் கிராம மக்கள் 500 பேர்கள் பயனடைவார்கள். இதற்கு ரூ. 1 இலட்சம் நிதி தேவைப்படும். 1997-98 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தில் முன்னுரிமை வழங்கி இப்பணி செய்து முடிக்கப்படும்.

**49—**

**அடிப்படை வசதிகள்**

**வினா 6680—திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர், மேல வைத்தியநாதபுரத்தில், பாரதிதாசன் தெரு, தாசில்தார் தெரு ஆகிய தெருக்களில் சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் வாய்க்கால் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாநகர், மேல வைத்தியநாதபுரத்தில் உள்ள பாரதிதாசன் சாலை மதுரை மாநகராட்சியால் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டும், தாசில்தார் தெரு பகுதியில் சாலைகள் மாநகராட்சியால் மெட்டல் சாலை அமைக்கப்பட்டும் புழக்கத்தில் இருந்து வருகின்றன. தாசில்தார்

[1997 அக்டோபர் 14

தெரு பகுதிக்கு முக்கிய இணைப்பு தத்தனேரி சாலையில் சேரும் பகுதி தனியார் வசம் உள்ளது. சாலை வசதி ஏதும் செய்யக் கூடாது என வழக்குத் தொடர்ந்துள்ளதாகத் தெரிவித்து, தலத்தில் ஓர் அறிவிப்புப் பலகை பூபதி என்பவரால் வைக்கப்பட்டுள்ளது. தாவா இடமாக உள்ளதால் இந்த இணைப்புச் சாலை வசதி மட்டும் மாநகராட்சியால் செய்ய இயலாது.

குடிநீர் வசதியைப் பொறுத்த வரையில், கிணற்று நீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. குடிநீர் வசதி இல்லை. குடிநீர் வசதி வழங்க மதுரை மாநகராட்சியால் ஆய்வு நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவு நீரகற்று வசதியைப் பொறுத்த வரையில், திறவைச் சாக்கடை வசதி இணைப்புச் சாலை தாவா பகுதி வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால் மதுரை மாநகராட்சியால் மேற்படி வசதி செய்ய இயலாமல் உள்ளது.

**50—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 6991—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 1-வது வார்டு கீச்சங்காடு என்ற பகுதியில் பொது மக்கள் உபயோகத்திற்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிக்கு இந்த நிதியாண்டில் மாநில அரசின் நிதிப் பங்கீட்டின் மூலமாக ரூ.34,38,577-ம், 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் படி ரூ.3,83,203-ம் வழங்கப்பட உள்ளதால் மேற்காண் தொகையில் எடப்பாடி நகரம், 1-வது வார்டு கீச்சங்காடு என்ற பகுதியில் பொது மக்கள் உபயோகத்திற்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க தேவையான தொகையினை ஈடு செய்து மேற்படி சாலைப் பணியினைச் செய்து முடிக்குமாறு எடப்பாடி நகராட்சி ஆணையருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 14]

**51—**

### நவீன கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

**வினா 6992—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், வார்டு 7 ஆலச்சம்பாளையம், காட்டூர் பகுதியில் நவீன கழிப்பிட வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1997-98-ஆம் நிதியாண்டில் எடப்பாடி நகராட்சிக்கு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கப்படும் நிதியினைக் கொண்டு ஆலச்சம்பாளையம், காட்டூர் பகுதியிலும் மற்றும் இதரப் பகுதிகளிலும் கழிப்பிடங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**52—**

### ஆழ்துளைக் கிணறு வசதி

**வினா 7001—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 1-வது வார்டில், மேட்டுப்பட்டி பகுதிக்கும் மற்றும் ஆலச்சம்பாளையம் வடக்குத் தெருவிற்கும் ஆழ்துளைக் கிணறு வசதி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரம் 1-வது வார்டில், மேட்டுப்பட்டி பகுதிக்கும் மற்றும் ஆலச்சம்பாளையம் வடக்குத் தெருவிற்கும் ஆழ்துளைக் கிணறு

வசதி அமைத்துக் கொடுக்க அடிப்படை வசதிகள் செயல்படுத்தும் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ நடவடிக்கை எடுக்கும் பொருட்டு எடப்பாடி நகராட்சி ஆணையருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**53—**

**வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் விவரம்**

**வினா 7039—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ஆம் ஆண்டில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் கடைசியாக 1991-92-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 31,46,112 குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் 2,11,918 குடும்பங்கள் உள்ளன.

**54—**

**வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர்**

**வினா 7301—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): செந்துறை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் எதுவுமில்லை.

**55—**

**டிரைசம் பயிற்சித் திட்டம்**

**வினா 7381—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிரைசம் (Trysem) பயிற்சித் திட்டம் சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமப்புறப் பகுதிகளில் டிரைசம் திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்க ரேடியோ, மற்றும் டி.வி. மெக்கானிசம், கம்ப்யூட்டர், தட்டச்சுப் பயிற்சி மற்றும் கயிறு திரித்தல் ஆகிய பயிற்சிகளுக்கு ஒன்பது இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்கள். எடப்பாடி நகராட்சிப் பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை. நடப்பு ஆண்டில் (1997-98) டிரைசம் திட்டத்தின் கீழ், படித்து வேலையற்ற இளைஞர்களை தேர்வு செய்யும் பணி, அந்தந்த ஊராட்சித் தலைவர்களால் கிராம சபை மூலமாக

தேர்வு செய்து பட்டியல் அனுப்ப ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களது அறிக்கையைப் பெற்று, டிரைசம் தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்து சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு பயிற்சியாளர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

**56—**

### தொடக்கப் பள்ளிக்கு கட்டிட வசதி

**வினா 7409—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் தொகுதி, முதலிபாளையம் தொடக்கப் பள்ளிக்குக் கட்டிட வசதி போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கட்டிடம் கட்டித்தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: 1996-97-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் திருப்பூர் தொகுதி முதலிபாளையம் தொடக்கப் பள்ளிக்கு ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில், கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி நடைபெறுகிறது.

**57—**

### பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா 7411—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் தொகுதி, பெருமாநல்லூர் சந்தைத் திடலில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: திருப்பூர் தொகுதி, பெருமாநல்லூர் சந்தைத் திடலில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**58—**

### சானல் பாலம் செப்பனிடல்

**வினா 7777—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட ஆயிரம் பிலாவிளை கோவில் அருகிலுள்ள சானல் பாலத்தைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட ஆயிரம் பிலாவிளை கோவில் அருகிலுள்ள சானல் பாலம் ரூ.30,000 செலவில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

**59—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 7881—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழங்காடு கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழங்காடு கிராம மக்கள் தற்பொழுது வெள்ளங்காடு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிதண்ணீர் வசதி பெறுகிறார்கள். நடப்பு நிதியாண்டில் இக்குடியிருப்புக்குப் புதிய திட்டம் ஏதுமில்லை.

**60—**

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா 2617—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டம், பூவரசங்குப்பம், சின்னக்குப்பம் இடையேயுள்ள ஓடையில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மோட்சகுளம் ஊரிலிருந்து பூவரசங்குப்பம், சின்னகுப்பம் போகும் பாதையில் உள்ள நரி ஓடையில் பாலம் அமைப்பதால் கரும்பு நடவை அதிகப்படுத்துவதற்கு உரிய வாய்ப்பு மிக மிகக் குறைவு. அந்தப் பகுதி விவசாயிகள் பின் பட்டத்தில் கரும்பு பதிவு செய்வதால் ஆலைக்குக் கரும்பு அனுப்புவதில் கரும்பு விவசாயிகளுக்குச் சிரமம் இல்லை. பொதுவாக கரும்பு வளர்ச்சித் திட்டத்தில் எடுக்கப்படும் வேலைகள் அனைத்தும் முதலில் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலை நிர்வாகத்தால் தேர்வு செய்யப்பட்டு சர்க்கரைத் துறை ஆணையாளருக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. அதன் பின்னர் சர்க்கரைத் துறை ஆணையர் அவர்களுக்குத் தோராய மதிப்பீடு மற்றும் வரை படம் அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன் பின்னர் அந்த வேலைகள் சர்க்கரைத் துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு அரசு அதனைப் பரிசீலித்து நிர்வாக ஒப்புதல் வழங்குகின்றது. மேற்படி பால வேலையை இக்கோட்டத்தில் எடுத்துச் செய்ய சௌத் இந்தியா சர்க்கரை ஆலையிடம் பிரேரணை கோரியதற்கு மேற்படி சாலையில் கரும்புப் போக்குவரத்து அதிகம் இல்லாததால் இவ்விடத்தில் பாலம் கட்ட அவசியமில்லை எனத் தெரிவித்துள்ளனர். எனினும், எதிர்வரும் ஆண்டில் மேற்படி இடத்தில் பாலம் கட்டுவதற்கு சௌத் இந்தியா சர்க்கரை ஆலையின் பரிசீலனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது மேற்சொன்ன இடத்தில் கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.





**61—**

**புல்டோசர்கள் வாங்கியதன் விவரம்**

**வினா 6243—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) How many Bulldozers have been purchased by the Agricultural Engineering Department during this year: and

(b) How many of them are allotted to Dharmapuri District?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 31 புதிய பாரத் புல்டோசர்கள் வாங்கப்பட்டன.

(ஆ) தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு புதிய பாரத் புல்டோசர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**62—**

**தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம்**

**வினா 6660—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு தரிசு நில மேம்பாட்டுக்காக எத்தனை கோடி தொகை செலவிடப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை. எனினும், பயன்படுத்தப்படாத நில மேம்பாடு, நீர் பிரிமுகடுப் பகுதி மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு திட்டங்களுக்காக உயர்நிலைக் குழு இவ்வரசால் அமைக்கப்பட்டு அக்குழு தனது அறிக்கையினை விரைவில் அரசுக்கு வழங்க உள்ளது. அவ்வறிக்கை பெறப்பட்டவுடன் அதன் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை தொடரப்படும்.

**63—**

**டிராக்டர்கள் வாங்குவதற்கு மத்திய அரசு மானியம்**

**வினா 7517—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ஆம் ஆண்டில் விவசாயத் துறையின் வளர்ச்சிக்காக 18 குதிரை சக்தி கொண்ட டிராக்டர்கள் வாங்குவதற்கு, மத்திய அரசு தமிழக அரசுக்கு எவ்வளவு மானியம் அளித்துள்ளது ?

(ஆ) சேலம் மற்றும் ராஜாஜி மாவட்டங்களுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ஆம் ஆண்டில் விவசாயத் துறையின் வளர்ச்சிக்காக 18,000 சிசி திறனுடைய 115 டிராக்டர்களை வழங்குவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு ரூ.34.50 லட்சம் மானியம் வழங்கியுள்ளது.

(ஆ) சேலம் மற்றும் ராஜாஜி மாவட்டங்களுக்கு ரூ. 3 லட்சம், 10 டிராக்டர்கள் வாங்குவதற்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



**64—**

**புதிய வீராணம் திட்டம்**

**வினா 3325—திரு.வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய வீராணம் திட்டத்திற்கு இதுவரை அரசு செலவழித்துள்ள தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இத்திட்டத்திற்கு இதுவரை—

(1) பொதுப்பணித்துறை செலவழித்துள்ள தொகை வருடம் வாரியாக:—

| | |
|---|---|
| 1994-95 | ரூ. 20,16,139 |
| 1995-96 | ரூ. 36,51,016 |
| 1-4-96 முதல் 30-8-96 வரை | ரூ. 16,23,789 |
| **மொத்தம்** | **ரூ. 72,90,944** |

(2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இதுவரை செலவழித்துள்ள தொகை ரூ. 4,91,62,350

**65—**

**சிறிய நீர்த்தேக்கம் அமைத்தல்**

**வினா 3911—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, புளியஞ்சோலையில் சிறிய நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1997 அக்டோபர் 14

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, புளியஞ்சோலையில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு. புவியியல் சார்ந்த தொழில் நுட்பக் காரணங்களினால் சாத்தியமில்லை என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**66—**

**உப்பனாற்றின் கரைகளைச் சீரமைத்தல்**

**வினா4109—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உப்பனாற்றின் இரு கரைகளையும் சீரமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி உப்பனாற்றின் இரு கரைகளையும் சீரமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**67—**

**பாசன நிலங்களை ஆழப்படுத்துதல்**

**வினா 5875—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வி.கே. புதூர் வட்டம் குலைய நேரி கிராமம், ரெட்டை குளம் பாசன நிலங்களை அடவிநயினார் நீர்த்தேக்க திட்டத்தில் சேர்த்து ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வி.கே. புதூர் வட்டம், குலையநேரி கிராமம், ரெட்டை குளம் பாசன நிலங்களை அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டத்தில் சேர்த்து ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**68—**

**குளங்களைச் சீரமைத்தல்**

**வினா 6774—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் பல ஆண்டுகளாக மராமத்து செய்யப்படாமல் இருக்கும் கடம்பா குளம், பெரிய குளம் மற்றும் ஏனைய குளங்கள் அனைத்தையும் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கடம்பாகுளம், பெரியகுளம் மற்றும் ஏனைய குளங்களைச் சீர் செய்யவும் மேம்பாடு செய்யவும் தமிழ்நாடு நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

**69—**

**ஆய்வு மாளிகை, ஓய்வு இல்லங்கள் அமைத்தல்**

**வினா 9516—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், பெரம்பலூரில் ஆய்வு மாளிகை மற்றும் ஓய்வு இல்லங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

**70—**

**சாலையைச் சீரமைத்தல்**

**வினா 2182—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி, என்.எச்.49-ல் ஐந்துமுனை ரோட்டில் இருந்து அரசு மருத்துவமனை வரை சாலை சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி நகர்மன்ற எல்லைக்குள், மகளிர் மருத்துவமனை முன்பாக உள்ள தேசிய நெடுஞ்சாலை-49ல் கி.மீ. 74/8—75/0 பகுதியில் சுமார் 180 மீட்டர் நீளத்திற்கு தற்பொழுது உள்ள சாலை தாழ்வாக உள்ளது. இத்தாழ்வான பகுதியை உயர்த்தி மேம்பாடு செய்ய, தோராயமாக ரூ. 25.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2. இதுவரை இப்பகுதியானது பராமரிப்பு மற்றும் செப்பனிடுதல் நிதி (Maintenance and repair grants) ஒதுக்கீட்டிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. Highways Manual-படி நகராட்சி வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையினை மேம்படுத்தும் பணிக்கு ஆகும் செலவை மாநில அரசும், நகராட்சியும் சமமாக பங்கிடு செய்ய வேண்டும். அதாவது 50 சதவிகிதம் செலவினத் தொகையை நகராட்சி செலுத்த வேண்டும்



1997 அக்டோபர் 14]

என்று உள்ளது. எனவே, இப்பணிக்கு ஆகும் செலவில் பாதியை-50 சதவிகிதம்-பரமக்குடி நகராட்சி செலுத்த வேண்டும். மேற்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு கிடைத்த பிறகு நகராட்சி 50 சதவிகிதம் செலவை ஏற்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) அவர்களால் 1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் மேற்கண்ட வேலை பரிந்துரை செய்யப்படவில்லை.

**71—**

**வீதி சீரமைத்தல்**

**வினா 3866—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகர், ஜவஹர்லால் நேரு வீதியை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஜவஹர்லால் நேரு வீதியானது, நெடுஞ்சாலைத் துறையால் மாவட்டப் பெருஞ்சாலையாகப் பராமரிக்கப்பட்டு வரும் பாண்டி-கிருஷ்ணகிரி சாலை கி.மீ. 67/410-67/540 வரையுள்ள சாலைப் பகுதியாகும். இப்பகுதியில் காய்கறி அங்காடிகள் உள்ளன. மேலும், மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் கால்வாய் சரிவர இயங்காத காரணத்தால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கியிருப்பதாலும் சாலை மோசமான நிலையை அடைகிறது. மேற்கூறிய சாலைப் பகுதியை சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தால் மழைக்காலங்களிலும் பழுதுறாமல் பராமரிக்க இயலும். மேலும் சாலையின் இரு பக்கங்களிலும் கழிவுநீர் கால்வாய் அமைத்து மழைநீர் தேங்காமல் சாலையை நல்ல முறையில் பராமரிக்க இயலும்.

இச்சாலையில் கி.மீ. 67/410-லிருந்து 67/540 வரையில் சிமெண்ட் தளம் அமைக்க தோராயமாக ரூ.10 இலட்சமும் மற்றும் சாலையின் இரு பக்கங்களிலும் கழிவுநீர் கால்வாய் அமைக்க ரூ.2.80 இலட்சமும் தேவைப்படும்.

[1997 அக்டோபர் 14

மேற்கண்ட சாலைப்பகுதி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குள் இருப்பதால் சிமெண்ட் தளம் அமைக்க நகராட்சி 26.875. 5% பங்கு தொகை ரூ. 2.69 இலட்சமும் நெடுஞ்சாலைத் துறைக்கு அளிக்க வேண்டும். மேலும் சாலையின் இருபக்கங்களிலும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க முழுத் தொகையும் நகராட்சியால் அளிக்கப்பட வேண்டும்.

**72—**

**சிதம்பரத்திலிருந்து கூடுதல் தடங்களில் பேருந்துகள் இயக்குதல்**

**வினா 5179—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சிதம்பரம்-பழனி, சிதம்பரம்-மதுரை மற்றும் சிதம்பரம்-திருச்சிராப்பள்ளி வழித்தடங்களில் நேரடிப் (Point to Point) பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நேரடிப் பேருந்துகள் (Point to Point) கோரியுள்ள தடங்களான சிதம்பரம்-பழனி மற்றும் சிதம்பரம்-மதுரை ஆகியவற்றின் தட நீளங்கள் முறையே 310 கி.மீ. மற்றும் 283 கி.மீ. ஆகும். தற்போதுள்ள அரசு நெறிமுறைகளின்படி 250 கி.மீக்கும் மேல் தடநீளம் உள்ள தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினர்தான் பேருந்துகளை இயக்க இயலும். எனவே, மேற்படி இரண்டு தடங்களிலும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்துகளை இயக்கிட இயலாத நிலை உள்ளது. சிதம்பரம்-திருச்சிராப்பள்ளி தடத்தின் மொத்த நீளம் 155 கி.மீ. இதில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இயக்க எல்லை 35 கி.மீ எனவும், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக இயக்க எல்லை 120 கி.மீ எனவும் அமைந்துள்ளதால் இத்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து 8 பேருந்துகள் மூலம் தினசரி 26 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி வழித்தடத்தில் நேரடிப் பேருந்துகள் (Point to Point) இயக்கம் செய்ய மோட்டார் வாகன விதிகளின்படி இயலாது. இடைப்பட்ட பகுதி மக்கள் பாதிக்கப்பட்டு பிரச்சினைகள் எழவும் வாய்ப்புள்ளது.



1997 அக்டோபர் 14]

**73—**

**மருத்துவக் கல்லூரியில் பிராணி வீடு கட்டுதல்**

**வினா 5551—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் பயிலும் மாணவர்களின் செய்முறை பயிற்சிக்கான எலி, முயல் போன்ற பிராணிகளைப் பாதுகாக்க 'பிராணி வீடு' (Animal House) கட்டப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் பயிலும் மாணவர்களின் செய்முறைப் பயிற்சிக்காக பெருந்துறை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 1600 சதுர அடி பரப்பளவு கொண்ட செய்முறைப் பயிற்சியுடன் கூடிய பிராணி வீடு (Animal House) ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப்பட்டு தேவையான பிராணிகளுடன் இயங்கி வருகின்றது.

**74—**

**மேம்பாலம் கட்டுதல்**

**வினா 6327— திரு. கே. வேணு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைப்பாக்கத்தில் குசஸ்தலை ஆற்றின் இருகரைகளையும் இணைக்க மேம்பாலம் கட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர். க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்டச் சாலையான கொரட்டூர்-திண்ணனூர் சாலையில் கி.மீ. 18/6ல் தாமரைப்பாக்கம் ஏரி நீர்செல்லும் கால்வாய் அருகே உள்ள தரைப்பாலம் கடந்த வருட மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டதால்,

[1997 அக்டோபர் 14

போக்குவரத்து தடைப்பட்டது. எனவே வெள்ள நிவாரணப் பணியில் மேற்படி பாலம் தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு தற்போது போக்குவரத்துத் தடையின்றிச் செல்ல வழிவகுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உயர் கண்கொண்ட தரைப்பாலம் கட்டுதல் இன்றியமையாததாக கருதப்படுகின்றது. இப்பணி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. அரசு ஆண்டுதோறும் திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் அண்மைக் காலங்களில் பகுதி-2 திட்டவாயிலாக இப்பணியை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**75—**

**நெடுஞ்சாலைத் துறை சாலையைச் சீரமைத்தல்**

**வினா 6444—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கூத்தாநல்லூர்-திருராமேஸ்வரம் வரையுள்ள பழுதடைந்துள்ள நெடுஞ்சாலைத் துறை சாலையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் பெயர் திருராமேஸ்வரம்-பாண்டுகுடி சாலை கி.மீ.0/0-5/2 ஆகும். இச்சாலையின் கி.மீ. 0/0-4/0 பகுதி நல்ல நிலையில் உள்ளது. கி.மீ 4/0-5/2 பகுதி கடந்த டிசம்பர் 1996-ல் மழை வெள்ளத்தில் சேதமடைந்துள்ளது. தற்போது கருங்கல் ஜல்லி போட்டு நொடிகள் சரிபார்க்கப்பட்டு சாலை தளம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**76—**

**வண்டிப்பாலம் அமைத்தல்**

**வினா 7527—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 14]

(அ) ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியத்தில் வெண்ணாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1997-98-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரப்பட்டுள்ள பாலம், நீடாமங்கலம் ஒன்றியத்தில், அனுமந்தபுரம் ஊராட்சி ஒட்டக்குடி, பழங்களத்தூர் மற்றும் ஒளிமதி ஊராட்சி, கற்கோவில் ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் வெண்ணாற்றின் குறுக்கே அமைக்கப்பட வேண்டும். இவ்விடத்தில் வெண்ணாற்றின் நீர் வழிப்பாதை அகலம் 80 மீட்டராகும். இவ்விடத்தில் தற்போது வண்டிப்பாலம் ஏதுமில்லை. இவ்விடத்தில் பாலம் அமைத்து, புதியதாக சாலைகள் அமைத்தால் அவ்வணுகு சாலைகள் ஒருபுறம் நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ 47/4-டனும், மறுபுறம் பழைய நீடாமங்கலம்-அனுமந்தபுரம் சாலை (இதர மாவட்ட சாலை) கி.மீ 2/8-டனும் சேருகின்றன. இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் ஒன்று அமைக்க தோராயமாக ரூ.250 இலட்சம் தேவைப்படும்.

இப்பணி அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இப்பாலம் கட்டும் பணி புதிய சாலை அமைத்து, அந்தச் சாலையில் கட்டப்பட வேண்டும். மேலும் இப்பாலப் பணி அரசுச் சாலைகளில் அமையப்பெறாததால், இப்பணியை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**77—**

**அதிக சுமை ஏற்றும் லாரிகளால் இடையூறு**

**வினா 8533—திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அளவுக்கு அதிகமாக சுமை ஏற்றிச் செல்லும் லாரிகளால் (வைக்கோல் லாரி) போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா?

[1997 அக்டோபர் 14

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், அரசு அறியும்.

(ஆ) அதிகமாக சுமை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் அவ்வப்போது மோட்டார் வாகன ஆய்வாளர்களால் சோதனை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. சோதனையின்போது ஏற்றிய அதிக சுமைகளை ஓட்டுநரின் சொந்தப் பொறுப்பில் இறக்கி வைக்குமாறு ஆணையிடப்படுகிறது. அந்த வாகனங்களுக்கு சோதனை அறிக்கை வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் குற்றத்தின் தன்மைக்கேற்ப இணக்கக் கட்டணம் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது.

**78—**

## உணவு விடுதி, பெட்டிக் கடைகளின் வருமானம்

**வினா 8604—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக வளாகத்தில் உள்ள உணவு விடுதி, பெட்டிக் கடைகள் ஆகியவைகளின் மூலம் 1991-96-ல் எவ்வளவு வருமானம் வந்தது?

(ஆ) தற்போதைய வருமானம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திண்டிவனம் நகரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக வளாகத்தில் உள்ள உணவு விடுதி, பெட்டிக் கடைகள் ஆகியவற்றின் மூலம் 1991-96 வரை பெற்ற மொத்த வருமானம் ரூ.27,38,930/-



1997 அக்டோபர் 14]

| காலம் | உணவு விடுதிக்கு மாத வாடகை | பெட்டிக் கடைக்கு மாத வாடகை | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் | ரூபாய் |
| 1/91 | 17,510 | 3,700 | 21,210 |
| 2/91—1/92 | 20,140 | 4,260 | 2,92,800 |
| 2/92—1/93 | 23,170 | 4,900 | 3,36,840 |
| 2/93—3/94 | 23,170 | 4,900 | 3,92,980 |
| 5/94—3/95 | 31,000 | 15,100 | 5,07,100 |
| 4/95—3/96 | 35,700 | 17,400 | 6,37,200 |
| 4/96—12/96 | 41,100 | 20,100 | 5,50,800 |

(ஆ) ஏற்கெனவே வழங்கப் பெற்ற உரிமம் 31-3-1997-ல் முடிவடைந்தது. மீண்டும் உரிமம் வழங்க ஒப்பந்தப் புள்ளிகள் மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. அதில் உணவு விடுதிக்கு ரூ.2,09,000 மாத உரிமத் தொகையும், பெட்டிக் கடைக்கு ரூ.71,000 மாத உரிமத் தொகையாகவும் கோரப்பட்டது. அதிக தொகை கோரியவர்களுக்கு உரிமம் வழங்கப்பெற்றது. உணவு விடுதி 2-4-1997 முதல் ஆரம்பிக்கப் பெற்று ஐந்து நாட்களுக்குப் பின் 7-4-1997-ல் மேற்படி உணவுவிடுதியில் எதிர்பார்த்த வியாபாரம் இல்லை எனக்கூறி உணவுவிடுதியைக் காலி செய்து மூன்று மாத காலத்திற்குள் ஒப்படைத்து விடுவதாகவும் அது போன்று பெட்டிக் கடையை உரிமம் ஏற்று நடத்தி வருபவரும் 29-4-1997-ல் கடையைத் தொடர்ந்து நடத்த இயலாது எனக்கோரி மூன்று மாத காலத்தில் காலி செய்து விடுவதாக ஒப்பந்தக்காரர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே மீண்டும் உரிமம் வழங்க ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்க நடவடிக்கை தொடரப்பெற்று வருகின்றது.

**79—**

## நிழற்குடை அமைத்தல்

**வினா 8856—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நிழற்குடை இல்லாத பேருந்து நிறுத்தங்களில் உடனடியாக நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது சென்னை மாநகரில் 2000 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. சுமார் 750 பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பேருந்து நிறுத்தங்களில் அதிகமான அளவில் பயணிகள் காத்துக் கொண்டிருக்கும் இடங்களில் நிழற்குடைகள் நிறுவப்படுகின்றன. எல்லாப் பேருந்து நிறுத்தங்களிலும் நிழற்குடைகள் நிறுவும் உத்தேசம் பல்லவன் மற்றும் டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகங்களுக்கு இல்லை.

**80—**

**பார்வையற்றோர், ஊனமுற்றோர் இலவசப் பயண விவரம்**

**வினா 10194—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996-97-இல் பார்வையற்றோர், ஊனமுற்றோர் சேலம் மாவட்டத்தில் நகரப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய எத்தனை பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1996-97-இல் பார்வையற்றோர் 197 நபர்களும், ஊனமுற்றோர் 162 நபர்களும் சேர்த்து மொத்தம் 359 நபர்கள் சேலம் மாவட்டத்தில் நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

**81—**

**சிந்தாமணி கூட்டுறவு அங்காடி ஊழியர்கள் விவரம்**

**வினா 4170—திரு. சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில் மொத்தம் எத்தனை ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள்?

(ஆ) அவர்கள் ஊதிய உயர்வு சம்பந்தமாக கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்திருக்கும் முடிவுகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் (சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி) 31-3-1997 அன்று நிலவரப்படி 833 ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள்.

(ஆ) மற்றும் (இ): கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை (சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி) உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைப் பணியாளர்களுக்கு ஊதிய சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் மேல் 10-3-1997-ஆம் நாளிட்ட அரசாணையில் 1-10-1994 முன் தேதியிட்டு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

**82—**

**பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறத்தல்**

**வினா 5000—திரு. சி. கோபு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட-ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, கருங்கால் ஊராட்சி-பசுவநாயினிகுப்பம், கெங்கநல்லூர் ஊராட்சி-சின்ன செங்கநல்லூர், குப்பம் ஊராட்சி-பழவேரி, இலவம்பாடி ஊராட்சி-கல்லாங்குளம், ஓங்கப்பாடி ஊராட்சி- சென்றங்கொட்டாய், மேல்மொணவூர் ஊராட்சி-மோட்டூர், சத்தியமங்கலம் ஊராட்சி-இராமாபுரம் ஆகிய கிராமங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி இராமாபுரம் கிராமத்தில் ஒரு பகுதிநேரக் கடை தற்பொழுது திறக்கப்பட்டுள்ளது. பிற இடங்களில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**83.—**

**பழம் பதனிடும் தொழிற்சாலைகள் விவரம்**

**வினா 5904—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் செயல்படும் பழம் பதனிடும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் தற்போது செயல்படுபவை எத்தனை? செயல்படாமல் உள்ளவை எத்தனை?

(இ) செயல்படாத தொழிற்சாலைகள் செயல்படாததற்கான காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் மூன்று பழம் பதனிடும் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன.

(1) கல்குளம், விளவங்கோடு தாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் பழம் பதனிடும் தொழிற்சாலை.



(2) கொல்லிமலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பழம் பதனிடும் தொழிற்சாலை.

(3) வட ஆற்காடு மாவட்ட பழம் பதனிடும் கூட்டுறவுச் சங்கத்தின் பழம் பதனிடும் ஆலை.

(ஆ) இவற்றில் தற்பொழுது செயல்படுபவை இரண்டு. செயல்படாமல் உள்ளது ஒன்று.

**(ஆ) செயல்படுபவை—**

(1) கல்குளம். விளவங்கோடு தாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் பழம் பதனிடும் தொழிற்சாலை.

(2) கொல்லிமலைவாழ் மக்கள் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பழம் பதனிடும் ஆலை

**செயல்படாமல் உள்ளது—**

வட ஆற்காடு மாவட்ட பழம் பதனிடும் கூட்டுறவுச் சங்கத்தின் பழம் பதனிடும் ஆலை.

**(இ) செயல்படாமைக்கான காரணம்—**

1. வட ஆற்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலையின் ஓர் அங்கமாக கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்சாலை துவக்கப்பட்டது. பின்னர் அந்த அலகு வடாற்காடு பழம் பதனிடும் கூட்டுறவுச் சங்கம் என ஓர் தனிச் சங்கமாக 30-7-1977 முதல் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை எதிர்பார்த்த அளவிற்கு இலாபகரமாகச் செயல்படவில்லை. 1969-70 முதல் 1976-77 வரையிலான 8 ஆண்டுகளில் ரூ. 41.49 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

2. நட்டத்தில் இயங்கும் தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்த இயலாததால், குத்தகை அடிப்படையில், 1977 ஜூலை முதல் 1995 ஜூன் வரை 18 ஆண்டுகளாக இந்திய தேசிய விவசாய கூட்டுறவு இணையத்தினரால் (NAFED) அத்தொழிற்சாலை நடத்தப்பட்டது. தேசிய இணையமும் இத்தொழிற்சாலையை நடத்தி மேற்கண்ட காலத்தில் ரூ. 2 கோடி அளவிற்கு நட்டமடைந்ததால் தொடர்ந்து நடத்த வேண்டாம் என முடிவெடுத்து 16-6-1995ல் சங்கத்திடம் தொழிற்சாலையை ஒப்படைத்துவிட்டது.

3. மீண்டும் பழம் பதனிடும் தொழிற்சாலையை சங்கம் ஏற்று நடத்த நிதி வசதி இல்லாததால் தொழிற்சாலையை ஏற்று நடத்த தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்துடன் (Tamil Nadu Agro Industries Corporation) தொடர்பு கொள்ளப்பட்டது. மேற்படி தொழிற்சாலையை கழகத்திற்குக் குத்தகைக்கு விடுவது குறித்து கழக அலுவலர்கள் சங்க அலுவலர்கள், கூட்டுறவு சங்கப் பதிவாளர் முன்னிலையில் 7-12-1996-ல் கலந்தாலோசித்து கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளனர் :—

(1) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் மற்றும் வட ஆற்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் ஏற்படுத்தப்படும் குத்தகை ஒப்பந்தம் நுட்பமாக ஆய்ந்து சரிபார்த்து மேற்கண்ட இரு நிறுவன வழக்கறிஞர்களால் இறுதியாக்கப்படவேண்டும்.

(2) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தொழில் முகவர் முதலில் முதலீடு செய்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(3) கழகம் சென்னை மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெற வழிவகைகளை செய்து கொள்ள வேண்டும்.

(4) வட ஆற்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தனி அலுவலர் மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ஆகியவர்களிடம் கலந்தாலோசித்து பின்னர் கழகம் இப்பொருள் குறித்து அதன் நிர்வாகிகள் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டும். பின்னர் அரசாணைகளைப் பெற முன் மொழிவுகள் அனுப்ப வேண்டும்.

குத்தகைத் தொகை 5 ஆண்டுகளுக்கும் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட வேண்டும்:—

(1) முதல் ஆண்டுக்கு ரூ. 3.50 இலட்சம்.

(2) 2-வது, 3-வது ஆண்டுகளுக்கு ரூ. 4.00 இலட்சம் (ஓர் ஆண்டிற்கு)

(3) 4-வது, 5-வது ஆண்டுகளுக்கு 4.50 இலட்சம் (ஓர் ஆண்டிற்கு)

5 ஆண்டுகளுக்கு பின், குத்தகைத் தொகை ஆண்டுக்கு ரூ. 7.5 இலட்சம் என உயர்த்தப்பட வேண்டும்.



மேற்படி முடிவுகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**84—**

## சம்பள உயர்வு வழங்குதல்

**வினா 7972— திரு. எஸ். டேவிட் செல்வின்**: மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் பட்டதாரிப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் வழங்கப்படுவதுபோல பட்டதாரிகளுக்குச் சம்பள உயர்வு (increment) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் அதன் நிர்வாகமும், வங்கிப் பணியாளர்களின் தொழிற்சங்கங்களும் 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில், எழுத்தர், தட்டச்சர்/சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் நியமனம் செய்யப்படுபவர்களில் பட்டதாரிப் பணியாளர்களின் ஆரம்ப நிலை சம்பளத்தை, அப்பணியிடத்திற்கான சம்பள விகிதத்தில் 3-வது நிலையில் நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இவ்வங்கியில பட்டதாரிப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டு வரப்படுகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளை சீரமைக்க, சம்பள சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவ்வங்கிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் இதர படிகள் மாற்றியமைக்கப்படுகின்றன. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளத்தைச் சீரமைக்க அமைக்கப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது சம்பள

[1997 அக்டோபர் 14

சீரமைப்புக்குழு இவ்வலுவகங்களில் பணிபுரியும் பட்டதாரிப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு (increment) வழங்க பரிந்துரை ஏதும் செய்யவில்லை. இந்நிலையில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் பட்டதாரிப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதுபோல மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணி புரியும் பட்டதாரிப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வழிவகை இல்லை.

**85—**

**மறைந்த தலைவர்கள் பெயர்களைச் சூட்டுதல்**

**வினா 2693—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூங்கா நகர் தொகுதியில் "கல்யாணபுரம் கேசவபிள்ளை பூங்கா" போன்ற பெயருடைய இடங்களுக்கு மறைந்த தலைவர்கள் பெயர்களைச் சூட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

சென்னை, பூங்கா நகர் தொகுதியிலுள்ள கல்யாணபுரம் கேசவபிள்ளை பூங்கா திட்டப் பகுதிகளில் வாழும் குடியிருப்புதாரர்களிடமிருந்து, அத்திட்டப் பகுதிகளுக்கு மாற்று பெயர் வைக்க கோரிக்கை பெறப்படின் அக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி நடவடிக்கை தொடரப்படும்.

**86—**

**பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குக் கட்டிடம்**

**வினா 6915—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்திலுள்ள சித்தூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்திலுள்ள சித்தூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டிக் கொடுக்கும் கருத்துரு தற்போது ஏதுமில்லை. ஏனெனில் சங்கத்திற்கு கட்டிடம் கட்டிக் கொள்ள சொந்த நிலம் ஏதுமில்லை. சங்கத்திற்கு கட்டிடம் கட்டிக்கொள்ள சொந்த நிலம் வாங்கினால் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொள்ள நிதிவசதி பெற ஒன்றியத்தின் மூலம் முயற்சி செய்யலாம்.

**87—**

**இடைநிலை ஆசிரியர்கள் விவரம்**

**வினா 6889—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சேலம், மேட்டூர் ஆகிய இடங்களில் பதிவு செய்துள்ள பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு இவ்வாண்டு மூப்புநிலை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் சேலம், மேட்டூர் ஆகிய இடங்களில் பதிவு செய்துள்ள பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் 31-3-1997 தேதிய நிலவரப்படி முறையே 1,675 நபர்களும், 302 நபர்களும் ஆவர்.

(ஆ) இவ்வாண்டு வேலை வாய்ப்பு எவ்வளவு பேருக்கு அளிக்கப்படும் என தற்போது கூற இயலாது. இவ்வாண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்படும் இடைநிலை ஆசிரியர்களின் காலியிட எண்ணிக்கையைப் பொறுத்துதான் கூற

இயலும். 1996ம் ஆண்டு நிலவரப்படி சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக 496 பேர்களும் மேட்டூர் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் வாயிலாக 162 பேர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**88—**

**தொழிற் பயிற்சி கல்வி பயின்றோர் விவரம்**

**வினா 7581— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி கல்வி (ஐ.டி.ஐ) முடித்து வேலை கிடைக்காதவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் அரசுத் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி முடித்து 31-12-1996 தேதிய நிலவரப்படி, வேலை வாய்ப்பு அலுவலக உயிர் பதிவேட்டில் காத்திருப்போர் எண்ணிக்கை 1,45,544.

(ஆ) தொழிற் பயிற்சி கல்வி பெற்றவர்களுக்கு முழு அளவில் வேலை கிடைக்க திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், அவர்களுடைய வேலை வாய்ப்பை அதிகப்படுத்தும் வகையில் தொழிற்பயிற்சி பயின்றவர்களுக்கு தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர்கள் சட்டம் 1961-ன்படி தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 1996-ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகம் வாயிலாக பணி மூப்பின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட தொழிற் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 266 ஆகும்.

**89—**

**கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்தும் திட்டம்**

**வினா 10572—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள கிளை சிறைச்சாலையை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரியிலுள்ள கிளை சிறையின் பாதுகாப்புச் சுவரை உயர்த்திக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் விரிவுபடுத்தும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**90—**

**அன்னியச் செலாவணி விவரம்**

**வினா 6929—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் தயாரிக்கப்படும் பின்னல் ஆடைகள் மற்றும் கம்பளி ரக ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் கடந்த ஆண்டு 1995-96-ல் கிடைத்த அன்னிய செலாவணி எத்தனை கோடி?

(ஆ) அந்த பின்னல் ஆடை உற்பத்தி மற்றும் விற்பனை வளர்ச்சி அடைய உற்பத்தியாளர்களுக்கு எத்தனை சதவீதம் அன்னியச் செலாவணி அனுமதிக்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் தயாரிக்கப்படும் பின்னல் ஆடைகள் மற்றும் கம்பளி ரக ஆடைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் 1995-96-ல் ரூ. 1747.75 கோடி அன்னியச் செலாவணி கிடைத்தது.

(ஆ) நூறு (100) விழுக்காடு.

91—

**பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் கடன் வழங்குதல்**

**வினா 7312—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) கடன் வழங்காமல் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றின் மாவட்டவாரி விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 1996-97 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக தொழில் முனைவோருக்கு 61 தனி நபர்களுக்கு ரூ. 35.36 இலட்சம் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன் வழங்காமல் நிலுவையில் உள்ள தனி நபர் கடன் விண்ணப்பங்கள் எண்ணிக்கை 14,612 ஆகும்.

(இ) மாவட்டவாரி விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண். (1) | மாவட்டம் (2) | விண்ணப்பங்கள் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | சென்னை | 1480 |
| 2. | அண்ணா } | 1250 |
| 3. | எம்.ஜி.ஆர். } | |
| 4. | தென் ஆற்காடு-வள்ளலார் | 456 |
| 5. | விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் | 243 |
| 6. | திருவண்ணாமலை-சம்புவராயர் | 336 |
| 7. | வட ஆற்காடு-அம்பேத்கர் | 1156 |
| 8. | தஞ்சாவூர் | 861 |
| 9. | திருவாரூர்-ஏ.டி. பன்னீர் செல்வம் | .. |
| 10. | நாகை-காயிதே மில்லத் | 984 |
| 11. | திருச்சிராப்பள்ளி | 1,449 |
| 12. | சேலம் | 1,297 |
| 13. | தர்மபுரி | 656 |
| 14. | ராஜாஜி | .. |
| 15. | திருநெல்வேலி-கட்டபொம்மன் | 341 |
| 16. | சிதம்பரனார் | 151 |
| 17. | நீலகிரி | 262 |
| 18. | கன்னியாகுமரி | 479 |
| 19. | புதுக்கோட்டை | 264 |
| 20. | பெரியார் | 351 |
| 21. | கோயம்புத்தூர் | 520 |
| 22. | இராமநாதபுரம் | 358 |
| 23. | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 329 |
| 24. | காமராஜர் | 649 |
| 25. | மதுரை | 460 |
| 26. | வைகை-வீரன் அழகுமுத்து | .. |
| 27. | திண்டுக்கல்-மன்னர் திருமலை | 280 |
| 28. | கரூர்-தீரன் சின்னமலை | .. |
| 29. | பெரம்பலூர்-திருவள்ளுவர் | .. |
| | மொத்தம் | **14,612** |

92—

### பழங்குடி மக்களுக்கு விடுகள் கட்டுதல்

**வினா 1436—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டம், பில்லூர் பகுதியிலுள்ள பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் வனக் கோட்டத்தில் 1997-98 ஆம் நிதியாண்டில் பில்லூரில் பழங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

93—

### சாலைகள் அமைத்தல்

**வினா 6838—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996-97 ஆம் ஆண்டில் காப்பு வனத்திற்கு உட்பட்ட பகுதிகளில் எத்தனை கி.மீ. தூரத்திற்கு எவ்வகையான சாலைகள் அமைக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

1996-97 ஆம் ஆண்டில் காப்புக் காட்டுப் பகுதியான திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் புதியதாக 1 கி.மீ நீள சாலை அமைக்கப்பட்டது. இது தவிர ரூ. 30 இலட்சம் செலவில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி மண்டலப் பகுதிகளில் மொத்தம் 19 கி.மீ தூர காப்புக் காட்டுச் சாலைகளுக்கு பல்வேறு வகையான மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.



94—

### பட்டுப் பண்ணையை விரிவாக்கம் செய்தல்

**வினா 6659—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியத்தில், கொல்லட்டி ஊராட்சியிலுள்ள பட்டுப் பண்ணையை விரிவாக்கம் செய்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தளி பஞ்சாயத்து யூனியனிலுள்ள கொல்லட்டியில் ஒரு பெரிய அளவு பட்டுப்பண்ணை, பட்டு வளர்ச்சித் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையின் மொத்தப்பரப்பு 868.55 ஏக்கர்கள் ஆகும். இப்பண்ணையில் தற்சமயம் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் மல்பரி பயிர் செய்யப்பட்டு புழு வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் 11 புழு வளர்ப்புக் கூடங்களும் ஒரு இளம்புழு வளர்ப்பு மையமும் கட்டப்பட்டு, புழு வளர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மல்பரி தோட்டங்களைப் பராமரிக்க 6 திறந்தவெளிக் கிணறுகளும், பத்து ஆழ் குழாய்க் கிணறுகளும் பாசனத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளன. இப்பண்ணையின் மூலம் 150 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இப்பண்ணையின் மூலம் சுமார் 70 இலட்சம் உள்நாட்டு இன விதைக் கூடுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர பண்ணை மேம்பாட்டிற்கான புதிய திட்டப் பிரேரணைகள் ஏதும் இல்லை.

95—

சிறுதொழில் தொடங்க வழங்கிய கடன்

**வினா 7210—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டு சிறு தொழில் தொடங்க சேலம் மாவட்டத்தில் எவ்வளவு நபர்களுக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

(ஆ) பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டு சிறு தொழில்கள் தொடங்க சேலம் மாவட்டத்தில் வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் பாரதப் பிரதமரின் ரோஜ்கர் யோஜனா திட்டம் மூலம் 3,978 நபர்களுக்கு ரூ. 9150.31 இலட்சங்கள் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) பயனடைந்தவர்கள் 3,978 நபர்கள்.

96—

சத்துணவுக் கூடங்கள் விவரம்

**வினா 9095—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சத்துணவுக் கூடங்கள் எத்தனை மகளிர்களுக்காக ஒதுக்கப்படும்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஒதுக்கப்படும்?

(இ) சங்ககிரி, எடப்பாடி, தாலுக்காவில் எத்தனை ஒதுக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சத்துணவுத் திட்ட மையங்கள் மகளிர்களுக்காக ஒதுக்கப்படுவதில்லை, இம்மையங்களில் பணியாளர் நியமனங்கள் மட்டுமே முற்றிலும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

97—

தமிழக அரசு அறிவிப்புகளை வெளியிட நாளேடு தொடங்குதல்

**வினா 3999—டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளை அதிகாரபூர்வமாக வெளியிட நாளேடு ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளை அதிகாரபூர்வமாக வெளியிட நாளேடு ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு தமிழரசு அலுவலகத்தில் ஏதும் இல்லை.

98—

மறுமணத் திட்ட உதவி

**வினா 7535—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ல் டாக்டர் தர்மாம்பாள் மறுமணத் திட்டத்தின் மூலம் எத்தனை பேருக்கு, எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

[1997 அக்டோபர் 14

(ஆ) சேலம் மாவட்டத்தில், எத்தனை பேருக்கு, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(இ) எடப்பாடி தொகுதியில், எத்தனை பேர் விண்ணப்பித்து இருந்தார்கள்? எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ல் டாக்டர் தர்மாம்பாள் மறுமண திட்டத்தின் மூலம் ஒரு நபருக்கு ரூ. 5,000 வீதம் 196 பேருக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஆ) ஒரு நபருக்கு ரூ. 5,000 வீதம் 5 பேருக்கு ரூ. 25,000 1996-97-ல் வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

**99—**

## குழந்தைகள் காப்பகத்திற்குக் கட்டிடம்

**வினா 7755—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும், அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வ. உ. சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டத்தில் செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் காப்பகம் தற்பொழுது மாதம் ரூ. 3,000 வாடகையில் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்காப்பகத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட தேவையான நிலத்தை சாயர்புரம் பகுதியில் கொடுப்பதற்குத் தயாராக உள்ளதாக திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வ. உ. சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. அன்னாரது அறிக்கையின் பேரில் நிலத்தை சமூகநலத் துறைக்கு மாற்றம் செய்த பின்பு சொந்தக் கட்டிடம் கட்ட பொதுப்பணித் துறை உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.



1997 அக்டோபர் 14]

**100—**

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா 9593—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள பழையாறு மீன்பிடித் துறைமுகப் பகுதி கடல் அரிப்பால் தடுப்புச் சுவர் இடிந்து விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகத் தடுப்புச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் படகு அணையும் மேடையின் கீழ்புறம் உள்ள ஆற்றுக்கரையோரமும் அதனைச் சார்ந்த துறைமுகப் பகுதியிலும் அரிப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியும்.

(ஆ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகப் பகுதியில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சமீபத்தில் அரிப்பேற்பட்டுள்ளது. இதனை, துறை அதிகாரிகள் சமீபத்தில் நேரிலும் பார்வையிட்டனர். இதனைச் சரி செய்ய தற்போது தேவையான கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

[1997 அக்டோபர் 14

## இரண்டாவது பட்டியல்

1—

### காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

**வினா 3102—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம், கபிஸ்த்தலம், அய்யம்பேட்டை, சுவாமிமலை ஆகிய காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பாபநாசம் தொகுதியில் சுவாமிமலை காவல் நிலையம் தவிர மற்ற எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஏற்கெனவே வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுவாமிமலை காவல் நிலையத்திற்கும் ஜீப் வாங்குவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஜீப் வழங்கப்படும்.

2—

### நேரு நகரில் 15 வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் மீது நடவடிக்கை

**வினா 6898—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜாஜி மாவட்டம், சமயசங்கிலி பஞ்சாயத்தில் உள்ள (பள்ளிப்பாளையம் ஒன்றியம்) சீராம்பாளையம் நேரு நகரில் வசித்து வந்தவர்களின் 15 வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) நேரு நகர் மக்கள் பள்ளிப்பாளையம் காவல் நிலையத்தில் இது தொடர்பாகக் கொடுத்துள்ள புகார் மனு மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பள்ளிப்பாளையம் காவல் நிலைய கு.எண். 70/79, ச.பி. 436 இ.த.ச. பிரிவில் இது சம்பந்தமாக வழக்கு, பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது. திட்டமான சாட்சியம் இல்லாததால் யாரும் கைது செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட வன்னியக் குடும்பங்களுக்கு நிலையான தீர்வு காண சீராம்பாளையத்துக்கு அருகிலேயே வேறொரு மாற்றுக் குடியிருப்பு நிலம் ஒதுக்குவது என முடிவு செய்து அதன்படி அருகிலுள்ள காடாச்சிநல்லூர் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பு மனைகள் அளந்து கொடுக்கப்பட்டுள்ளன.

3—

### தீயணைப்பு நிலையத்திற்குக் கூடுதல் வசதி

**வினா 7943—திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) தீயணைப்பு வண்டிக்குத் தேவையான டயர்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தீயணைப்பு நிலையம் உள்ளிட்ட பல தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதியுதவி கோரி அவ்வரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. நிதியுதவி பெறப்பட்டதும், நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் டயர்களின் தேவை குறித்த தேவைப் பட்டியல் மாநில பண்டகசாலையில் பெறப்பட்டு, தேவையான டயர்கள் வாகனப் பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் நடைமுறைச் சிக்கல்கள் எதுவும் இல்லை.

[1997 அக்டோபர் 14

4—

## தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

**வினா 8514—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரண்டை, செங்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் தற்பொழுது நிலமுள்ள 87 தீயணைப்பு நிலையங்கள் மற்றும் நிலமற்ற 76 தீயணைப்பு நிலையங்கள் ஆக மொத்தம் 163 தீயணைப்பு நிலையங்களுக்கு, நிலத்திற்கான செலவுத் தொகை ரூ. 15.20 கோடி உட்பட ரூ. 39.65 கோடி செலவில் நிரந்தரக் கட்டிடம் கட்ட இந்த அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. இதற்கென மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதியுதவி பெற்றவுடன் இவ்விடங்களுக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு நிரந்தரக் கட்டிடம் கட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

## பாசன நிலங்களின் பாதிப்பைத் தடுக்க நடவடிக்கை

**வினா 8806—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் வட்டம், சேமங்கலத்தில் அரசுக்குச் சொந்தமான ஏரியில் "என்டர்பிரைசிங் என்டர்பிரைசஸ்" என்ற தனியார் நிறுவனத்தால் கருப்புக்கல் வெட்டப்படுவதால், பாசனம் பெறும் நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், சேமங்கலம், கிராமம் புல எண் 24/1-இல் "பி" பகுதியில் 3.05 ஏக்கர் நிலத்திலும் "சி" பகுதியில் 2.00 ஏக்கர் நிலப் பாப்பிலும் திருவாளர் என்டர்பிரைசிங் நிறுவனத்திற்கு கருப்பு கிரானைட் கற்களை வெட்டி எடுக்க அரசு ஆணை எண் (3டி) 243 தொழிற்துறை, நாள் 1-9-1995-ல் தகுந்த பாதுகாப்பு முறை மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் 10 ஆண்டுக் காலம் குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளினாலும் சிறப்பு நிபந்தனைகளினாலும் குவாரிப் பணியினால் விவசாய நிலங்களுக்கும் ஏரியின் நீர் கொள்ளளவு திறனுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பாதிப்பு ஏற்படுவதாகத் தகவல்கள் அல்லது புகார்கள் வந்தால் உடனடியாக அதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

## மணல் ஏற்றுமதி விவரம்

**வினா 9395—திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணவாளக்குறிச்சியிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மணல் 1995-96-இல் எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதியாகியுள்ளது?

(ஆ) இதனால் எவ்வளவு அன்னியச் செலாவணி கிடைத்து உள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1995-96-ஆம் ஆண்டில் இங்கிலாந்து, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய வெளிநாடுகளுக்கு 12,124 மெட்ரிக் டன் இல் மனைட் மணலும் 80 மெட்ரிக் டன் கார்னட் மணலும் மணவாளக் குறிச்சி இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் மூலம் ஏற்றுமதி ஆகியுள்ளது.

(ஆ) இதனால் கிடைத்துள்ள அன்னியச் செலாவணி ரூ. 22.5 இலட்சம் ஆகும்.

7—

**பர்கூரில் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம்**

**வினா 9711—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி தீயணைப்பு நிலையம் மற்றும் பர்கூரில் உள்ள தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரக் கட்டிடம் எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் தற்பொழுது நிலமுள்ள 87 தீயணைப்பு நிலையங்கள் மற்றும் நிலமற்ற 76 நிலையங்கள் ஆக மொத்தம் 163 தீயணைப்பு நிலையங்களுக்கு, நிலத்திற்கான செலவுத் தொகை ரூ. 15.20 கோடி உட்பட ரூ. 39.65 கோடி செலவில் நிரந்தரக் கட்டிடம் கட்ட இந்த அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. இதற்கென மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதியுதவி பெற்றவுடன் இவ்விடங்களுக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு நிரந்தரக் கட்டிடம் கட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

**தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம்**

**வினா 10612—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவிலில் அமைந்துள்ள தீயணைப்பு நிலைய அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் தற்பொழுது நிலமுள்ள 87 தீயணைப்பு நிலையங்கள் மற்றும் நிலமற்ற 76 தீயணைப்பு நிலையங்கள் ஆக மொத்தம் 163 தீயணைப்பு நிலையங்களுக்கு ரூ. 15.20 கோடி நிலத்திற்கான செலவுத் தொகை உட்பட ரூ. 39.65 கோடி செலவில் நிரந்தரக் கட்டிடம் கட்ட இந்த அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. இதற்கென மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதியுதவி பெற்றவுடன் வெள்ளக்கோவில் தீயணைப்பு நிலையத்திற்கான நிலம் தேர்வு செய்து நிரந்தரக் கட்டிடம் கட்ட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

**அரசு உயர்நிலைப் பள்ளியில் அடிப்படை வசதி**

**வினா 5505—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, இடுவம்பாளையத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் கழிப்பறை வசதி உட்பட சில அடிப்படைத் தேவைகள்கூட நிறைவேற்றப்படவில்லை என்று அரசுக்குப் புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் தொகுதி, இடுவம்பாளையத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் கழிவறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

10—

### ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக்குதல்

**வினா 2295—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செந்துறை, வட்டத் தலைமை இடமாகிவிட்டதால் தற்போது உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக்கி விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் செந்துறை, ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. [அரசாணை (நிலை) எண் 311, சுகாதாரம், நாள்: 23-6-1997.]

11—

### பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம்

**வினா 5369—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடர்ந்து குறைந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் பிறப்பு இறப்பு பதிவுகளின் அடிப்படையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் ஆண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை விட குறைவாகத்தான் இருக்கிறது. இது சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:





| வருடம். (1) | ஆண் பிறப்பு விகிதம். (2) | பெண் பிறப்பு விகிதம். (3) | பிறப்பில் பாலின விகிதம். (4) |
|---|---|---|---|
| 1990 | 18.5 | 17.4 | 916 |
| 1991 | 18.9 | 17.7 | 912 |
| 1992 | 18.4 | 17.5 | 923 |
| 1993 | 18.1 | 17.0 | 913 |
| 1994 | 18.4 | 17.5 | 926 |

மேலும் 1995-ஆம் ஆண்டிற்கான அடிப்படை புள்ளி விவரங்கள் பற்றி ஊரகப் பகுதிகளில் நடத்தப்பட்ட (Survey) ஆய்வின்படி தமிழ்நாட்டில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 929 பெண் குழந்தைகள் பிறந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பெண்கள் பிறப்பு விகிதம் குறைவு பற்றிய காரணங்களைக் கண்டறிய தனிப்பட்ட ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. சாதாரணமாகவே மக்கள் தொகையில் ஆண்களைவிட பெண்கள் குறைவாகவே உள்ளனர். தமிழ்நாட்டில் பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 929 பெண்கள் என்ற அளவில்தான் உள்ளது. அதேபோலத்தான் பிறப்பு விகிதமும் உள்ளது. ஆனாலும் பொதுமக்கள் பெரும்பாலும் ஆண் குழந்தைகளையே அதிகம் பெற விரும்புவதும் சில இடங்களில் பெண் குழந்தைகளை கருவிலேயே தவிர்த்து வருவதும் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவாக இருப்பதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அரசு, ஆணோ பெண்ணோ ஒரு குழந்தையே போதும் எனவும், பெண் குழந்தையும் நம் குழந்தையே எனவும் விளம்பரங்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

12—

### பெருந்துறை அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

**வினா 5630—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 14

பெரியார் மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. படுக்கை வசதியை உயர்த்திடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**13—**

### மின்வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகம்

**வினா 6770—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டம், சாத்தான்குளம் பகுதியில் மின்வாரிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1-1-1995 வேலைப்பளு ஒப்பந்தப்படி, ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க, 4 உதவி செயற் பொறியாளர் அலுவலகம் அல்லது 3 உதவி செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஒரு கட்டுமான உதவி செயற் பொறியாளர் அலுவலகம் இருக்க வேண்டும். தற்பொழுது சிதம்பரனார் மின் பகிர்மான வட்டத்தில் 1-1-1995 நாளிட்ட வேலைப்பளு ஒப்பந்தப்படி 14 உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களும், 3 கட்டுமான உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின் அடிப்படையில் சிதம்பரனார் மின் பகிர்மான வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் 4 மட்டுமே. சிதம்பரனார் மின் பகிர்மான வட்டத்தில் ஏற்கெனவே 4 கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, சாத்தான்குளம் பகுதியில் மேலும் ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பது 1-1-1995 நாளிட்ட வேலைப்பளு ஒப்பந்தப்படி சாத்தியம் இல்லை.



1997 அக்டோபர் 14]

**14—**

### லேப் டெக்னீசியன் நியமித்தல்

**வினா 7251—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் உள்ள இரத்த பரிசோதனை நிலையத்திற்கு லேப் டெக்னீசியன் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையில் உள்ள இரத்தப் பரிசோதனை நிலையத்தில் உள்ள பரிசோதனைக் கூட நுட்பனர் நிலை-2, மாற்றுப்பணி (deputation) மூலம் பணியமர்த்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

**15—**

### துணை மின் நிலையம், பிரிவு அலுவலகம் அமைத்தல்

**வினா 8267—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, வீடூர் கிராமத்தில், 33/11 கி.வோ. துணை மின் நிலையமும், பிரிவு அலுவலகமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் தொகுதி, வீடூர் கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் ஆய்வில்

இல்லை. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான (1997-98 முதல் 2001-02) முடிய மின்சாரம் செலுத்துதல் மற்றும் பகிர்மானத்திற்கான பெருந் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அத்திட்ட ஆய்வின்படி மேலே குறிப்பிட்ட ஊரில் துணை மின் நிலையம் அமைக்கும் தேவை ஏற்படின் அது இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்படும். தற்சமயம் வீடூரில் பிரிவு அலுவலகம் அமைவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

**16—**

**திண்டிவனம் மின்வாரிய நகரப் பிரிவு அலுவலகம்**

**வினா 8270—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் மின்வாரிய நகரப் பிரிவு அலுவலகம் இரண்டு பிரிவு அலுவலகமாகப் பிரிக்கப்பட்டு புதியதாக ஒரு அலுவலகம் உருவாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டிவனம் நகர் பிரிவில் 9,131 மின் இணைபபுகள் உள்ளன. வேலைப் பளுவின்படி, 7,200 மின் இணைப்புகளுக்கு ஒரு பிரிவு அலுவலகம் அமைக்கவும், அதிகப்படியாக 8,400 மின் இணைப்புகள் வரை ஒரு பிரிவு அலுவலகத்தில் இருக்கலாம் எனவும் ஒப்பந்தம் உள்ளது. எனவே, மீதி உள்ள 731 மின் இணைப்புகளுக்காக திண்டிவனம் நகரப் பிரிவு அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து புதியதொரு அலுவலகம் உருவாக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

**17—**

**ஸ்கேன் கருவியை இயக்க டெக்னீஷியன்**

**வினா 8410—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நாகூர் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட ஸ்கேன் கருவியை இயக்க டெக்னீஷியன் நியமிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகூர் அரசு மருத்துவமனைக்கு அளிக்கப்பட்ட ஸ்கேன் கருவியை, மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள்தான் இயக்க வேண்டும். அதற்காக டாக்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எனவே, ஸ்கேன் கருவியை இயக்குவதற்குத் தனியாக டெக்னீஷியன் நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

**18—**

**அரசு மருத்துவமனைகளில் இன்சுலின் ஊசி மருந்து வழங்குதல்**

**வினா 8507—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீரிழிவு (சர்க்கரை) நோயாளிகள் பயனடையும் வண்ணம் தனியார் மருத்துவர்கள் கொடுப்பது போல் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பொதுமக்களிடையே இன்சுலின் ஊசி மருந்தை வழங்க ஆவன செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனைகளில் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வரும் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளே என்பதால் அவர்களிடம் ஊசி மருந்தைக் கொடுத்து அனுப்பினால் அதை அவர்கள் தக்க பாதுகாப்புடன் வைத்திருந்து பத்திரப்படுத்தி, பிறகு பயன்படுத்த இயலாதவர்களாகவே இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவரும் ஏழை மக்களின் பயணச் செலவு மற்றும் அலைச்சலைத் தவிர்க்கும் பொருட்டு இன்சுலின்

[1997 அக்டோபர் 14

ஊசி மருந்தை அவர்களிடமே வழங்குவது தவறாகவே முடியும். ஏனெனில், இன்சுலின் ஊசி மருந்து $4^{\circ}$ செ/இல் குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும். ஏழை மக்களிடம் **குளிர்சாதனப் பெட்டி** வசதி இருக்காது என்பதோடு பாமர மக்கள் **ஊசி** மருந்தினைப் பயன்படுத்த வேண்டிய அளவு தெரியாமல் **அதிக**மாகவோ, குறைவாகவோ பயன்படுத்தி விட்டால், அதன் பின்விளைவுகளும் விபரீதமாகவே முடியும். எனவே, அரசு மருத்துவமனைகளில் இன்சுலின் ஊசி மருந்தைப் பொது மக்களிடம் கொடுத்து அனுப்பி பயன்படுத்தச் செய்வது என்ற நிலை ஏற்கத்தக்கதல்ல.

**19—**

### டேனிடா திட்டத்தின் மூலம் கட்டிடம் கட்டுதல்

**வினா 8827—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டேனிடா திட்டத்தின் மூலம், எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

டேனிடா நலவாழ்வு பாதுகாப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில் திருவள்ளூர் மாவட்டம் சேர்க்கப்படவில்லை. ஆனால் 1996-97-ஆம் நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டவும் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதி மூலம் கட்டிடங்கள் கட்டப்படும். ஆதலால் டேனிடா நலவாழ்வு பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டும் அவசியம் ஏதுமில்லை.



1997 அக்டோபர் 14]

**20—**

### மின்சாரம் வழங்கிய மற்றும் பெற்ற விவரங்கள்

**வினா 9561—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த 1995-96-ல் பிற மாநிலங்களுக்கு வழங்கி உள்ள மின்சாரம் எவ்வளவு?

(ஆ) அதேபோல் பிற மாநிலங்களிலிருந்து பெற்ற மின்சாரம் எவ்வளவு?

(இ) மத்திய அரசு தொகுப்பிலிருந்து பெற்றுக் கொண்ட மின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் 1995-96 ஆம் வருடத்தில் கர்நாடக மாநிலத்திற்கு 8.081 மி.யூ. மின்சாரம் வழங்கியுள்ளது.

(ஆ) 1995-96-ல் தமிழ்நாடு மின்சார வாரியம் அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை.

(இ) 1995-96-ல் மத்திய மின் தொகுப்பில் இருந்து தமிழக மின் வாரியத்திற்கு உரிய பங்கீட்டளவான 6921.26 மி.யூ. மின்சாரத்திற்குப் பதிலாக 6385.53 மி.யூ. மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் நெய்வேலி அனல் மின் நிலையம் 1-ல் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட மின்சாரம் சேர்க்கப்படவில்லை. இம்மின் நிலையத்தில் இருந்து தயாராகும் மொத்த மின்சாரமும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு உரித்தானதால் அம்மின்சாரம் பூராவும் தமிழக மின்சார வாரியம் வாங்கிக் கொண்டுள்ளது. நெய்வேலி அனல் மின் நிலையம் 1-ல் இருந்து 1995-96-ல் தமிழ்நாடு மின்வாரியம் 2305 மி.யூ. மின்சாரத்தை கொள்முதல் செய்துள்ளது.

[1997 அக்டோபர் 14

**21—**

## நெய்வேலி அனல் மின்நிலைய மின் உற்பத்தி

**வினா 9562—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வருடந்தோறும் நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சார அளவு எவ்வளவு?

(ஆ) கர்நாடக மாநிலத்திற்கு வருடந்தோறும் வழங்கப்படும் மின்சார அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நெய்வேலி அனல் மின் நிலையம்-I செயல்படத் துவங்கிய நாளிலிருந்து இதில் உற்பத்தியாகும் மின்சாரம் அவர்களின் சொந்த உபயோகமான, அதாவது உரத் தொழிற்சாலை, செங்கற் தொழிற்சாலை, மின் நிலைய துணை உபகரணங்களை இயக்கத் தேவையான மின்சாரம் முதலியவற்றிற்குப் போக மீதமுள்ள மொத்த மின்சாரமும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த பத்து வருடங்களில் நெய்வேலி அனல் மின் நிலையம் I-ல் இருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்த மின்சாரத்தின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1985-86 | .. | 2,888 மி.யூ. |
| 1986-87 | .. | 3,019 மி.யூ. |
| 1987-88 | .. | 2,929 மி.யூ. |
| 1988-89 | .. | 297 மி.யூ. |
| 1989-90 | .. | 294 மி.யூ. |
| 1990-91 | .. | 2,940 மி.யூ. |
| 1991-92 | .. | 3,036 மி.யூ. |
| 1992-93 | .. | 2,025 மி.யூ. |



1997 அக்டோபர் 14]

| | | |
|---|---|---|
| 1993-94 | .. | 1,685 மி.யூ. |
| 1994-95 | .. | 2,190 மி.யூ. |
| 1995-96 | .. | 2,305 மி.யூ. |
| 1996-97 | .. | 2,282 மி.யூ. |

நெய்வேலி அனல் மின் நிலையம் 2-ல் உள்ள ஏழு மின் ஆக்கிகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று 210 மெ.வா. மின் ஆக்கிகள் முதல் பிரிவாகும். மற்ற நான்கு 210 மெ.வா. மின் ஆக்கிகள் இரண்டாவது பிரிவாகும். இவை யாவும் 1986 முதற்கொண்டு 1993-க்கு இடைப்பட்ட காலத்தில் செயல்படத் தொடங்கியவை ஆகும். இந்த மின் நிலையத்திலிருந்து 441 மெ.வா. தமிழக மின்வாரியத்திற்கும், மீதமுள்ள மின்சாரம், தென் பிராந்தியத்தின் மற்ற மாநிலங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மின் நிலையத்தில் உற்பத்தி ஆகும் மின்சாரம் தென் பிராந்திய மின் வாரியத்தால் பிராந்திய கணக்கீட்டு விதிகளுக்கு உட்பட்டு மாநிலங்களுக்குப் பிரித்தளிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பத்து வருடங்களில், நெய்வேலி அனல் மின் நிலையம் 2-ல் இருந்து கொள்முதல் செய்த மின்சாரத்தின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1986-87 | .. | 769 மி.யூ. |
| 1987-88 | .. | 1,699 மி.யூ. |
| 1988-89 | .. | 1,034 மி.யூ. |
| 1989-90 | .. | 620 மி.யூ. |
| 1990-91 | .. | 966 மி.யூ. |
| 1991-92 | .. | 1,141 மி.யூ. |
| 1992-93 | .. | 1,393 மி.யூ. |
| 1993-94 | .. | 1,940 மி.யூ. |
| 1994-95 | .. | 2,134 மி.யூ. |
| 1995-96 | .. | 2,272 மி.யூ. |
| 1996-97 | .. | 2,314 மி.யூ. |

[1997 அக்டோபர் 14

(ஆ) கர்நாடக மாநிலத்திற்கு கடந்த பத்து வருடங்களாக வழங்கியுள்ள மின்சாரத்தின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன:

| | | |
|---|---|---|
| 1985-86 | .. | 84,252 மி.யூ. |
| 1986-87 | .. | 59,500 மி.யூ. |
| 1987-88 | .. | 33,796 மி.யூ. |
| 1988-89 | .. | .. |
| 1989-90 | .. | .. |
| 1990-91 | .. | .. |
| 1991-92 | .. | .. |
| 1992-93 | .. | .. |
| 1993-94 | .. | .. |
| 1994-95 | .. | .. |
| 1995-96 | .. | 8,081 மி.யூ. |
| 1996-97 | .. | .. |

**22—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் வராத குறை**

**வினா 10546—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஏலகிரி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் வாரம் ஒருமுறை கூட மருத்துவர் வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்த ஏலகிரி கிராமம் நல்லம்பள்ளி ஒன்றியத்தைச் சார்ந்த பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டில் வரும் கிராமமாகும். ஏலகிரி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இயங்கவில்லை. அங்கு ஏலகிரி கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு துணைச் சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. துணைச் சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் களப்பணி ஆய்வுக்குச் செல்லும்போது, ஏலகிரி துணைச் சுகாதார நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டு வருகிறார்.

**23—**

**மகப்பேறு மருத்துவரை நியமித்தல்**

**வினா 11169—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, மூக்குப்பேரியில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதியைச் சார்ந்த மூக்குப்பேரியில் அரசு மருந்தகம் செயல்பட்டு வந்தது. இது 1987-ல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டது. இங்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடம் ஒன்று. இதில் பொது மருத்துவர் ஒருவர் பணிபுரிகிறார். இவரே மகப்பேறு மருத்துவத்தையும் கவனிக்கிறார். மகப்பேறு மருத்துவர் பணியிடம் ஒப்பளிப்பு கிடையாது.

[1997 அக்டோபர் 14

24—

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்**

**வினா *6944—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் டிசம்பர் 1996-இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் விபரம் யாது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1996-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாக கடலூர் மாவட்டத்திலுள்ள புவனகிரி தொகுதியில் பயிர்கள் பாதிக்கப்பட்டன. வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு நிவாரணமாக ரூபாய் 1,10,18,109-ம், பாதிக்கப்பட்ட கடலைப் பயிருக்கு ரூ. 1,43,498-ம் ஆக மொத்தம் ரூ. 1,11,61,607 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் இத்தொகுதியில் 12,227 விவசாயிகள் நிவாரணம் பெற்று பயனடைந்துள்ளனர்.

25—

**குளத்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்**

**வினா 11129—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995-96-ஆம் ஆண்டு கடும் வறட்சிக்கு இலக்காகி இருக்கும் குளத்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1995-96-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டம் உட்பட சில மாவட்டங்கள் முழுமையாகவும், மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள சில வட்டங்கள் பகுதியாகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக



1997 அக்டோபர் 14]

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. குளத்தூர் தொகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தில் அடங்கியுள்ளதால், அத்தொகுதியை 1995-96-ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பதற்கான வினா எழுவதற்கு தற்போது வாய்ப்பில்லை.

26—

**விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 11284—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக உபரி நிலத்திற்கான முழுப்பணத்தை செலுத்திப் பெற்ற விவசாயிகளுக்கு உடனடியாகப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் மிகையாக அறிவிக்கப்பட்ட நிலங்கள், 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (மிகை நில விநியோகம்) விதிகளின்படி மிகை நிலத்தைப் பெற்ற ஒப்படைதாரர்களுக்கு, அவர்கள் தெரிவிப்பின் பேரில் (Option) நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்புத் தொகையினை முழுவதையும் ஒரே தவணையாகவோ அல்லது ஒரு தவணை செலுத்திய பிறகோ, நிபந்தனையுடன் கூடிய பட்டா உடனடியாக வழங்கப்படுகிறது.

27—

**சாலை வசதி செய்தல்**

**வினா 2271—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், வட்டுவனஹள்ளி ஊராட்சி, ஜெல்மாரம்பட்டி, எலுமல் மந்தை, நாகனம்பட்டி, நாய்க்கனஹள்ளி, பருவதனஹள்ளி ஊராட்சி காட்டுக் கொல்லை,

[1997 அக்டோபர் 14

தென்னகுட்டஹள்ளி ஊராட்சி, பருத்திக்காட்டுத் திண்ணை, கந்தசாமி கொட்டாய், கஞ்சல் நத்தம் ஊராட்சி, கொங்காரப்பட்டி, பிளியனூர் ஊராட்சி தாளப்பள்ளம் - கருங்கனூர் வரை ஆகிய இடங்களுக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு சாலை வசதி இந்த நிதி ஆண்டில் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு செய்து தர முயற்சி மேற்கொள்ளப்படும்.

கஞ்சல்நத்தம் ஊராட்சி, கொங்காரப்பட்டி கிராமத்திற்கு, மூலபெல்லூர் கிராமத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். இச்சாலை வனத்துறைக்குச் சொந்தமானதாகும். இக்கிராமத்திற்கு கால்நடை பாதையாகத்தான் நடந்து செல்ல வேண்டும். எனவே, மேற்கண்ட கிராமத்திற்கு சாலை வசதி செய்ய ஒன்றியத்தின் விதிமுறைகளில் இடம் இல்லை.

**28—**

**மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா 3701—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, கஸ்பா பகுதி முகைதீன்கான் லே-அவுட்டில் மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கஸ்பா முகைதீன்கான்லே-அவுட்டிலே மருத்துவமனை கட்டிடம் ஐ.பி.பி. 5 திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறை மூலம் கட்டப்பட்டு பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை. தற்சமயம் சுற்றுச் சுவர் கட்ட



1997 அக்டோபர் 14]

உத்தேசமாக ரூ. 1.00 லட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி நிதியிலிருந்து வேறு திட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**29—**

**குடிநீர் வழங்க புதிய குழாய்கள் அமைத்தல்**

**வினா 3871—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர பழைய குழாய்களை நீக்கி புதிய குழாய்களை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திண்டிவனம் நகரத்தில் 6.20 கி.மீ. நீளத்தில் பல்வேறு விட்டமுள்ள பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு பயனில் உள்ளன. ஏற்கெனவே நகரில் அமைந்துள்ள 25.24 கி.மீ. நீளமுள்ள பகிர்மான குழாய்களும் பயனில் உள்ளன. மேற்கூறிய திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டிற்கான ஒப்புதல் பெறப்பட்ட பின் புதியதாக பகிர்மான குழாய்கள் பதிக்கும்போது நகரின் எல்லா பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய ஏற்கெனவேயுள்ள சிறிய விட்டமுள்ள குழாய்கள் மாற்றி அமைக்கப்படும்.

**30—**

**மூக்கனூர் சாலையை மூங்கில்துறைப்பட்டுச் சாலையுடன் இணைத்தல்**

**வினா 4165—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம் ஒன்றியம், மூக்கனூர் சாலையை மூங்கில்துறைப்பட்டுச் சாலையுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை மொத்தம் 4.60 கி.மீ. நீளம் கொண்டதாகும். இதில் 2.60 கி.மீ. சங்கராபுரம் ஒன்றியத்திலும் 2.00 கி.மீ. சாலை ரிஷிவந்தியம் ஒன்றியத்திலும் உள்ளது. இதில் சங்கராபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த 2.60 கி.மீ. சாலைப் பணி ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வேலை உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ரிஷிவந்தியம் ஒன்றியத்தைச் சேர்ந்த 2.00 கி.மீ. சாலைப்பணி இந்த ஆண்டு மேற்கொள்ள நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

**31—**

### இறுதிச்சடங்கு செய்யுமிடத்தில் மேற்கூரை

**வினா 4761—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் பாலாற்றங்கரையில் இறுதிச்சடங்கு செய்யும் இடத்தில் மேற்கூரை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பாலாற்றங்கரையில் ஈமச் சடங்கு செய்யுமிடத்தில் இரண்டாவது பழைய கொட்டகையில் மேற்கூரை பழுதுபட்டுள்ளது. ரூ. 50,000-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தற்பொழுது பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் முழுவதும் சீர் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.





**32—**

### சுகாதாரப் பணியாளர்களுக்கு சொந்தமாக வீடு

**வினா 4809—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுகாதாரப் பணியாளர்களுக்கு சொந்தமாக வீடு கட்டிக் கொடுக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சுகாதாரப் பணியாளர்களுக்கு சொந்தமாக வீடு கட்டிக் கொடுக்கும் சிறப்புத் திட்டம் திருப்பூர், மேட்டுப்பாளையம், இராமநாதபுரம், சிவகாசி ஆகிய நகராட்சிகளில் மேற்கொள்ள பரிசீலனையில் உள்ளது. பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் இத்தகைய சிறப்புத் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**33—**

### சிறுபாலம் கட்டுதல்

**வினா 4885—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாச்சாலியூர்-அக்கரைப்பட்டி சாலையில் கி.மீ. 4/6 என்னுமிடத்தில் ஒரு சிறு பாலம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாச்சாலியூர்-அக்கரைப்பட்டி சாலை. கி.மீ. 4/6 என்னுமிடத்தில் சிறுபாலம் கட்ட

[1997 அக்டோபர் 14

10வது நிதிக்குழு திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியக் குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ரூ. 7.20 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**34—**

### சாலையின் குறுக்கே சிறுபாலம்

**வினா 4886—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம் மாமரத்தானூர் சாலையின் குறுக்கே ஒரு சிறுபாலம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், மாமரத்தானூர் சாலையின் குறுக்கே ஒரு சிறுபாலம் கட்ட 1997-98 ஆம் நிதியாண்டில் (E.A.S.) வேலை உறுதியளிப்பு திட்டத்தில் எடுத்து நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**35—**

### கீழ்ச்சாவடி சாலையைப் புதுப்பித்தல்

**வினா 5294—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் நடராஜபுரம் கீழ்சாவடி சாலையைப் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், நடராஜபுரம்-கீழ்சாவடி சாலையை புதியதாக அமைக்கும் பணி 1997-98-ஆம் நிதியாண்டில், நிலையை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும்.

**36—**

### நவீன கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்தல்

**வினா 5789—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சி நிர்வாகத்தில் அமைக்கப்படும் நவீன கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுவதைக் கைவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அமைக்கப்படும் நவீன கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுவதைக் கைவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஊரகப் பகுதிகளில் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் ஊரக சுகாதார திட்டத்தில் தனிநபர் கழிப்பிடங்கள், பள்ளிகளில் சுகாதார கழிப்பிடங்கள் ஆகியவை கட்டப்படுகின்றன. இவைகளின் உபயோகத்திற்காக எந்தவிதமான கட்டணங்களும் வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1997 அக்டோபர் 14

37—

### பழுதடைந்த சாலையை செப்பனிடுதல்

**வினா 5913—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட மோட்டூர், வெடிகாரன்பாளையம் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிக்கு இந்த நிதியாண்டில் மாநில அரசின் நிதிப்பங்கீட்டின் மூலமாக ரூ.34,38,577-ம், 10வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.3,82,203-ம் வழங்கப்பட உள்ளதால் மேற்காணும் தொகையில், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட மோட்டூர், வெடிகாரன்பாளையம் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிட தேவையான தொகையினை ஈடு செய்து மேற்படி சாலைப் பணியினை செய்து முடிக்குமாறு எடப்பாடி நகராட்சி ஆணையருக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

38—

### குறிச்சி ஊராட்சியில் சாலை அமைத்தல்

**வினா 6609—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானி தொகுதியில் அமைந்துள்ள குறிச்சி ஊராட்சியில் செல்லிக்கவுண்டனூர்-சீலம்பட்டி வரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பவானி தொகுதியில் அமைந்துள்ள குறிச்சி ஊராட்சியில் செல்லிகவுண்டனூர் முதல் சீலம்பட்டி வரையுள்ள சாலையில் சுமார்



1997 அக்டோபர் 14]

400 மீ. அளவுள்ள பகுதி தனி நபர் பட்டா நிலத்தின் வழியே செல்கிறது. மேற்படி தனியார் நிலத்தினை கையகப்படுத்தியோ அல்லது அவர் தானமாக கொடுத்தாலோதான் சம்பந்தப்பட்ட இடத்தில் சாலை அமைக்க இயலும்.

39—

### ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை

**வினா 6963—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நகராட்சிப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படாமல், தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகள் கடந்த 18-11-1996-ஆம் தேதி முதல் அகற்றப்பட்டு வருகிறது. நகராட்சி சாலைகள் பேருந்து நிலைய பகுதிகள், தினசரி அங்காடி, ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த தற்காலிக மற்றும் நிரந்தர ஆக்கிரமிப்புகள் முற்றிலும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கொங்கு பிரதான சாலை, கே.வி.ஆர். நகர் பகுதி, ராயபுரம் பிரதான சாலை, வாலிபாளையம் யூனியன் மில் சாலை, குகையாபுரம் பிரதான சாலை, பீமாண்டி சாலை, ராம்கிருஷ்ணபுரம் பிரதான சாலை, ஓடைக்காடு போன்ற நகராட்சி சாலைப் பகுதியில் தற்காலிக ஆக்கிரமிப்புகள் 962-ம் நிரந்தர ஆக்கிரமிப்புகள் 120-ம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) மீண்டும் ஆக்கிரமிப்புகள் செய்யக்கூடாதெனவும், அப்படி செய்தால் நகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஒலிபெருக்கி மூலம் நகர் முழுவதும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும்

அலுவலக உதவியாளர்கள் வெளி ஆய்வின்போது ஆக்கிரமிப்பு இருப்பின் அலுவலகம் மூலமாக உடனடியாக அப்புறப்படுத்த அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**40—**

**தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைத்தல்**

**வினா 6986-திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 7வது வார்டு, க. புதுர். மேற்குப் பகுதியில் வெள்ளரி வெள்ளி பிரிவு ரோடிலிருந்து எட்டிக்குட்டை முனியப்பன் கோவில் வரையிலும் மற்றும் காடகார வளவிலும் தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். 1997-98-ம் ஆண்டின் அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், எடப்பாடி நகராட்சிக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.2.00 லட்சத்தில், முன்னுரிமை அடிப்படையிலும், நகர்மன்ற ஒப்புதல் பேரிலும், நகரில் ஐம்பது தெரு விளக்குகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள பணிக்காக 25-06-1997-ல் மின் வாரியத்திற்கு மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதில் வார்டு எண் 7-ல் இரண்டு தெரு விளக்குகள் அமைக்கும் பணியும் உட்பட்டதாகும். எடப்பாடி நகரின் ஏழாவது வார்டில் தெரு விளக்குகள் அமைக்கும் பணி அடுத்து வரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

**41—**

**மின் கம்பங்கள் அமைத்தல்**

**வினா 6993—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





எடப்பாடி நகரம். ஆலச்சம்பாளையம் வடக்குத் தெருவில் மின் கம்பங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். அடிப்படை வசதிகள் திட்டம், 1997-98-ன் கீழ் எடப்பாடி நகராட்சி, ஆலச்சம்பாளையம் வடக்குத் தெருவில் புதிய தெரு விளக்குகள் அமைக்க 25-06-1997-ல் ரூ.7,280 தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தி, விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே மின் வாரியத்தினால் தெரு விளக்குகள் விரைவில் அமைக்கப்படும்.

**42—**

**சாலை செப்பனிடல்**

**வினா 6999—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், 4-வது வார்டு, மோட்டூர் 1-வது வார்டு, கீச்சன்காடு, முனியன் கொட்டாய், மூப்பனூர் வழியாக எடப்பாடி ஆனைப்பள்ளம் வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிக்கு இந்த நிதியாண்டில் மாநில அரசின் நிதிப் பங்கீட்டின் மூலமாக ரூ.31,38,577-ம் 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.3,83,203-ம் வழங்கப்பட உள்ளதால் மேற்காணும் தொகையில் எடப்பாடி நகரம் 4-வது வார்டு, மோட்டூர் 1-வது வார்டு கீச்சன்காடு, முனியன் கொட்டாய், மூப்பனூர் வழியாக எடப்பாடி ஆனைப்பள்ளம் வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட தேவையான தொகையினை ஈடு செய்து மேற்படி சாலைப் பணியினை செய்து முடிக்குமாறு எடப்பாடி நகராட்சி ஆணையருக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

43— [1997 அக்டோபர் 14

## மெர்க்குரி விளக்கு அமைத்தல்

**வினா 7003—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், ஆலச்சம் பாளையம் காட்டூரிலுள்ள ஊர் மையப் பகுதியில் இருக்கும் முருகன் கோவிலுக்கு எதிரே ஒரு மெர்க்குரி விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். 1997-98-ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தில், எடப்பாடி நகரின் முக்கிய பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மின் வாரியத்திற்கு 25-06-1997-ல் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த சோடியம் விளக்குகள் அமைக்கும்பணி முடிக்கப்பட்ட பின், அங்கிருந்து மாற்றப்படும் மெர்க்குரி விளக்குகள் ஆலச்சம் பாளையம் காட்டூரிலுள்ள ஊர் மையப் பகுதியில் இருக்கும் முருகன் கோயிலுக்கு எதிரே அமைக்கப்படும்.

44—

## சாலை அமைத்தல்

**வினா 7038—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு அம்மன் கோவில்காடு மற்றும் கூடக்கல்லிலிருந்து கோவில் பாளையம், கூப்புக்காடு, மதுரகாளியம்மன் கோயில், வேத காளிப்பள்ளம் வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு அம்மன்கோவில் காடு மற்றும் கூடக்கல்லிலிருந்து கோவில்



1997 அக்டோபர் 14]

பாளையம், கூப்புக்காடு, மதுரகாளியம்மன் கோயில், வேத காளிப்பள்ளம் வரை சாலை அமைக்க ரூ.15 இலட்சம் செலவாகும். நிதிநிலைமையைக் கருதி தற்போது வினாவில் கோரப்பட்ட சாலையினை அமைக்க இயலாது.

45—

## முனியப்பன் கோவில் ஓடையில் சிறிய பாலம்

**வினா 7436—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் சித்தூர் வழி கீச்சங்காடு, முப்பலூர் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள அருந்ததி தெருவின் பக்கம் முனியப்பன் கோவில் ஓடையில் ஒரு சிறிய பாலம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி முதல் சித்தூர் வழி கீச்சங்காடு, முப்பலூர் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள அருந்ததி தெருவின் பக்கம் முனியப்பன் கோவில் ஓடையில் ஒரு சிறிய பாலம் கட்டும் பணி அடுத்து வரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

46—

## பேரூராட்சிகளை ஊராட்சி மன்றங்களாக மாற்றுதல்

**வினா 7860—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியிலுள்ள, கிராமங்கள் நிறைந்த, தாடிக் கொம்பு மற்றும் அகரம் பேரூராட்சிகளை ஊராட்சி மன்றங்களாக மாற்றிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள ஆண்டு வருமானம் மற்றும் மக்கட் தொகை குறைவாகவுள்ள பேரூராட்சிகளை மேஜர் பஞ்சாயத்துக்களாக மாற்றியமைக்க அரசு முடிவு செய்து, அனைத்துப் பேரூராட்சித் தலைவர்களையும் மன்றத்தின் தீர்மானங்கள் பெற்று அனுப்புமாறு கேட்கப்பட்டது. மேஜர் பஞ்சாயத்துக்களாக மாறுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் பேரூராட்சிகளின் தீர்மானங்கள் அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன், அவைகளை மேஜர் பஞ்சாயத்துக்களாக மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**47—**

## சாலையில் பாலம் அமைத்தல்

**வினா 7872—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி பேரூராட்சி, மூலைக்கரைப்பட்டி சாலையிலிருந்து ஆலடிபுதூருக்கு செல்கின்ற சாலையில் இரண்டு இடங்களில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரி பேரூராட்சி மூலக்கரைப்பட்டி சாலையிலிருந்து ஆலடிபுதூருக்குப் பிரிந்து செல்லும் சாலை சுமார் 3 கி.மீ. உள்ளது. இந்தச் சாலையில் இரண்டு இடங்களில் பள்ளமான பகுதிகள் உள்ளன. பாலம் அமைப்பதில் அதிக செலவு ஏற்படும். இருப்பினும் 1997-98 நடப்பு நிதியாண்டில் 2 தாம்போகி ரூ.50,000 மதிப்பீட்டில் அமைக்க பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**48—**

## பொதுக் கழிப்பிடம் பழுதுபார்த்தல்

**வினா 7873—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி பேரூராட்சி, காமராஜர் தெருவிலுள்ள பொதுக் கழிப்பிடத்தை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரி பேரூராட்சி, காமராஜர் தெருவில் உள்ள கழிப்பிடம், 1997-98-ஆம் ஆண்டில், இப்பேரூராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள திட்ட நிதியைக் கொண்டு பராமரிப்புப் பணி செய்து முடிக்கப்படும்.

**49—**

## வாடகை சீருந்து நிறுத்த தனியிடம்

**வினா 7874—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி பேரூராட்சி, நாங்குனேரியில் வாடகை சீருந்து நிறுத்துவதற்கு தனியிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரி பேரூராட்சி பகுதியில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தால் வாடகை சீருந்து நிறுத்துவதற்குத் தனி இடம் அமைக்க இயலாது.

[1997 அக்டோபர் 14

50—

## புளியரை தாட்கோ நகரில் சமுதாயக் கூடம்

**வினா 9481—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், புளியரை தாட்கோ நகரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 6 ஊராட்சிகள் தான் உள்ளன. 1994-95-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே 5 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டு விட்டன. இதுவே போதுமானது என்பதால் புளியரை தாட்கோ நகரில் சமுதாய நலக் கூடம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

## நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்

**வினா 9645—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி, சுரண்டை, மேலகரம், புதூர், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதிகளிலும், செங்கோட்டை நகராட்சிப் பகுதிகளிலும் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி, சுரண்டை, மேலகரம், புதூர், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதிகளிலும், செங்கோட்டை நகராட்சிப் பகுதிகளிலும் பிரதமரின் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத் திட்டப்படி நகரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மக்கட் தொகை இல்லை என்பதால் இப்பகுதிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த இயலாது.

52—

## இராஜாஜி பூங்கா சீர்படுத்துதல்

**வினா 9941—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரிலுள்ள இராஜாஜி பூங்கா மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகராட்சியில் உள்ள இராஜாஜி பூங்கா, பேருந்து நிலையத்தின் அருகிலுள்ளது. பேருந்து நிலையத்தின் இரண்டாவது கட்டுமானப் பணி நடைபெற்று வருவதால் பேருந்து நிலையத்தில் ஏற்கனவே கடை வைத்திருந்த ஏலதாரருக்கு பூங்காவிற்கு பாதகமில்லாமல் ஓரங்களில் கடைகள் வைத்துக்கொள்ள தற்காலிகமாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன் இராஜாஜி பூங்காவின் ஓரத்திலுள்ள கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு சீர்திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

53—

**பேரூராட்சியின் வருமானம் அதிகரிக்கும் செயற்குறிப்பு**

**வினா 10129—டாக்டர் அ. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களில் கடைகள் கட்டப்பட்டு பேரூராட்சியின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உளுந்தூர்பேட்டை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் 20 கடைகள் உள்ளன. தாட்கோ மூலம் 10 கடைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் கடைகள் கட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

54—

**பழத்தோட்டம் பற்றிய விவரம்**

**வினா 7804—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், சுண்டக்காம்பாளையம் ஊராட்சியில் பழத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் உள்ளது?

(இ) இதன் பலன்கள் ஊராட்சிக்குக் கிடைக்கிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறை வட்டம், சுண்டக்காம்பாளையம் ஊராட்சியில் பழத்தோட்டம் அமைக்கப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) வினா எழவில்லை.





55—

**பாக்குச் சாகுபடியின் உற்பத்தி, நிலப்பரப்பு அதிகரித்தல்**

**வினா 9771—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் பாக்குச் சாகுபடி செய்கின்ற நிலப்பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் 124 எக்டேர் பரப்பில் பாக்குச் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து ஆண்டிற்கு 161 டன்கள் பாக்கு விளைகின்றது. இப்பகுதியின் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்கிடும் நோக்கத்தில் "பாக்கு அபிவிருத்தித் திட்டம்" செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் தரமான உயர் விளைச்சல் தரக்கூடிய பாக்குக் கன்றுகள் குற்றாலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாக்குக் கன்றுகள் ஒன்றின் விலை ரூ. 1 வீதம் வேளாண் பெருமக்களுக்கு தோட்டக்கலைத் துறையால் விநியோகம் செய்யப்படுகின்றது. இப்பகுதியில் பாக்குச் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்கிட 1996-97-ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 15,000 பாக்குக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான நிதி உதவி மைய அரசு மூலம் பெறப்படுகின்றது. 1997-98-ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து நிதி உதவி கிடைத்தவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

56—

**விதைகளை சிறுதளைப் பைகள் மூலம் விவசாயிகளுக்கு விற்றல்**

**வினா 9774.—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டத்தில் உயர் விளைச்சல் தரக்கூடிய வீரிய தக்காளி மற்றும் கத்திரி விதைகளை சிறுதளைப் பைகள் மூலம் விவசாயிகளுக்கு விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டத்தில் 'காய்கறி அபிவிருத்தித் திட்டம்' (Scheme for Development of Vegetables) செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் காய்கறி விதைகள் அடங்கிய சிறுதளைப் பைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. ரூ. 150 மதிப்புள்ள சிறுதளைப் பைகள் ஒவ்வொன்றும் ரூ.10 வீதம் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் 1996-97-ஆம் ஆண்டில் உயர் விளைச்சல் தரக்கூடிய வீரிய தக்காளி ரகத்தில் 100 சிறுதளைப் பைகளும் வீரிய கத்திரி விதைகள் அடங்கிய 20 சிறுதளைப் பைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1997-98-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டம் மைய அரசின் நிதி உதவிக்குத் தக்கவாறு செயல்படுத்தப்படும்.

**57—**

### வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணிகள்

**வினா 10241—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1997-98-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தமிழ் நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகளுக்காக நிதி அளிக்கப்பட்டுள்ளது:



(ரூபாய் இலட்சம்)

| | |
|---|---|
| (1) கால்நடைப் பராமரிப்பு | 2.48 |
| (2) ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம். | 235.92 |
| (3) வேளாண்மை விரிவாக்கத் திட்டம் | 64.48 |

**58—**

### கீரனேரி ஏரியை தூர்வாரி சீர் செய்தல்

**வினா 3891—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழையூர் ஒன்றியம் கீரனேரி ஏரி தூர்வாரி சீர் செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

கீரனேரி ஏரியின் ஒரு பகுதியில் 1994 ஆம் ஆண்டு மண்வாரி இயந்திரம் மூலம் தூர்வாரி கரை பலப்படுத்தப்பட்டது. எஞ்சிய தேவையான இடங்களில் வரும் கோடையில் (1997-98) மண்வாரி இயந்திரம் மூலம் தூர்வாரி கரையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**59—**

### கால்வாய் கரைகளை உறுதிப்படுத்துதல்

**வினா 6603—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பவானி பாசனக் கால்வாயில் கரைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கரைகளை வலுப்படுத்திட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

கீழ்பவானி பாசனக் கால்வாயின் கரைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கீழ்பவானி பிராதன கால்வாய் 200 கி.மீ. நீளமுடையது.

218442

[1997 அக்டோபர் 14

இதில் பலவீனம் அடைந்த பகுதிகளை அவ்வப்போது தெரிவு செய்து நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றாற்போல் முன்னுரிமை அடிப்படையில் கரைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்று கிளை வாய்க்கால்கள் 700 கி.மீ. நீள பகுதிகளில் ஆக்கிரமிப்பை அகற்றவும், வலுவிழந்த பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப அவ்வப்பொழுது பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் வாய்க்கால் மூடப்படும் காலத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றாற்போல் கரைகளைப் பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**60—**

**மருதூர் கீழக்காலில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு**

**வினா 7326—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி மருதூர் கீழக்காலில் அதிகபட்சம் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு என்ன?

(ஆ) திருவைகுண்டம் கஸ்பா குளத்தை அடையும்போது தண்ணீரின் அளவு எந்த நிலையில் உள்ளது?

(இ) இடையிலுள்ள கழிவு நீர் கால்வாய் மற்றும் பழுதுபட்ட மடைகளில் வீணாகும் தண்ணீரைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மருதூர் கீழக்காலில் தற்சமயம் அதிகபட்சம் 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

(ஆ) கஸ்பா குளத்திற்கு மேல் உள்ள 35 மடைகளில் திறப்புக்குத் தகுந்தாற்போல் கஸ்பா குளத்தை அடையும்பொழுது தண்ணீர் விடும் அளவு குறையும்.

(இ) கழிவுநீர்க் கால்வாய் மற்றும் பழுதுபட்ட மடைகளை நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் சரிசெய்து கொடுக்கப்படும்.



1997 அக்டோபர் 14]

**61—**

**மருதூர் கீழக்காலில் புறவழிக் கால்வாய்**

**வினா 7329—திரு.எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் தொகுதியிலுள்ள மருதூர் கீழக்காலில் புறவழிக் கால்வாய் பணிகள் எப்போது நிறைவு பெறும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

பேரூர் புறவழி வாய்க்கால் திட்டப் பணிகள் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் தொடங்கப்பட்டு திட்டத்தின் பெரும் பகுதிப் பணிகள் முடிவுற்ற நிலையில், தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் முடிவுற்று 3/95 உடன் உலக வங்கி நிதி அளித்து வந்த உதவியும் நிறுத்தப்பட்டது. இதனால் பேரூர் பை-பாஸ் திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளைச் செய்து முடிக்க, நீர்வள ஆதார அமைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கும் சாத்தியக் கூறுகள் குறித்து பரிசீலிக்கப்படும்.

**62—**

**மதகிரி ஓடையை மராமத்து செய்தல்**

**வினா 7331—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வடகால் பேயகுளம் ஆயக்கட்டு மதகிரி ஓடையை மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம். திருவைகுண்டம் வடகால் சீரமைக்கும் பணி நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பணியை எடுத்துச் செய்யும்பொழுது மதகிரி ஓடையினை மராமத்து செய்யும் பணியும் மேற்கொள்ளப்படும்.

[1997 அக்டோபர் 14

63—

## கீழக்கால் பாசனமடைகள் பழுதுபார்த்தல்

**வினா 7336—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வடகால் மற்றும் மருதூர் கீழக்காலில் உள்ள அனைத்து பாசனமடைகளும் பழுதுபட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அவற்றைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவைகுண்டம் வடகால் மற்றும் கீழக்காலில் பழுது அடைந்த மடைகளைப் பழுது நீக்க நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் (NWIP) சேர்க்கப்பட்டு அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. விரைவில் மேற்கண்ட மடைகளின் பழுதுபார்ப்புப் பணிகள் செய்து முடிக்கப்படும்.

64—

## சாலைகளை அகலப்படுத்துதல்

வினா **2993—திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) பவானியில் அந்தியூர்-அத்தானி, சக்திநகர்-அத்தானி, பவானி-கவுந்தப்பாடி, பவானி-செல்லம்பாளையம் ஆகிய சாலைகளை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ):

**1. அந்தியூர்-அத்தானி சாலை கி.மீ.0/0-9/2 (எம்.டி.ஆர்.)**

இச்சாலை 9.20 கி.மீ. நீளமுடைய தார்தளம் கொண்ட முக்கிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளத்தில் 2.60 கி.மீ. நீளம் சாலை 7.00 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச்சாலையாக உள்ளது. மீதமுள்ள 6.60 கி.மீ. நீளப்பகுதி 5.33 மீட்டர் அகலம் கொண்ட சாலையாகவுள்ளது. இப்பகுதியை 7.00 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.13.20 இலட்சம் தேவைப்படும்.

**2. சக்திநகர்-அத்தானி-பவானி சாலை கி.மீ.28/8-51/2(எம்.டி.ஆர்.)**

இச்சாலை 22.40 கி.மீ. நீளமுள்ள முக்கிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் மொத்த நீளப் பகுதியில் 15.20 கி.மீ நீளப்பகுதி 7.00 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச்சாலையாக உள்ளது. இப்பகுதியை 7.00 மீட்டர் அகலத்திற்கு இருவழிச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.14.40 இலட்சம் தேவைப்படும்.

**3. பவானி-கவுந்தப்பாடி சாலை**

பவானி-கவுந்தப்பாடி சாலை கி.மீ.0/0-13/4-ல் ஒருபுறம் அகலப்படுத்தப்பட்டு நன்றாக பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இச்சாலையின் வழியாக சக்தி சர்க்கரை ஆலைக்குச் செல்லும் கனரக வாகனங்களாலும், பவானி கூடுதுறை கோயிலுக்கு வரும் வாகனங்களாலும், பேருந்துகள் மற்றும் அனைத்து வாகனங்களாலும் போக்குவரத்து அதிகரித்து உள்ளது. மேலும் இச்சாலை ஈரோடு-சக்தி சாலையை, கவுந்தப்பாடியில் இருந்து பவானியுடன் இணைக்கும் சாலையாகவும் உள்ளது. இச்சாலையில் வாகனப் போக்குவரத்து 1996-ம் ஆண்டு போக்குவரத்து கணக்கெடுப்பின்படி 4,266 வாகன ஊர்தி அலகு என்ற அளவில் உள்ளது. எனவே மேற்கண்ட போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டு அகலப்படுத்தாத மற்றொரு புறத்தை அகலப்படுத்தினால் போக்குவரத்திற்கு மிக உகந்ததாக இருக்கும். மேலும் இச்சாலையை அகலப்படுத்தும்போது, சிறுபாலங்களையோ அல்லது பாலங்களையோ அகலப்படுத்தும் அவசியம் இல்லை. ஒரு

புறம் அகலப்படுத்தும் பணிக்கு 12.10 கி.மீ.-க்கு ரூ. 24.80 இலட்சம் நிதி தேவைப்படுகிறது.

**4. பவானி-செல்லம்பாளையம் சாலை**

இச்சாலை கி.மீ.0/0-0/2, 1/2-3/6 ஒரு பிரதான மாவட்டச் சாலையாகும். இதில் கி.மீ.0/0-0/2, 1/2-22/4 வரை பவானி சட்டமன்ற தொகுதியிலும். 12/4-30/6 வரை அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலும். இச்சாலை கி.மீ.3/0-20/0 வரை அகலப்படுத்துதல் அமைந்துள்ளது. இச்சாலையில் 1996-ஆம் வருடத்தில் வாகன போக்குவரத்து கணக்கெடுப் பின்படி 18,472 வாகன ஊர்தி அலகாக உள்ளது. இச்சாலையின் வழியாக ஆப்பக்கூடலில் உள்ள சக்தி சர்க்கரை ஆலைக்குச் செல்லும் கனரக வாகனங்களும், பவானி கூடுதுறை கோவிலுக்கு வரும் வாகனங்களும், பேருந்துகள் மற்றும் அனைத்து வாகனங்களின் போக்குவரத்தும் அதிகரித்துவிட்டபடியாலும், இச்சாலை மைசூரை பெரியார் மாவட்டத்துடன் இணைக்கும் முக்கிய சாலையாகவும் உள்ளதால் இச்சாலையினை மேம்பாடு செய்து அகலப்படுத்துதல் அவசியமாகும். அவ்வாறு அகலப்படுத்தும் பணிக்கு 17.00 கி.மீட்டருக்கு ரூ. 34 இலட்சமும், மண் பகுதியை மேம்பாடு செய்வதற்கு ரூ. 6.00 இலட்சமும் மொத்தம் ரூ. 40.00 இலட்சம் தேவைப்படும்.

மேற்கண்ட சாலைப் பணிகளின் முன்னேற்றத்திற்கு சுருங்கக்கூறின் ரூ.92.40 இலட்சம் அளவுக்கு பெருந்தொகை தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி காரணமாய் இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**65—**

**பாலம் கட்டும் திட்டம்**

வினா ***3921*—திரு. எஸ். எஸ். பொன்முடி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், சூளூர் ஒன்றியம், சோழதூர், பேரூர்ப் பகுதியில் அன்னூர் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், சூளூர் ஒன்றியம், பேரூர்ப் பகுதியில் இதர மாவட்ட சாலையாக வகைப்படுத்தப்பட்டுள்ள அன்னூர் சாலையில் (0/0-38/4) நொய்யல் ஆற்றின் குறுக்கே கி.மீ. 19-6-ல் ஆற்றின் நீர் வழிப்பாதை அகலமான 110 மீட்டருக்கு உயர்மட்ட பாலம் கட்ட தற்போதைய விலை விகிதப்படி ரூ.220.00 இலட்சம் தேவைப்படுகிறது.

இப்பணி இதுவரையில் அரசின் திட்டப்பணிகள் எதிலும் இடம் பெறாததாலும், அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லாததாலும், தற்போது பாலம் கட்டும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**66—**

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 4308—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியம், அரசம்பட்டு முதல் மோட்டாம்பட்டி வரை தார்ச்சாலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசம்பட்டு-மோட்டாம்பட்டி சாலை தென்னாற்காடு மாவட்டத்தில் அமையவில்லை. விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இச்சாலை 10.7 கி.மீ. (கி.மீ.0/0-10/7) நீளமுடைய இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை ஒரு வழித்தட அகலமுடைய தார்ச்சாலையாகும். தொடர் போக்குவரத்தினால் பழுதடைந்துள்ள இச்சாலையில் கி.மீ. 1/0-3/0 வரை சீர் செய்ய ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மேலும் தொடர் போக்குவரத்தினாலும், மழையினாலும், இச்சாலையில் அவ்வப்போது

ஏற்படும் சிறுசிறு குழிகளுக்குத்தான் நறுக்குகள் போடப்பட்டு தார்ச்சாலை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

67—

## பாலம் சீர்படுத்துதல்

**வினா 5113— திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பரங்கிப்பேட்டை ஒன்றியம், பூதகேனி கிராமத்தையும் சிதம்பரம் நகரத்தையும் இணைக்கும் பாலத்தை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம், சிதம்பரம் நகராட்சி சாலையில் அமைந்துள்ளது. இச்சாலை சிதம்பரம் நகரத்திலிருந்து தில்லை காளி அம்மன்கோவில் வழியாகச் சென்று பள்ளிப்படை-கண்டமங்கலம் சாலை (இதர மாவட்ட சாலை) கி.மீ.0/0-ல் இணையும் நகராட்சி சாலையில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் திண்காரைக்கட்டு (Cement Concrete) பாலம் ஒன்று உள்ளது. மூன்று கண்மாய்கள் கொண்ட இப்பாலம் 2.20 மீட்டர் அகலமும் 20 மீட்டர் நீளமும் உடையதாகும். இதில் வாகனப் போக்குவரத்து செல்ல வாய்ப்பு இல்லாமல் சாதாரண மாட்டு வண்டிப் பாலமாகவே நீண்ட காலமாக உள்ளது. இதனால் பள்ளிப்படை-கண்டமங்கலம், பூதகேனி, பீதக்குடி, கோவிலம்பூண்டி மற்றும் காரைப்பாடி ஆகிய கிராம மக்கள் சிதம்பரம் நகரத்திற்கு வாகனங்களில் செல்ல வசதி இல்லாமல் சுற்றி வரவேண்டிய நிலை உள்ளது. இவ்விடத்தில் நீர்வழிப்பாதையின் அகலம் 20 மீட்டராகும். கோடைக்காலம் தவிர, மற்ற காலங்கள் முழுவதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் இவ்விடத்தில் 20 மீட்டர் நீளத்திற்கு ஒரு வழிப்பாதை கொண்ட உயர்மட்டப்பாலம் அமைக்கவும், இரு பக்கமும் சுமார் 10 மீட்டர் நீளத்திற்கு அணுகு சாலைகள் அமைக்கவும் தோராயமாக ரூ.45 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாக பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.



68—

## ரோடு அமைக்கும் திட்டம்

**வினா 5971—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வீரன் அழகுமுத்து மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் உள்ள தேவாரம், மேட்டுப்பட்டி, மீனாட்சிபுரம் வழியாக சாக்குளத்து மேட்டுப்பாதையில் ரோடு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* உத்தமபாளையத்தில் இருந்து மேட்டுப்பட்டி, மீனாட்சிபுரம் வழியாக தேவாரத்திற்கு அரசு பெரிய மாவட்டச் சாலை செல்கிறது. இத்துறையின் பராமப்பில் உள்ள இச்சாலையின் கி.மீ.10/6-ல் இருந்து பிரிந்து சாக்குளத்து மேட்டுவரை ஒரு சாலை செல்கிறது. இச்சாலையினை உத்தமபாளையம், தேவாரம் சாலையின் பிரியும் இடமான கி.மீ.0/0-ல் இருந்து 4/8 வரை அரசு இதர மாவட்டச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மீதமுள்ள கி.மீ.4/8 முதல் 14/8 வரையுள்ள பகுதி, வனப்பகுதியில் செல்வதால் வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெறாமையால் சாலை அமைக்கப்பட இயலவில்லை.

இச்சாலையில் கி.மீ. 0/0-2/1 வரையுள்ள பகுதி 1994-95-ஆம் ஆண்டுக்கான மேற்குத்தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ.2/1-4/8 வரையுள்ள சாலைப்பகுதி, சமீபத்திய மழையின் காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளபோதிலும், நிதிப் பற்றாக்குறையினால் நடப்பு ஆண்டின் வெள்ளச் சீரமைப்புத் திட்டத்தில் சேர்க்க இயலவில்லை. மேலும் நடப்பு நிதியாண்டின் பராமரிப்பு நிதியிலும் போதுமான ஒதுக்கீடு கிடைக்கப்பெறாமையால், உடனடியாக இப்பகுதியைப் பழுது பார்க்க முடியவில்லை. எனவே வரும் நிதியாண்டில் கிடைக்கப்பெறும் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டில், முன்னுரிமை அடிப்படையில் இப்பகுதியைப் பழுது பார்க்க ஆவன செய்யப்படும்.

இவற்றைத் தவிர 2.7 கி.மீ. நீளமுள்ள இப்பகுதியை 1996-97-ம் ஆண்டிற்கான மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டத்தின்-கீழ்

[1997 அக்டோபர் 14

மேம்படுத்த ரூ.13.50 இலட்சங்கள் கோரப்பட்டது. ஆனால் அரசு ஆணை எண் 158, திட்டம் மற்றும் அபிவிருத்தி துறை, நாள் 21-12-1996-ல் வெளியிடப்பட்ட பணிகளில் இப்பணி இடம் பெறவில்லை. மீதமுள்ள கி.மீ.4/8 முதல் 14/8 வரையுள்ள சாக்குளத்து மேட்டுவரை செல்கின்ற சாலையை அமைக்க வனத் துறையிடமிருந்து அனுமதி கிடைப்பது தற்போதுள்ள வனச் சட்டங்களின்படி மிகக் கடினம் என்பதால் இதனை மேம்படுத்துதல் சம்பத்திய ஆண்டுகளில் இயலாது.

69—

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா 6497—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், இடங்கணசாலை கிராமம், கே.கே. நகருக்குச் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் சித்தர் கோயில் முதல் கே.கே. நகர் மாட்டையாம்பட்டி வழியாக எளம்பிள்ளை முதல் சின்னப்பட்டி வரை செல்லும் சாலையைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சித்தர்கோயில் மாட்டையாம்பட்டி சாலை தேசிய விவசாய மற்றும் கிராம வளர்ச்சி வங்கியின் உதவியுடன் ரூ.20.75 இலட்சம் செலவில் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மாட்டையாம் பட்டி—சின்னப்பட்டி சாலை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

70—

**தார்ச்சாலையைச் செப்பனிடல்**

**வினா 6875—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள நெடுங்குளம் கிராமம், கோனேரிப்பட்டியிலிருந்து சிலுவம்பாளையம், காட்டூர் மோளப்பாறை வழியாக பூலாம்பட்டி வரை பழுதடைந்துள்ள தார்ச் சாலையைச் செப்பனிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை, கல்வடங்கம்பூலாம் பட்டி சாலை 12.8 மீ. (கி.மீ.0/0-12/8), நீளமுடைய ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். முழுவதும் தார் தளமுடைய இச்சாலை கி.மீ. 0/0-10/4 வரை நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ 10/4-12/8 வரை சாலையில் நொடிகள் போடப்பட்டு, போக்குவரத்துக்கு இடையூறில்லாத வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கி.மீ. 10/4-12/8 வரையுள்ள இச்சாலைப் பகுதியைப் புதுப்பிக்க நடப்பு ஆண்டில் சிறப்பு பராமரிப்பு பணிகளின் கீழ் தார் தளம் போட வழிவகைகள் பரிசீலிக்கப்படும்.

71—

**சாலை செப்பனிடல்**

**வினா 7954—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டியிலிருந்து மஞ்சளாறு அணை வரை உள்ள சாலை குண்டும் குழியுமாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரியகுளம் தொகுதி தேவதானப்பட்டியிலிருந்து மஞ்சளாறு அணை வரை உள்ள சாலையில் தார் நொடிகளைச் சீர்செய்ய, தார் நறுக்குகள் போடப்பட்டும், ஓரங்களுக்கு கிராவல் அடித்தும், போக்குவரத்திற்கு வசதியாக பராமரிப்புப் பணிகள் நடந்து வருகின்றன. மேலும் இச்சாலையை செப்பனிட 1997-98 ஆம் ஆண்டிற்கான சிறப்பு நிதியிலிருந்து மேம்பாடு செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் ஒப்புதலளிக்கப்பட்டு பணி துவக்கப்படும்.

72—

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 8385—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், பூண்டியிலிருந்து போளூர் கிளா வரை தார்ச்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

[1997 அக்டோபர் 14

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கொடைக்கானல் ஒன்றியம், பூண்டியிலிருந்து போளூர் கிளா வரை தார்ச்சாலை அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது.

**73—**

**சாலை அமைத்தல்**

**வினா 8386—திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பூலந்தூரிலிருந்து தும்மலப்பட்டி வரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொடைக்கானல் ஒன்றியம், பூலந்தூரிலிருந்து தும்மலப்பட்டி வரை சாலையமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**74—**

**திருக்கோயில்கள் பராமரிப்பு**

**வினா 960—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி எவ்வளவு உள்ளது?

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளில் யார் யாரிடம் எவ்வளவு வசூல் செய்யப்பட்டது?

(இ) இதில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): 2-8-1991 அன்று உருவாக்கப்பட்ட இந்நிதி தற்போது "திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதிக்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த நன்கொடை ரூ.5.95 கோடிகளாகும். நன்கொடையாளர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருப்பதால் பட்டியலிட்டுக் கூற இயலாது. இந்நன்கொடைத் தொகை, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அரசு நிதி நிறுவனங்களில் பல்வேறு வகையான முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டு ரூ.3.14 கோடி வட்டி பெறப்பட்டது. ஆகையால் நிதியின் மொத்த வரவு ரூ.9.09 கோடி ஆகும்.

2. இந்நிதியிலிருந்து மொத்தம் ரூ.5.15 கோடி நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

3. இந்நிதியின் மீதமுள்ள தொகையில், தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனம், மின்விசை வசதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் அகதிகள் மறுவாழ்வு வங்கி ஆகியவற்றில் ஓராண்டு கால முதலீடு மற்றும் 91 நாட்கள் முதலீடு என இருவகை முதலீடுகளில் ரூ.3,87,50.885 முதலீடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர இந்நிதி பேணப்படும் கனரா வங்கியில் நடப்புக் கணக்கில் ரூ.2,85,000 இருப்பு உள்ளது.

**75—**

**சுற்றுலாப் பயணிகளுக்கு வரலாற்றுப் புத்தகங்கள்**

**வினா 3115—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 108 வைணவத் தலங்கள் வரலாறு, 63 நாயன்மார்கள் வரலாறு ஆகிய புத்தகங்களை சுற்றுலாப் பயணிகளுக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தி லிட்டில் ப்ளவர் நிறுவனத்தினரால் 108 வைணவத் தலங்கள் வரலாறு புத்தகம் ஒன்று ரூ.12-க்கும், 63 நாயன்மார்கள் வரலாறு புத்தகம் ஒன்று ரூ.6-க்கும் மலிவு விலையில் ஏற்கெனவே சென்னை மற்றும் திருச்சியில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி புத்தகங்களை அரசு இலவசமாகவோ அல்லது மேலும் குறைந்த விலைக்கோ சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் எண்ணம் இல்லை.

**76—**

**அரும்பெரும் நூல்களைப் பயில்வதற்கு ஏற்பாடு**

வினா 5359—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை கோயில்களில், தேவாரம், திருக்குறள், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலடியார் போன்ற நூல்களைப் பயில்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமயத்தின் அரும்பெரும்மறைகளான தேவாரம், திருக்குறள், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலடியார் போன்ற பக்தி மற்றும் அற நூல்களை இசையுடன் பயிற்றுவிக்கும் நோக்குடன் கீழ்க்காணும் திருக்கோயில்களில் பயிற்சிப் பள்ளி துவக்கி மேற்படி நூல்களை மாணவர்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க சம்பந்தப்பட்ட ஆலயங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சைவத் திருக்கோயில்கள்**

1. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.
2. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.



3. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
4. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
5. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.
6. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை.
7. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்.
8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

**வைணவத் திருக்கோயில்கள்**

1. அருள்மிகு பார்த்தசாரதிப் பெருமாள் திருக்கோயில், திருவல்லிக்கேணி.
2. அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்.
3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்.
4. அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், உப்பிலியப்பன் கோயில், கும்பகோணம்.
5. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை.
6. அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், திருவில்லிபுத்தூர்.
7. அருள்மிகு கண்ணபிரான் திருக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.

**77—**

**தமிழ் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்**

**வினா 10868—திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் வாழும், திரைப்படம் மற்றும் நாடகத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற வயதான தமிழ் கலைஞர்களுக்கு விருதும் உதவித் தொகையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வெளி மாநிலங்களில் வாழும் தமிழ் கலைஞர்களுக்கும் 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை இணைப்பில் குறிப்பிட்டுள்ள வெளி மாநிலக் கலைஞர்கள் 14 பேர்களுக்கும் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. உதவித் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

இதுவரை 'கலைமாமணி' விருது பெற்ற வெளி மாநிலக் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| 1. திருமதி ஹேமமாலினி, பரதநாட்டியக் கலைஞர் | 1974-75 | பம்பாய். |
| 2. திரு. எஸ்.ஆர். கஸ்தூரி, தொழில் முறையல்லாத நாடக நடிகர். | 1975-76 | பம்பாய். |
| 3. திரு. சுப்புடு, தொழில் முறையல்லாத நாடக நடிகர் | 1976-77 | புது தில்லி |
| 4. திரு. எஸ்.ஆர். சபாபதி, தமிழ் நாடகக் கலைஞர். | 1982-83 | பம்பாய். |
| 5. திரு. கே.எஸ். தட்சிணாமூர்த்தி, பரத நாட்டிய ஆசிரியர் | 1984-85 | புது தில்லி. |
| 6. திருமதி கோமளா வரதன், பரத நாட்டிய கலைஞர். | 1986-87 | புது தில்லி. |
| 7. திருவிழா திரு. ஜெயசங்கர், நாதசுவரக் கலைஞர். | 1991-92 | திருவனந்தபுரம். |
| 8. மைசூர் திரு. துரைசாமி அய்யங்கார், வீணைக் கலைஞர். | 1991-92 | பெங்களூர். |
| 9. திரு. ஆணையாம்பட்டி கணேசன், ஜலதரங்கக் கலைஞர். | 1992-93 | பாண்டிச்சேரி. |
| 10. திரு. டி.எஸ். கதிர்வேல், பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர். | 1992-93 | பம்பாய். |



| | | |
|---|---|---|
| 11. திரு. ஆர். நடராஜன் பிள்ளை, பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர். | 1993-94 | பரோடா. |
| 12. டாக்டர் திருமதி மா. சுதிந்திரா, வீணைக் கலைஞர். | 1994-95 | பெங்களூர். |
| 13. திரு. பி.எம். சுந்தரம், இசை ஆராய்ச்சிக் கலைஞர். | 1995-96 | பாண்டிச்சேரி |
| 14. திருமதி அனுசுயா சுந்தரமூர்த்தி, புரவி நாட்டியக் கலைஞர். | 1995-96 | பெங்களூர். |

**78—**

**தமிழ்நாட்டில் தனியார் பேருந்து தொழிலாளர்கள்**

**வினா 6077—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறை பேருந்துகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் அரசு அறிவித்துள்ள சம்பளம் வழங்கப்படுகின்றதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் பிரிவு 1(4)-ன் படி 5 மற்றும் அதற்கு மேல் தொழிலாளர்கள் பணிபுரியும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் மட்டுமே இத்துறையினால் பதிவு செய்யப்படுகிறது. எனவே 5 தொழிலாளர்களுக்குக் கீழ் பணிபுரியும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதில்லை.

மேலும், மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும்போதே தனியார் துறை மற்றும் அரசுத் துறை என்ற கணக்கில் எடுத்துக்கொண்டு இத்துறையால் பதிவு செய்யப்படுவதில்லை. தமிழ்நாட்டில் உள்ள தனியார் போக்குவரத்துப் பேருந்துகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை இத்துறை அலுவலர்களால் அளித்துள்ள விவரப்படி சுமார் 18,849 ஆகும்.

(ஆ) மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசால் ஊதியம் மறுநிர்ணயம் செய்து அளிக்கப்படுகிறது. அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்காத நிறுவனங்கள் ஆய்வு செய்யும்போது காணப்பட்டால், குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பிரிவு 20 (2)-ன் கீழ், சம்பந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆணையர் முன்பு கேட்பு மனுக்கள் தாக்கல் செய்து உரிய நடவடிக்கை இத்துறையினால் எடுக்கப்பட்டு வருகிறது.

**79—**

**தொழிற் பயிற்சி நிலையத்திற்குக் கட்டிடம்**

**வினா 7627—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலத்தில், வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. நிலம் கிடைத்ததும், சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**80—**

**தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்தல்**

**வினா 8356—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாத்திரங்கள் உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய ஒரு குழு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**



(அ) பாத்திரம் உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,000-க்கும் அதிகமாக உள்ளபடியால் மேற்கண்ட தொழில் குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அரசு ஆணை எண் 1484, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, தேதி 25-11-1978-ல் சேர்க்கப்பட்டது. பின்னர், 28-7-1981-ம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண் 1665-ல் இந்தத் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்திட Committee Method முறைப்படி குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை எண் 639, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 1-4-1985-ல் குறைந்தபட்ச ஊதியம் முதன்முதலாக நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பின்னர், இத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதிய மறு நிர்ணயம் அரசு ஆணை எண்2876, நாள் 6-12-1988-ல் அறிவிக்கையின் மூலமும் (Notification Method) கடைசியாக அரசு ஆணை எண் (டி) 607, நாள் 8-7-1994-ன்படி அறிவிக்கையின் மூலமும் (Notification Method) குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குழுவின் மூலம் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்ய இந்தத் தொழிலில் எந்தவிதமான தொழில் நுட்பமான சிக்கல்கள் ஏதும் இல்லை என்பதால், அறிவிக்கையின் மூலமே இந்தத் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் ஏற்கெனவே இரண்டு முறை நிர்ணயம் செய்யப்பட்டு வந்துள்ளது. இத்தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மீண்டும் மறு நிர்ணயம் செய்ய தொழிலாளர் ஆணையரிடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆகவே இதில் குழு அமைக்க அவசியமில்லை.

(ஆ) எழாது.

**81—**

**பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்**

**வினா 10722—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சுரண்டைப் பகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை.—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சுரண்டைப் பகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சுரண்டைப் பகுதியில் (1) சையது பீடி (2) முருகா ஹோம் இண்டஸ்ட்ரீஸ் (3) கிங் பீடி மற்றும் (4) ராஜா பீடி ஆகிய 4 பீடி நிறுவனங்கள் உள்ளன. இங்கு 12 ஒப்பந்தக்காரர்களும், ஆண் தொழிலாளர்கள் 290 பேரும் பெண் தொழிலாளர்கள் 5,882 பேரும், ஆக மொத்தம் 6,172 பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். மாநில அரசு முன் வந்து வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சுரண்டை பகுதி அரங்கும், கீழப்பாவூர் மற்றும் சுற்றியுள்ள இடங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏதுவாக அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லையெனத் தென்காசி வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

82—

**நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

**வினா 6512—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் தற்போது அரசுக் கட்டிடத்தில்தான் இயங்கி வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.



83—

**நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டிடம்**

**வினா 7942—திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியில் இயங்கிவரும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

செஞ்சியில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

**நீதிமன்றங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்**

**வினா 8251—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், காங்கயம் மற்றும் தாராபுரத்தில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் 1995 ஆம் ஆண்டிலேயே ரூபாய் 124.40 இலட்சம் செலவில் சார்நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுவிட்டது. காங்கயத்தில் நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

**நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் நீதிபதிகளுக்குக் குடியிருப்பு**

**வினா 8758—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரியில் நீதிமன்ற வளாகத்திற்கு எதிரில் உள்ள காலி இடத்தில் நீதிபதிகளுக்குக் குடியிருப்பு அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: இல்லை.

**86—**

**குற்றவியல், உரிமையியல் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம்**

**வினா 9761—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பாலக்கோடு வட்டத் தலைநகரில் உள்ள ஒருங்கிணைந்த குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: பாலக்கோடு வட்டத் தலைநகரில் நீதிமன்றக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

**வழக்கறிஞர்கள் ஒய்வு அறையை விரிவுபடுத்துதல்**

**வினா 10015—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி தக்கலையிலும், இரணியலிலும் நீதிமன்ற வளாகத்தினுள் வழக்கறிஞர்கள் ஓய்வு அறையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதியில் உள்ள தக்கலையிலும், இரணியலிலும் உள்ள நீதிமன்ற



வளாகங்களில் வழக்கறிஞர்களுக்கான ஓய்வு அறையை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**மண்டல நிர்வாக சீர்திருத்த நிலைய விவரம்**

**வினா 10780—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூரில் இயங்குகின்ற (Regional Institute of Correctional Administration) மண்டல நிர்வாக சீர்திருத்த நிறுவனம் யாரால் நிர்வகிக்கப்படுகிறது?

*(ஆ)* அங்கு பணியாற்றுவோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* வேலூரில் இயங்குகின்ற (Regional Institute of Correctional Administration) மண்டல நிர்வாக சீர்திருத்த நிறுவனம் தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, ஆகிய நான்கு மாநிலங்களின் சிறைத் துறைத் தலைவர்கள் அடங்கிய இயக்குநர் குழுமத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

*(ஆ)* அங்கு பணியாற்றும் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 58.

**89—**

**நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பட்டு உற்பத்தி**

**வினா 9107—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காஞ்சிபுரத்தில் பட்டு நூல் மூலம் சேலை, வேட்டி உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) 1996-97-ஆம் ஆண்டில் அந்தச் சங்கங்கள் மூலம் உற்பத்தியான பட்டு சேலை, வேட்டி எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரத்தில் 20 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களில் பட்டுச் சேலைகளும், பட்டுப் பாவாடைகளுமே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இச் சங்கங்களில் பட்டு வேட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

(ஆ) 1996-97-ஆம் ஆண்டில் ரூ. 5912.00 லட்சம் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 6609.79 லட்சம் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**90**—

## கழிவுநீர் காவேரியில் கலப்பதைத் தடுத்தல்

**வினா 10852—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தேசிய நதி நீர் செயல் திட்டத்தின் கீழ் பவானி, குமாரபாளையம், ஈரோடு, பள்ளிப்பாளையம் ஆகிய நகரங்களில் கழிவு நீர் காவேரி ஆற்றில் கலக்காதவாறு தடுக்க, நீர் மாசுபடாமல் பாதுகாக்க, எத்தனை கோடிகளில் திட்டம் தீட்டப் பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டு (1997-98)-இல், தேசிய நதி நீர் திட்டத்தின்கீழ், திட்டப் பணிகளை ரூ. 808 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.



| வரிசை எண் | நகரத்தின் பெயர் | | நிதி இலக்கு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1. | பவானி | .. | 47.690 |
| 2. | குமாரபாளையம் | .. | 100.000 |
| 3. | ஈரோடு | .. | 530.000 |
| 4. | பள்ளிப்பாளையம் | .. | 130.310 |
| | மொத்தம் | .. ரூ. | **808.000** |

**91**—

## நலவிடுதிக்குப் புதிய கட்டிடம்

வினா 7601—**திரு. ச. நாகரத்தினம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, லாலாப்பேட்டை, தரகம்பட்டியில் பிற்படுத்தப்பட்ட நல விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கரூர்-தீரன் சின்னமலை வட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, லாலாப்பேட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், தரகம்பட்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அவைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

**பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தனிப்பயிற்சி நிலையம்**

வினா 10170—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., தனிப்பயிற்சி நிலையங்கள் மொத்தம் எத்தனை உள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் ஒரு தனிப்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்க சென்னை அண்ணா நகரில் ஒன்றும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஒரு மண்டல மையமும், ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் ஒரு தனிப்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

**காடு மேம்பாடு செய்தல்**

வினா 10340—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரை அடுத்துள்ள தோவணக் கவுண்டனூர் சூரியன்காடு பகுதியில் தரிசு நிலங்களில் வனத் துறை மூலமாக காடு மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்:**

"தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் சமுதாயக் காடுகளை பசுமையாக்கும் திட்டம்" என்ற அங்கத்தின் கீழ் சேலம் மாவட்டம், எடப்பாடி நகரை அடுத்துள்ள தோவணக்கவுண்டனூர் சூரியன்காடு பகுதியில் உள்ள ஊராட்சியை சார்ந்த தரிசு நிலங்களில் 1998-99-ம் ஆண்டு மரங்கள் நட்டு மேம்படுத்தப்படும்.

94—

**மூங்கில், தேக்கு மரங்கள் நடுதல்**

வினா 11620—**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலைப்பகுதிகளில் மூங்கில் மற்றும் தேக்கு மரங்கள் அழிந்து கொண்டிருக்கும் நிலையில் புதியதாக மூங்கில், தேக்கு மரக்கன்றுகளை நட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98-ஆம் ஆண்டில் பழங்குடியினர் வாழ்க்கையின் உறு துணைத் திட்டத்தின் கீழ் 125 எக்டேர் நிலப் பரப்பளவில் எக்டேருக்கு 350 மரக்கன்றுகள் வீதம் மூங்கில் மற்றும் பலவகை பழ மரங்கள் நடும் பணியை ரூ. 12.959 லட்சம் செலவில் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், பழங்குடியினர் மேம்பாடு துணைத் திட்டத்தின்கீழ் ஜவ்வாது மலைப்பகுதிகளில் அழிந்து வரும் வனப்பகுதிகளை மேம்படுத்த கீழ்க்காணும் காடு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்) |
| அ. | 25 எக்டேரில் பல்வகை மரத்தோட்டங்கள் | ரூ. 1.75 செலவில். |
| ஆ. | சாலையோர மரங்கள் 10 எக்டேர் (25 எக்டேர் முந்தைய ஆண்டு மரங்களின் பராமரிப்புடன்) | ரூ. 0.85 செலவில். |
| இ. | சந்தன மரம் ஒன்றுக்கு ரூ. 4 செலவில் 20,000 எண்ணிக்கையில் சந்தன மரங்களை பட்டா நிலங்களில் வளர்க்கும் நில சொந்தக்காரர்களுக்கு வழங்க | ரூ. 0.80 செலவில். |
| ஈ. | தேக்கு ஒன்றுக்கு ரூ. 5 செலவில் 20,000 தேக்கு மற்றும் பலா மாக் கன்றுகள் வழங்கல் | ரூ. 1.00 செலவில். |
| | மொத்தம் | ரூ. 3.90 லட்சம் செலவில் |

இதைத் தவிர ஆண்டுதோறும் தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மூங்கில்கள் 510 எக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டு ரூ. 3.57 லட்சம் செலவில் பராமரிப்புக்காக ஒதுக்க கருதப்பட்டுள்ளது. எனவே, ஜவ்வாது மலைப்பகுதிகளில் அழிந்து வரும் மூங்கில் தேக்கு மரங்களுடன் வனங்களைப் பாதுகாக்க காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

95—

### சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிட வசதி

வினா 5854—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி அனந்தபுரத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

அனந்தபுரம் சார் பதிவகம் 1-9-1979 முதல் மாத வாடகை ரூ. 233-ல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அதற்கு தற்பொழுது மாத வாடகை ரூ. 1000 வீதம் 1-12-1991 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அனந்தபுரம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கிராம நத்தம் சர்வே 1-45 (புதிய சர்வே எண் 130-8-ல்) 0.02.66 ஏர்ஸ் (6.57 சென்ட்) நிலம் அனந்தபுரம் பேரூராட்சி கூட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டின் விலை விவரப்படி பகுதி-2 திட்டத்தில் சேர்க்க ஏதுவாக மதிப்பீட்டறிக்கை, பெற்றனுப்ப மாவட்டப் பதிவாளர் பதிவுத் துறைத் தலைவரால் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

96—

### சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம்

வினா 7912—**திரு. இ. ஜி. சுகவனம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பர்கூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நில ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. அரசு கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1997 அக்டோபர் 14

97—

**சத்துணவு மையங்கள் விவரம்**

**வினா 9182—திரு. கே. மணிவர்மா, திரு. குத்தாலம் பி. கல்யாணம் மற்றும் திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது இயங்கும் சத்துணவு மையங்கள் எத்தனை?

(ஆ) அமைப்பாளர்கள் நிரப்பப்படாமல் உள்ள சத்துணவு மையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகததில் தற்போது மொத்தம் 68,740 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 756 சத்துணவு மையங்களில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அவற்றை நிரப்ப மாவட்ட ஆட்சியர் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

98—

**சத்துணவுத் திட்ட பயன் விவரம்**

**வினா 10842—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தினால் பயனடையும் மாணவ, மாணவிகள் எத்தனை பேர்?



1997 அக்டோபர் 14]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 63,63,635 மாணவ மாணவிகள் பயனடைகின்றனர்.

99—

**ஆவணப் பதிவுக் கட்டணம்**

வினா 11789—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விதவைகள், ஊனமுற்றோர் வாங்கும் மனைகள், வீடுகள் முதலியவற்றிற்கு ஆகும். ஆவணப் பதிவுக் கட்டணத்தை விலக்குவோ அல்லது குறைக்கவோ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

விதவைகள், ஊனமுற்றோர் வாங்கும் மனைகள், வீடுகள் போன்ற சொத்துக்களைப் பதிவு செய்யும்போது அத்தகைய ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை விலக்களித்தல் அல்லது குறைத்தல் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

**கலப்புத் திருமணம் உதவித் தொகை விவரம்**

வினா 7538—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு வழங்கும் உதவித் தொகை எவ்வளவு?

[1997 அக்டோபர் 14

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(இ) எடப்பாடி தொகுதியில் எத்தனை பேர் விண்ணப்பித்து உள்ளனர்?

(ஈ) எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டு முதல் ஒரு தம்பதியருக்கு ரூ. 3,000 காசோலையாகவும் ரூ. 7,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் ஆக மொத்தம் ரூ.10,000 வழங்கப்படுகிறது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 35 பேருக்கு 1996-97 ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(இ) எடப்பாடி தொகுதியில் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

(ஈ) ஆகையால் எவருக்கும் நிதியுதவி வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



1997 அக்டோபர் 14]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சந்தனமரக் கடத்தல் விரப்பனால் கடத்தி பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள ஆறு பேர்களை மீட்டல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. சந்தனமரக் கடத்தல் வீரப்பன் சமீபத்தில் அரசு அதிகாரிகளைக் கடத்தி வைத்திருப்பதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ஞானசேகரன், இரா. தாமரைக்கனி, ப. ரங்கநாதன், ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. பெருந்துறை பெரியசாமி, திரு. ம. அப்துல் லத்தீப், திரு. எஸ். சந்தானம் திரு.. வை. சிவபுண்ணியம் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. இ. கணேசன், திரு. ஜி. கே. மணி ஆகியோர் கவன ஈர்ப்பும் கொடுத்து இருக்கின்றார்கள். அவை அத்தனையும் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கருதி, கட்சிக்கு ஒருவர் இந்தப் பொருள் பற்றி பேச அழைக்கின்றேன். முதலில், எதிர்கட்சி சார்பில் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக்கடத்தல் வீரப்பன் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கர்நாடக வனத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் 3 பேரையும், இந்திய அளவில் புகழ் பெற்ற வனத் துறை ஆராய்ச்சியாளர்-சயன்டிஸ்ட் மற்றும் அவர் ஆராய்ச்சி செய்கின்ற நேரத்தில் அந்த இடத்தில் புகைப்படம் எடுப்பதற்காக இருந்த இருவரையும்—ஆக 6 பேர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்து இருக்கின்றான். குறிப்பாக கடந்த பல ஆண்டுகளாக வீரப்பனை கர்நாடகா அரசும், தமிழக அரசும் காவல் துறையை வைத்துப் பிடிப்பதற்காக முயற்சி செய்து இருக்கின்றார்கள். ஆனால், அந்த முயற்சி இடையிடையே வேகமாக நடக்கின்றது திடீரென்று பேச்சுவார்த்தை, சமாதான உடன்படிக்கை அல்லது பொது மன்னிப்பு என்ற போர்வையில் அது தடைபடுகின்றது. ஆனால், தமிழக அரசினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதற்கு உறுதியான நடவடிக்கை எடுத்து மத்திய அரசிடம் அணுகி, இராணுவத்தைக் கொண்டு வீரப்பனைக் கைது செய்ய முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒழுங்குப் பிரச்சினையா?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** ஆம். இங்கே வீரப்பன் பிரச்சினைப்பற்றி பேசியபோது எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் இராணுவத்தை அனுப்ப வேண்டும்: முதல்வர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். சமீபத்திலே வீரப்பனை சென்று பார்த்து வந்த நக்கீரன் கோபால் அவர்களுடைய பாராட்டுக் கூட்டத்திலே மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதுபற்றி உங்கள் கட்சி சார்பில் பேசுகிற வாய்ப்புக் கிடைக்கையில் பதில் சொல்லுங்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்கா.நங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள் என்று சொன்னேன். நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். நீங்கள், நான் சொல்வதை இன்னமும் கேட்கவில்லை என்றால், வெளியேற்றுவேன. மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறை பெரியசாமி.

*முற்பகல் 10-45*

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை குறித்து நாம் இப்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழக மக்களைப் பெரும் பதட்டத்திற்கும், அலைக்கழிப்பிற்கும் ஆளாக்கியிருக்கிற ஒரு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முனைப்பான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள். வீரப்பன் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இதை வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மட்டும் கருதாமல் இதை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதி அணுகவேண்டிய பல்வேறு அம்சங்களும் இதில் இருக்கின்றன.

சிலபேர் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடக்கூடாது என்பதற்காக அரசியல் உள்நோக்கத்தோடு இந்த ஆட்சிக்கு ஒரு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக—முன்னாள் முதலமைச்சரே கூட வீரப்பனை ஆத்திரமூட்டுகிற வகையில், இந்த அரசுக்கு கெட்ட





பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பதையும் தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள். சத்தியமங்கலம் காட்டுப்பகுதியில் மலைவாழ் மக்கள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அமைதியான முறையில் வாழ முடியாமல் இருக்கிற துயர நிலைக்குத் தீர்வு காண இந்த அரசு எடுக்கிற முயற்சிக்கு இடையில் நான்காம் முறையாக வனத் துறை அதிகாரிகளை, தோட்டக்கலை நிபுணர்களை, புகைப்படக் கலைஞரை எல்லாம் கடத்தி வைத்திருக்கிற வீரப்பன் விஷயம் குறித்து இன்றைக்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதிலே சிலபேர் எதிர் அரசு நடத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடம் கொடுக்காமல், சாதுரியமாக இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே எடுத்துவருகிற சாதுர்யம் மிக்க நடவடிக்கைகளைப் போலவே இப்போதும் எடுத்து வருகிறார்கள். இதிலே மத்திய அரசும் எல்லாவகையான உதவிகளையும் செய்வதற்கு முன்வந்து, மத்திய உள்துறை அமைச்சரும் அறிவித்திருக்கிறார்கள்.

எங்களுக்கு ஈரோடு பகுதியில் கிடைக்கின்ற தகவல்கள் என்னவென்றால், கர்நாடகத்திலே இருக்கிற சிலர், சில தவறான அரசியல்வாதிகள், இந்த அரசின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சில பேர், இங்கே இருக்கிற சில அரசியல்வாதிகளோடு சேர்ந்து கொண்டு, அங்கே வீரப்பனுடைய சில நெருக்கமான உறவினர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு துன்புறுத்துவதாகவும் தகவல்கள் வருகின்றன. அதெல்லாம் எந்த அளவுக்கு உண்மை என்று எங்களுக்குத் தெரியாது. ஆகவே, அந்தத் தகவல்களையும் மனதில் வைத்து இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து அதன்மூலம் மக்களுடைய கருத்துக்களைத் திரட்ட, குறிப்பாக அந்தக் காட்டுப் பகுதியில் இருக்கிற சாதாரண மலைவாழ் மக்களின் கருத்துக்களைத் திரட்டுவதற்கு முயற்சி எடுத்தால், இந்தப் பிரச்சினையில் ஒரு அமைதியான தீர்வுக்கு அது வழி வகுக்கும் என்று சொல்லி, அதை வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் ஆழமாக கருத்துக்களைத் தெரிவிக்க நான் விரும்பவில்லை. ஏனென்றால், இரண்டு முதலமைச்சர்கள் இதில் பேசவேண்டியவைகளைப் பேசவேண்டிய முறையில், அதனுடைய வரையறையோடு பேசி, இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகாமல் சட்டமுறைக்கொப்ப, சட்டம், முறை, இவைகளையெல்லாம் மாற்றாமல், அதேநேரத்தில் உறுதியாக இந்தப் பிரச்சினைக்குப் பொது

நன்மைக்கேற்ப, உரிய வகையில் தீர்வு காணவேண்டுமென்ற அடிப்படையில் பேசியிருக்கிறார்கள், முயன்று இருக்கிறார்கள். அதுகுறித்து தனிப்பட்ட முறையிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்குச் சார்பில்லாத ஒரு தனிப்பட்ட நபரைக்கூடப் பயன்படுத்தி எப்படியாவது இந்தப் பிரச்சினை தீரவேண்டும் என்பதில் அக்கறை காட்டி இருக்கிறார்கள்.

*முற்பகல் 10-50*

இந்தச் சூழ்நிலையில் அண்மையில் நடந்த சம்பவங்கள் அதுவும் பந்திப்பூர் காட்டுப் பகுதியில் நடந்த சம்பவம், சில கேள்விகளை எழுப்பியிருக்கிறது என்பது உண்மைதான். அகில இந்திய அளவில் புகழ்பெற்ற ஒரு விஞ்ஞானியும் வீரப்பனால் பிணைக் கைதியாக்கப் பட்டிருக்கிறார் என்பது, அகில இந்திய அளவில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முக்கியத்துவத்தைத் தந்திருக்கிறது. மேற்கு வங்க அரசு கூட இதில் மத்திய அரசாங்கத்தை அணுகி இருக்கிறது என்ற செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன.

எனவே இந்தச் சூழ்நிலையில் ஒரு முக்கியமான கேள்வி. இந்தப் பிரச்சினையில், இந்த வழியில், இந்தப் பேருந்தில், இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் வருகிறார்கள் என்ற தகவல் வீரப்பனுக்கு எப்படி கிடைக்கிறது என்பதுதான் ஒரு பெரிய புதிராக இருந்துகொண்டு இருக்கிறது. எனவே, கர்நாடக அரசு, அதுவும் குறிப்பாக அங்கே இருக்கக்கூடிய அதிரடிப்படை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை அல்லது வேண்டுமென்றே வீரப்பன் தப்புவதற்கு, பிணைக் கைதிகளைப் பிடிப்பதற்கு அவர்கள் மறைமுகமாக உதவி செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வருவது சட்டம் ஒழுங்கு மற்றும் சட்டத்தினுடைய இறையாண்மையில் நம்பிக்கை கொண்டிருக்கிற மக்களுக்குக் கொஞ்சம் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, போலீஸ் துறையிலே, அதுவும் குறிப்பாக கர்நாடக மாநிலத்தில் வனத்துறையில் பணியாற்றுபவர்களே, வீரப்பனுக்கு உதவிகரமாக இருக்கிறார்களோ என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகள் வந்து கொண்டிருப்பது எந்த அளவுக்கு உண்மை என்று தொடர்புடைய அரசாங்கம்தான் விளக்கம் தரவேண்டும்.

இஃதன்னியில், மத்திய அரசாங்கத்தை நேரடியாக கர்நாடக மாநிலம் அணுகியிருக்கிறது என்பதும் ஒரு செய்தி, அது குறித்து நான் இந்த அவையில் எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை. ஆனால்,



நம்மைப் பொறுத்தவரையில் ஒரு தனிப்பட்ட மனிதன் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கிறான் என்பதற்காக ஒரு மாநில அரசு சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, ஒரு தனிப்பட்ட நபருக்காக, தன்னுடைய அதிகார வரம்பிற்கு உட்படுகிற ஒன்றை மத்திய அரசுக்கு முழுமையாக விட்டுக் கொடுக்க கூடிய வகையில் ஒரு கோரிக்கை விட்டிருக்கிறது என்று வந்திருக்கிற செய்தியும் ஒன்று. கர்நாடக மாநில முதலமைச்சர்தான் இந்தச் செய்திக்கு விளக்கம் தரவேண்டும். என்னைப் பொறுத்தவையில், நம்மிடத்தில் அந்த இயலாமை இல்லை என்பதற்கு நாம் நேரடியாக அந்தப் பிரச்சினையிலே ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை மட்டும் நான் என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதுகுறித்து சில உண்மைகள் நாட்டுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இது குறித்து நாட்டுமக்கள் கவலையடைந்திருக்கிறார்கள். சட்டத்தினுடைய இறையாண்மையில் நம்பிக்கை கொண்டிருக்கின்ற மக்கள் இதுகுறித்து ஆழமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே, இந்தப் பிணைக் கைதிகள் பிடிக்கப்பட்ட பிறகு தமிழக அரசின் சார்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இந்த அவை தெரிந்துகொள்ள விரும்புகிறது. அந்த வகையில் நாம் இதை ஜாக்கிரதையாக அணுக வேண்டும்.

பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமானதே தவிர. யாரோ எங்கோ உட்கார்ந்து கொண்டு தமிழ்நாட்டின் முழு போலீஸ் துறையின் மீதும் நம்பிக்கையில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதும், தனிப்பட்ட ஒருவரைக் குறிப்பிட்டு, அதுவும் போலீஸ் துறையிலேயிருந்து ஓய்வு பெற்ற ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவரை அனுப்பினால்தான் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும் என்றும். முன்னாலே இந்தத் துறையை நிர்வகித்துக் கொண்டிருந்தவர்கள், வெளிப்படையாக அடிக்கடி கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருப்பதும் உள்நோக்கம் உடையது, பொறுப்பில்லாத செயல். எனவே இதையெல்லலாம் உரியவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மர வீரப்பனுடைய இந்தப் பிரச்சினையிலே என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

இதை சந்தன மர வீரப்பனுக்கு ஆதரவாகச் சொன்னதாக யாரும் தயவு செய்து எண்ணி விடக்கூடாது. அவன் ஒரு கட்டுப்பாடற்றவன். உயிரைப்பற்றி கவலைப்படாதவன். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற **தமிழக அரசும்** சரி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் சரி, இந்தப் பிரச்சினையை, " சேலை மீது முள் விழுந்தாலும் முள் மீது சேலை விழுந்தாலும் சேதாரம் சேலைக்கு இல்லாமல் இருந்திடல் வேண்டும்" என்ற பொறுப்புணர்ச்சியோடு அணுகி சரியான நடவடிக்கைகளை இதுவரை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் மனதார பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த முறை அந்த வனத்துறை அதிகாரிகளை விடுதலை செய்வதற்காக அவர் எடுத்திருக்கிற அந்த முயற்சி, பத்திரிகை ஆசிரியர் நக்கீரன் கோபால் அவர்களை அனுப்பி அதிலே வெற்றியும் ஈட்டி 9 உயிர்களைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிற பெருமை, தமிழக முதலமைச்சருடைய நடவடிக்கைக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே உயிரைப் பற்றி கவலைப்படாதவரிடம் நாம் கொஞ்சம் எச்சரிக்கையாக செயல்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் இந்தக் கருத்தை சொல்கிறோமே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் இல்லை.

முற்பகல் *10-55*

முன்பு ஒருமுறை காஷ்மீர் தீவிரவாதிகளாலே மத்திய அமைச்சர் ஒருவருடைய மகளானவர் கடத்தப்பட்டபோது அன்றைக்கு மத்திய அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே பேசுகிறபோது "எல்லோரும் வீரமாகப் பேசுகிறார்கள், நான் விவேகமாக இருந்து இந்தப் பிரச்சினையை முடிக்க விரும்புகிறேன்" என்று சொன்னார்கள். அதேபோல-அந்த காஷ்மீர் தீவிரவாதிக்கு-அவர்களை விடுதலை செய்துதான் அந்த மத்திய அமைச்சருடைய மகளையே மீட்டு எடுத்தார்கள்.

எனவே, இந்த நாட்டிலே உயர்ந்த அதிகாரப் பதவியிலே இருந்தாலும் சரி, சாதாரண அதிகாரப் பதவியிலே இருந்தாலும் சரி, அல்லது சாமானிய மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறையுள்ளவராக தமிழக முதல்வர் இருக்கின்ற காரணத்தினாலே மீண்டும் ஒருமுறை ஒரு



முயற்சி எடுப்பதற்காக இன்றைக்கு செய்தித்தாளிலே அவர் கூறியது வந்திருக்கிறது. ஆகவே தமிழக முதல்வர் எடுத்திருக்கிற இந்த முயற்சி உண்மையாக இருக்குமானால் மீண்டும் அந்தப் பணயக் கைதிகளை மீட்பதற்கு அவர்கள் நக்கீரன் ஆசிரியரை அனுப்புகின்ற முயற்சி உண்மையாக இருக்குமானால் அதைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே நான் வரவேற்று, ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், **நான்** இன்னொன்றையும் வேண்டுகோளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வைக்க விரும்புகிறேன். ஏறத்தாழ-119 பேர்கள் என்று பத்திரிகைகளில் இன்றைக்கு வருகிறது. ஆனால், ஏறத்தாழ 162 அப்பாவி தமிழர்கள் குண்டர் சட்டத்தின்கீழ் கர்நாடகாவின் மைசூர் மத்திய சிறையில் எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் கடந்த நாலரை ஆண்டுகாலம் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். கர்நாடக அரசுக்கு பிரச்சினை வருகிறபோதெல்லாம், ஆபத்து வருகிறபோதெல்லாம் தமிழக முதல்வரின் உதவியை கேட்டுப் பெற்று அவர்கள் அதிலே சில நேரங்களிலே வெற்றியும் அடைந்து விடுகிறார்கள். எனவே, அதேபோல நம்முடைய தமிழக முதல்வர் கர்நாடக அரசுக்கு உடனடியாக வேண்டுகோள் விடுத்து, எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருக்கின்ற 162 தமிழர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு இதிலே சில பேர்கள் குளிர் காயலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'கூரை ஏறி கோழி பிடிக்க மாட்டாதவன், வானம் ஏறி வைகுண்டம் காட்டப்போகிறேன்' என்று சொன்னதைப்போல ஏற்கெனவே தோல்வி அடைந்தவர்கள் அந்தத் தோல்வி அடைந்து இன்றைக்கு அதிகாரத்திலும், பதவியிலும் இல்லாமல் ஓய்வுற்றதற்குப் பின்னாலே இப்போது அனுப்புங்கள் பிடித்து காட்டுகிறேன் என்று சொன்னால் ஏற்கெனவே அவர்கள் செய்து முடித்த சாதனை என்ன? இதை மக்கள் கேட்க மாட்டார்களா? கொஞ்சம்கூட பொறுப்பில்லாமல், பொறுப்பில்லாத இடத்திலே இருந்து கொண்டு சொல்கின்ற காரணத்தினாலே தமிழக அரசு கொஞ்சம்கூட இதிலே அவசரப்படவோ அல்லது மாறுபாடாகவோ எந்தவிதமான காரியத்திலும் ஈடுபடாமல், கைது செய்யப்பட்டு வீரப்பன் காவலிலே உள்ள உயிர்களை கருத்திலே கொண்டு, மீண்டும் ஒரு முயற்சி எடுத்து அவர்களை விடுதலை செய்வதற்கு ஆவன செய்திடல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 அக்டோபர் 14

எங்களைப் பொறுத்த அளவிலே அந்த வனப் பகுதியிலே உள்ள தமிழர்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டாவது-ஏற்கெனவே 500 கோடி ரூபாய் பொது மக்களுடைய வரிப் பணமானது பாழாக்கப்பட்டு இருக்கிறது. அது மேலும் மேலும் பாழாக்கப்படக்கூடாது என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தமிழக அரசானது மீண்டும் அவனோடு பேசி, அதுவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதைப்போல சட்டத்திற்கு உட்பட்டு அவன் சரணடைந்தால்தான் நாங்கள் அவனுடைய கோரிக்கையைப் பரிசீலிப்போம் என்று தெளிவாக இவ்வளவு தூரம் சொல்லி இருப்பதற்கு பின்னாலும்கூட சிலர் இதை குறுகிய நோக்கத்தோடு அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்பதை கவனத்திலே கொண்டு. நீங்கள் எப்படி இதுவரையிலே பொறுப்பான தன்மையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறீர்களோ, அந்தப் பொறுப்பான தன்மையில் இந்தப் பிரச்சினையிலும் நீங்கள் வெற்றி காண வேண்டும் என்று என்னுடைய இயக்கத்தின் சார்பிலே வேண்டுகோளாக வைத்து கைதிகளை விடுவிக்கின்ற முயற்சியில் தாங்கள் வெற்றி பெற வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 பேர்களைக் கொலை செய்தவன் சந்தன மரக் கடத்தல் வீரப்பன். பொது மக்கள், காவல் துறை அதிகாரிகள், வன இலாக்கா அதிகாரிகள் இப்படி 200 கொலை செய்தவனுக்கு எப்படிப் பொது மன்னிப்பு கொடுப்பது. எப்படி தனி பங்களா அமைத்துக் கொடுப்பது என்பதைப் பற்றித்தான் இந்த அரசினுடைய சிந்தனை, நோக்கமெல்லாம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த 200 கொலை செய்தவனை ஒன்று சுட்டுத் தள்ள வேண்டும். அவனை சுட்டுத் தள்ள வேண்டும் என்று ஏற்கெனவே இருந்த புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்களுடைய அரசு... (குறுக்கீடு) ஜெயலலிதா என்று சொன்னால் ஏன் சிரிப்பு வருகிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

*முற்பகல் 11-00*

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏன் சிரிக்கிறார்கள்? ஏன் சிரிக்கிறார்கள்? இதிலே சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களுடைய அரசு **. தலைமையில் அதிரடிப்படையை அமைத்து, சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடைய-கடத்தல்காரனுடைய-கூட்டாளிகளினுடைய எண்ணிக்கையைக் குறைத்தார்கள். ஆனால் இன்றையதினம் டி.ஜி.பி. **தலைமையில் ஏன் அதிரடிப்படையை தீவிரப்படுத்தவில்லை இந்த அரசு? வாய் மொழி உத்திரவு வழங்கி...



1997 அக்டோபர் 14] [திரு. இரா. தாமரைக்கனி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்திலே நான் ஒன்றும் தலையிடவில்லை. நீங்கள் அதிகாரிகள் பெயரைச் சொல்லாமல் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, ஏன் தீவிரப்படுத்தவில்லை இந்த அரசு? சந்தன மரக் கடத்தல் வீரப்பனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். அவனுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? 1996 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்திற்கு கேசட் தயார் செய்து, சன் டி.வி.யிலே போட்டார்கள். இன்றைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சன் டி.வி.யிலே பேட்டி கொடுக்கும்போது, 'அவர் இவர்' என்று சொல்லுகிற-200 பேர்களை கொலை செய்தவனுக்கு-மரியாதை கொடுத்துப் பேசுகிற அளவிலேதான் இருக்கிறது. இன்றைக்கு நக்கீரன் கோபால் நடுநிலையாளரா? மஞ்சள் பத்திரிகையினுடைய ஆசிரியர். ஒரு அரசு அதிகாரியை கூட அனுப்பினீர்களா? ஒன்றும் கிடையாது. அவர் போகிறார், வருகிறார். நாடகம் ஆடுகிறார்கள். போறாங்க, நான் மான்கறி சாப்பிட்டுவிட்டு வந்தேன், சந்தன மரக் கடத்தல் வீரப்பனோடு சாப்பிட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த விஷயத்தில், கர்நாடக அரசும் சரி, தமிழ்நாடு அரசும் சரி, சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்குண்டான அறிகுறிகளே இல்லை; செயலிழந்து போய்விட்ட, இரண்டு அரசாங்கங்களும். ஆகவே, இரண்டு அரசுகளும் மத்திய சர்க்காரிடம் அணுகி, இராணுவத்தை அனுப்பி, சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஷூட்டிங் பண்ண ஏற்பாடு செய்யவேண்டும் அல்லது இத்தாலி நாட்டில் பயிற்சி பெற்ற 200 கமாண்டோக்கள் டெல்லியில் இருக்கிறார்கள். அருமைப் பெரியவர் சுப்பிரமணியசாமி அவர்கள் சொன்னதைப் போல, (சிரிப்பு) இத்தாலியில் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு, மத்திய அரசிடம் சொல்லி அவனைப் பிடிப்பதற்கு வேண்டிய (சிரிப்பு) சுப்பிரமணியசாமி என்றால் ஏன் உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்னய்யா அநியாயமாய் இருக்கு! நீங்கள் இப்படிச்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லா சிரியுங்கள். நாளைக்கு நாங்கள் ஆட்சிக்கு வரும்போது, அந்தப் பக்கம் இருந்து, முன்னாலே இருந்து, உங்களை பார்த்து, நாங்கள் இப்படித்தான் சிரிப்போம். கைகொட்டி சிரிப்போம். எங்களுக்கு என்ன. ஆகவே, சந்தன மரக் கடத்தல் விஷயத்தில், நக்கீரன் கோபால் என்ன சொல்கிறார்கள், அங்கே போகிறார், கேசட் தயார் பண்ணுவது, சன் டி.வி.யிலே போடுவது, அரசியல் பண்ணுவதற்கே, இந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனையும், நக்கீரன் கோபாலையும் தயார் பண்ணி, சன் டி.வி.யிலே போட்டு அரசியல் நடத்துவதற்காகத்தான் இந்த வீரப்பன் விவகாரத்தை நீங்கள் பயன்படுத்துகிறீர்களே தவிர, பிடிப்பதற்கு வேண்டிய முயற்சியை இந்த அரசு எடுக்கவில்லை. இந்த அரசுக்கு வேண்டியவர்தான் சந்தன மரக் கடத்தல் வீரப்பன். அவனைக் காப்பாற்றுவது, பொது மன்னிப்பு கொடுப்பது, தனி பங்களாவில் வைப்பது, இதுதான் குறிக்கோள். (குறிக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு மேலேயா நீங்கள் பதில் சொல்லப் போகிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** விடுதலைப் புலிகளுக்கும் வீரப்பனுக்கும் தொடர்பு இருக்கிறது. நவீன ஆயுதங்கள் எல்லாம் வாங்குகிறான். ஏ.கே.47 ஆயுதங்கள் வாங்குவதற்கான சக்தி எப்படி அந்த வீரப்பனுக்கு வந்தது, என்று இந்த அரசு விளக்கவேண்டும்.

வீரப்பனுக்கும் இந்த அரசுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதையும் இந்த அரசு விளக்கவேண்டும். உங்களால் பிடிக்க முடியாது. ஆகவே மத்திய அரசை நீங்கள் அணுகவேண்டும். ** ரிடையர் ஆனாலும் சரி, சுத்த வீரனய்யா **பற்றி குறை சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முறையாக எடுத்துச் சொல்லிவிட்டேன். திரும்பவும், வேண்டுமென்றே நீங்கள் சொன்னால், அந்தப் பெயரை எடுத்துவிடுவேன். அதிகாரிகள் பெயரைச் சொல்லாமல் பேசுங்கள் என்று நான் சொன்னேன் அல்லவா உங்களிடம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, **தலைமையில், பழைய டி.ஜி.பி. தலைமையில், மத்திய அரசினுடைய இராணுவத்தையோ, அல்லது இத்தாலியில் பயிற்சி பெற்ற கமாண்டோக்களையோ வைத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



வீரப்பனைப் பிடிப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். மத்திய அரசை வலியுறுத்தவேண்டும். தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக பல்வகையான அச்சுறுத்தல்களை மேற்கொண்டிருக்கிற சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடைய பிரச்சினை தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும், இரண்டு மாநிலங்களுக்கு இடைப்பட்ட பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால், இதை மிகச் சாமர்த்தியமாக அணுகி கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்னால் கர்நாடக வனத்துறையைச் சேர்ந்தவர்களை பணயக் கைதிகளாக வைத்திருந்ததை நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் மீட்டுத் தந்திருக்கிறார்கள் என்கிற ஒரு நிலை இரண்டு மாநிலங்களுடைய மக்களாலே பாராட்டப்பெற்ற ஒரு நிலை.

முற்பகல் 11-05

இன்றைக்கு மீண்டும் அதேபோல கர்நாடகத்தைச் சேர்ந்த 6 பேரை பணயக் கைதிகளாக வீரப்பன் அவர்கள் பிடித்து வைத்துக் கொண்டு மீண்டும் இரு அரசுகளுக்கும் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தப்பத்தில், கர்நாடக அரசு மத்திய அரசினுடைய துணையை நாடியிருக்கிறது. ஆனால் நமது முதல்வரைப் பொறுத்த அளவிலே இந்தப் பிரச்சினையை எந்தவித இடையூறும் இல்லாது தீர்க்க முடியும் என்கின்ற நோக்கத்தோடு ஒரு நல்ல நிலையை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த நடவடிக்கைகளுக்கு இன்றைக்குக்கூட கர்நாடகத்தினுடைய முதலமைச்சர், தமிழகத்தின் முதலமைச்சர் என்ன வழிமுறைகளைக் கையாளுகிறாரோ, என்ன நிலைகளை எடுத்துக்கொள்கிறாரோ, அவைகளுக்கெல்லாம் நாங்கள் ஆதரவாக இருப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இரு மாநிலங்களுடைய பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாகத் தீர்க்கின்ற வல்லமை படைத்த கலைஞருடைய அரசுதான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தமுடியும் என்கின்ற நிலையை இரண்டு மாநில மக்களுமே தெளிவாக உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலே, இந்தப் பிரச்சினைக்கு நமது முதல்வர் அவர்கள் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு மக்கள் எல்லாம் அதைத்தான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர் எந்த

நிலையை எடுத்துக்கொள்வாரோ, கர்நாடகத்தைப்போல மத்திய அரசினுடைய துணையை நாடுவாரோ, இல்லை, அவருடைய சாதுரியத்தால் பழையபடி இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வை எடுத்துக்கொள்வாரோ என்கின்ற நிலையிலே அவர் எடுக்கின்ற அத்துனை முயற்சிகளுக்கும் தமிழ் மக்களும், கர்நாடக மக்களும் ஆதரவாக இருப்பார்கள். அத்தோடு தமிழ் மக்கள் சிலபேர் இந்தப் பிரச்சினை காரணமாக கர்நாடகச் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். தடா கைதிகளாக இருக்கின்ற நிலையை நண்பர் தீரன் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல பல்வேறு தமிழ் பத்திரிகைகளும் எடுத்துச் சொல்லியிருக்கின்ற நிலையிலே இன்றைக்கு அந்தச் சிறையிலே இருக்கின்ற தமிழர்களுக்காகவும், நல்லதொரு தீர்வை தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்கின்ற நிலையை எடுத்துச்சொல்லி, எனது இயக்கத்தின் சார்பில் இந்தப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை மிக ஆழமாகத் தெரிவித்து, அமைகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகாலமாக தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கக்கூடிய சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடைய பிரச்சினையில் மறைக்கப்பட்டிருக்கக்கூடிய, மறந்துபோய் இருக்கக் கூடிய மிக முக்கியமான பிரச்சினை, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஏறக்குறைய 124 கிராமங்களிலே வாழ்கின்ற, மலைப் பகுதியிலே வாழ்கின்ற தமிழ் மக்களுடைய பிரச்சினைகள்தான். ஒரு பக்கம் சந்தனமரக் கடத்தல் வீரப்பனுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்கள் என்று காவல்துறையினருடைய சொல்லையும், இன்னொரு பக்கம் காவல்துறைக்குத் துணைபுரிகிறார்கள் என்று வீரப்பனுடைய தொல்லைக்கும் ஆளாகக்கூடிய அந்தத் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கத்தான் நாம் அதிகம் கவனம் செலுத்தவேண்டும்.

அதேபோல ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்டவர்கள் கர்நாடகத்தினுடைய சிறையிலே குண்டர் சட்டத்திலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். சந்தன மரக்கடத்தல் வீரப்பனுடைய பிரச்சினை அல்லது வீரப்பனை சரணடையச் செய்வதிலே நாம் கவனம் செலுத்துவதற்கு முன்பு வீரப்பனுடைய பிரச்சினையை ஒட்டி கைது செய்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய, சிறையிலே வாடிக் கொண்டிருக்கக்கூடிய அத்தனை தமிழர்களையும் விடுதலை செய்வது



மிக முக்கியமான பிரச்சினையாக நான் கருதுகிறேன். வீரப்பனுடைய பிரச்சினையும், ஏறக்குறைய மூன்று முறைகளுக்கு மேல் அதிகாரிகளைக் கடத்தியிருக்கக்கூடிய நடைமுறையை நாம் பார்க்கின்றோம். எனவே இந்த முறையும் கடத்தப்பட்டவர்களை விடுதலை செய்வது என்ற கோணத்திலே பார்க்காமல், ஒட்டுமொத்தமாக இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது என்ற அடிப்படையிலே அணுகுவதுதான் சரியாக இருக்கமுடியும். முன்னாலே இருந்த ஆட்சிக்காரர்கள் ஏதோ கடந்த காலத்திலே வீரப்பனுடைய ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டதாக மார்தட்டிக் கொண்டாலும்கூட, இப்போது வேறு எந்தப் பிரச்சினையும் கிடைக்காமல், இதை ஒரு அரசியல் பிரச்சினையாக ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடு பார்ப்பதாகத் தெரிகிறது. எனவே ஒட்டுமொத்தமாக சமூகப் பிரச்சினையாகக் கருதி, இதை வைத்து யாரும் அரசியல் செய்யாமல், பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற அடிப்படையிலே ஒரு நல்ல விஞ்ஞானப் பார்வையோடு பார்க்கவேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

முற்பகல் 11-10

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமமுடைய நாட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்ட, முன்னாள் ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசும்போது, 9 உயிரை மீட்டு வந்த—தன் உயிரை அர்ப்பணித்து காட்டுக்குள் சென்று, 9 உயிரை மீட்டு வந்த-நக்கீரன் கோபாலை ஒரு மஞ்சள் பத்திரிகை ஆசிரியர் என்று சொல்வது முறைதானா? இன்று 6 உயிரைக் காப்பாற்ற அவரை அரசு நாடுகிறது. தயவு செய்து இதை அவையின் குறிப்பிலிருந்து நீக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவரவர் மனப்போக்கை பொறுத்தது. அவருடைய கருத்திலே மஞ்சள் பத்திரிகை என்கிறார். அதனாலே நீங்கள் அவ்வளவு உணர்ச்சிவசப்படத் தேவையில்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன், அவர் பேசும்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனா? சுந்தரம் சொன்னதைத்தான் நான் அவைக் குறிப்பிலே ஏற்றவில்லையே, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரங்கநாதன், பெரியசாமி, அப்துல் லத்தீப், தீரன், தாமரைக்கனி, சந்தானம், கிருஷ்ணசாமி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் எந்த அளவிற்கு இணைந்து நின்று செயலாற்றி வருகிறது என்பதைக் கடந்த காலத்தில், சில மாதங்களுக்கு முன்பு ஒன்பது பேர் வீரப்பனால் கைது செய்யப்பட்டு அல்லது பிடிக்கப்பட்டு, ஒருவர் உடனடியாக விடுவிக்கப்பட்டு, எஞ்சியிருந்த எட்டு பேரை நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்கள் சென்று விடுவித்து வந்த அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது புரிந்துகொள்ள முடியும். இடையில் சில வாரங்கள் அல்லது பல வாரங்கள் அமைதியாக இருந்த ஒரு சூழ்நிலை மாறி, மீண்டும் வீரப்பன் ஆறு முக்கியமானவர்களை, ஒரு விஞ்ஞானி உட்பட, பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கின்ற அதிர்ச்சி தருகின்ற செய்தி வெளிவந்துள்ளது. வீரப்பன் சரண் அடைய வேண்டும் என்பதுதான் தமிழக அரசு, கர்நாடக அரசு, இரண்டு அரசுகளின் திட்டவட்டமான கொள்கையாகும்.

வீரப்பனைப் பற்றிப் பேசும்போது, அவர், இவர் என்றெல்லாம் நான் பேசுகிறேன். அவ்வளவு மரியாதை கொடுத்துப் பேசுகிறார். ஆகவே, முதலமைச்சருக்கும், வீரப்பனுக்கும் தொடர்பு இருக்கிறது என்று அ.தி.மு.க.வினுடைய சட்டசபை கட்சித் தலைவர் நண்பர் தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசினார்கள். நான், எப்போதும், யாருக்கும் மரியாதை கொடுத்துப் பழக்கப்பட்டவன். யாராய் இருந்தாலும். அவள், இவள் என்றோ அவன், இவன் என்றோ நான் யாரையும் அழைப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு எவ்வளவோ ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்பட்டு இருக்கின்ற அம்மையார் ஜெயலலிதாவைக்கூட நான் அவர், இவர் என்றுதான் அழைக்கிறேனே அல்லாமல் மரியாதைக் குறைவாக என்றைக்கும் அழைத்தது இல்லை, அழைக்கப் போவதும் இல்லை. அது நான் கற்ற பாடம்.

கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு பட்டேல் அவர்களும், நானும், சென்னையிலே சந்தித்து இருமுறை உரையாற்றியபோது திட்டவட்டமாக அப்போது அறிவித்திருக்கிறோம்.





பத்திரிகையிலேயும் செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியை நான் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினையை சற்று விரிவாக விளக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கின்ற காரணத்தால். "எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிணைத் தொகை கொடுப்பதில்லையென இரண்டு அரசுகளும் முடிவு எடுத்துள்ளன." 5 கோடி ரூபாய் வீரப்பன் கேட்டார். அரசு தர முடியாது என்று முடிவு எடுத்ததை இவ்வாறு குறிப்பிட்டோம். "வீரப்பன் சரண் அடைவாரேயானால், அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு தரப்படும்" என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்திலே தனி சிறப்பு முகாமில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சட்டப்படி வீரப்பன் வைக்கப்பட நேரிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது". எனவே, பெருந்தன்மையோடு தெரிவிக்கப்பட்டுள்ள இந்த முறைகளை ஏற்று பிணைக் கைதிகளை விடுவித்து, வீரப்பன் சரண் அடைய வேண்டும்.

*முற்பகல் 11-15*

இந்தப் பெருந்தன்மையான அறிவிப்புகளை வீரப்பன் ஏற்க மறுத்தால், இரண்டு அரசாங்கங்களும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வேறு வழியில்லை. பிணைக் கைதிகளின் உயிர்களுக்கு ஏதாவது ஆபத்து நேருமானால் அதற்கு வீரப்பன் மட்டுமே காரணம் என்பதோடு அதற்கான விலையினை அவர்தான் தரவேண்டியிருக்கும் என்றும் தெளிவாக, திட்டவட்டமாக, கண்டிப்பாக அப்போதே தெரிவிக்கப்பட்டு அதற்குப் பிறகுதான் நக்கீரன் கோபால் அவர்கள் காட்டிற்குச் சென்று வீரப்பனை சந்தித்து இரண்டு முறை உரையாடி அதற்குப் பிறகு 8 பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பதெல்லாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

அதற்குப் பிறகு 19-8-1997-ல் இந்த 8 கைதிகளும் விடுவிக்கப்படுவதற்கு முன்பு நானும், கர்நாடக முதல்வர் அவர்களும் சந்தித்துப் பேசி கர்நாடக அதிகாரிகள், தமிழக அதிகாரிகள் கூட இருந்து விவாதித்து அறிவிக்கப்பட்ட முடிவுகளில் பொது மன்னிப்பு தர இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். இப்போது அறிக்கை விடுகின்றவர்கள் அல்லது பேசுகின்றவர்கள், இங்கே பேசிய தாமரைக்கனி உட்பட ஏதோ பொது மன்னிப்பு வழங்க தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருப்பதாகவும், அதை அறிவித்திருப்பதாகவும் ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தியைத்

தொடர்ந்து சொல்லிக் கொண்டே வருகின்றார்கள். 10 முறை சொன்னால் பொய்யும் உண்மையாகிவிடும் என்ற அந்த நம்பிக்கையிலே சொல்கிறார்கள். இதை சில பத்திரிகைகளும்கூட—விஷயம் தெரிந்த பத்திரிகைகள் எல்லாம் கூட- பொது மன்னிப்பு கொடுக்க தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருக்கிறது என்று சொன்னதாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

பொது மன்னிப்பு வேண்டும் என்று கேட்பது காட்டிலே இருக்கிற வீரப்பன். அதை நாங்கள் ஏற்கவில்லை. அவர் கேட்ட காரணத்தாலேயே, கோரிக்கை வைத்த காரணத்தாலேயே, அதை இந்த இரு அரசுகளும் ஏற்றுக் கொண்டது என்று கற்பனை செய்வது கவைக்குதவாத வாதம் ஆகும். நானும் பட்டேல் அவர்களும் பேசிய பிறகு, இரண்டு அரசுகளின் உள் துறை செயலாளர்களும் கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட அறிக்கையிலே தரப்பட்ட உத்தரவாதங்களை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு காலத்திற்கு இது தேவைப்படும் என்பதற்காக இது சட்டமன்றக் குறிப்பேட்டில் பதிய வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு.

(1) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் சரண் அடைவதை இரு மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்கின்றன. அவர்களது உயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் உறுதி அளிக்கின்றன.

(2) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் தமிழ்நாட்டிலே உள்ள ஒரு சிறப்பு முகாமிலே வைக்கப்படுவார்கள். காவல் துறையினரும், சிறைத் துறையினரும் காவல் இருப்பார்கள். முகாமிலே வைத்து உபச்சாரம் பண்ணுவது அல்ல. காவல் துறையினரும், சிறைத் துறையினரும் பாதுகாப்பாக காவல் இருப்பார்கள்.

(3) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் சிறப்பு முகாமில் இருக்க வேண்டிய காலம் சட்டப்படி குறைவானதாக இருக்கக்கூடும்.

(4) வீரப்பன் வழக்குகள் விசாரணை தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் அவர்கள் மீது குறிப்பிட்ட கிரிமினல் குற்றச்சாட்டு ஏதும் இல்லையென்றால் சட்டத்திற்குட்பட்டு அவர்கள் அனைவரும் ஜாமீனில் விடுதலை செய்யப்படுவார்கள். குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருந்தால் உடனடியாக அவை பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.



இதைத்தான் இங்கே நண்பர் தீரன் அவர்களும், சந்தானம் அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும் சுட்டிக்காட்டினார்களே— அதாவது தமிழர்கள் அங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. வீரப்பன் தொடர்பாக இந்த விவகாரம் தொடர்பாக கர்நாடக மாநிலத்திலும், தமிழகத்திலும் சில பேர், அவர்கள் அப்பாவி மக்களாகக்கூட இருக்கலாம்; கைது செய்யப்பட்டு 3, 4 ஆண்டுகளாகச் சிறையிலே இருந்தார்கள். இந்தப் பேச்சுவார்த்தையின்பொழுது நாங்கள் தமிழக அரசின் சார்பாக எடுத்துச் சொன்னது அப்படி கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் தடா சட்டத்திலிருந்து தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே விடுவிக்கப்பட்டு விட்டார்கள். எனவே நீங்களும் கர்நாடகத்திலே சிறையிலே இருப்பவர்களை தடா சட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும்; ஜாமீனில் விடுவிக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டபோது அவர்களும் ஒத்துக்கொண்டார்கள், இந்த பேச்சுவார்த்தையின்பொழுது. ஆனால் 100 பேர், 200 பேர் அல்ல. அதிலே பல பேர் ஜாமீனிலே இன்றைக்கு வெளியே வந்திருக்கிறார்கள். இன்னும் 50, 60 பேர் சிறையில் இருக்கிறார்கள். அதைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம். இடைக்காலத்திலே கர்நாடக முதலமைச்சருக்கு நான் கடிதம் எழுதி இருக்கிறேன். அன்றைக்கு அவர் தொலைபேசியிலே என்னோடு தொடர்பு கொண்டு பேசியபோது அதைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன், நேற்றைக்கு வந்த கர்நாடக அரசு அதிகாரிகளிடத்திலும் நம்முடைய அதிகாரிகள் அதை வலியுறுத்தியிருக்கின்றார்கள். எனவே தொடர்ந்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. ஜாமீனிலே விடுவிக்கப்பட்டவர்கள் கர்நாடக மாநிலத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷனிலே கையெழுத்து போட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையிலே ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், கர்நாடக மாநிலத்திலே இருந்து கொண்டு அந்தப் பணியினை நிறைவேற்ற வேண்டும்; ஆகவே அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதாக கர்நாடக அரசு உறுதியும் அளித்திருக்கிறது.

முற்பகல் 11-20

(5) வீரப்பனின் உறவினர்களின் நல் வாழ்வுக்கான திட்டங்கள் குறித்து கருணையோடு பரிசீலிக்கப்படும். அவர்களுடைய உறவினர்கள் இந்த 10 ஆண்டு, 15 ஆண்டு காலத்தில் மிகவும் பாழ்பட்டுப் போய் குடும்பம், குடும்பமாக இன்றைக்கு அவதிப்படுகிறார்கள். அவர்களின் நல்வாழ்வைப் பற்றி கவனிக்கவேண்டும் என்று வீரப்பன் விடுதத அந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு அது கருணையுடன் பரிசீலிக்கப்படும் என்று ஐந்தாவது உத்தரவாதமாக அளிக்கப்பட்டது.

(6) கர்நாடகத்திலே பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா வழக்குகளும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திடமிருந்து சட்டப் பூர்வமாக அனுமதி பெற்ற பிறகு தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்படும்.

(7) எந்தக் காரணத்திற்காகவும் கர்நாடகத்திற்கு வீரப்பன் நேரில் வரவேண்டும் என்று கர்நாடக அரசு வலியுறுத்தாது.

(8) நல்லெண்ணமும், இணக்கமுமான சூழ்நிலை உருவாக பிணைக் கைதிகளுக்கு எந்தவித இடையூறும் தாராமல் உடனே அவர்களை வீரப்பன் விடுதலை செய்யவேண்டுமென்று இரு மாநில அரசுகளும் கேட்கின்றன.

இவைதான் 8 உத்தரவாதங்கள். நம்முடைய திட்டவட்டமான கருத்து அதிலே பொது மன்னிப்பு என்பதற்கு எந்த இடத்திலேயும் எந்த வாசகமும் இல்லை. அதற்கான இடமும் தரப்படவில்லை. அந்த நிபந்தனை ஏற்கப்படவும் இல்லை. இதற்குப் பிறகு வீரப்பன் சரணடைவான் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த எதிர்பார்ப்போடுதான் நண்பர் நக்கீரன் கோபால் அங்கே சென்றார். ஆனால் அதற்கிடையில் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் வீரப்பன் வந்தால் என்ன செய்வோம் தெரியுமா, என்றெல்லாம் விடப்பட்ட பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் இவைகளின் காரணமாக வீரப்பன் பயந்து போய் அப்படியானால் இதற்கு ஜனாதிபதிதான் உத்தரவாதம் தரவேண்டும்; இரண்டு முதலமைச்சர்கள் உத்தரவாதம் தந்தால் போதாது, ஜனாதிபதியே உத்தரவாதம் தரவேண்டும் பொது மன்னிப்பு வேண்டும் என்றெல்லாம் சொன்னார். இந்தப் பொது மன்னிப்பு என்பதை வீரப்பன் புரிந்து கொள்ளாமல் பேசுவதாகத்தான் நான் உணருகிறேன். பொது மன்னிப்பு என்றால் என்ன? திடீரென்று நானும் மாண்புமிகு திரு. பட்டேல் அவர்களும் கையெழுத்திட்டு



அல்லது அறிவித்து வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விட்டது என்று சொன்னால் வீரப்பன் காட்டிலிருந்து ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டு தமிழ்நாட்டுக்கோ அல்லது கர்நாடகத்திற்கோ வந்து தாராளமாக நம்மைப் போல் உலாவிக் கொண்டு இருக்கலாம் என்று அவர் கருதுகிறார். ஆனால் உலாவ முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏன் என்றால் 10 ஆண்டுகாலம் பல பேர்களைக் கொன்று, பல கொள்ளைகளை அடித்து காட்டிலிருந்து விடுதலையாகி வருகிறவரை பழி வாங்குவதற்காகச் சில பேர் காத்துக்கொண்டு இருக்கக்கூடும். எனவே, அவர்களுடைய பாதுகாப்பை முன்னிட்டுதான் சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் முன்னிறுத்தி அந்த அடிப்படையிலே அவர் தனி முகாமிலே சிறை வைக்கப்படுவார் என்று சொல்லப்பட்டது. அதற்கான முகாம்கள் எல்லாம்கூட தயாரிக்கப்பட்டது. முகாம்கள் தயாராகி அவர் வருகிற தேதிகூட ஓரளவுக்கு இரண்டு அரசுகளுக்கும் அறிவிக்கப்பட்டு அந்த சரணடைகிற நாளும் குறிக்கப்பட்டு, எந்த இடம் என்பதுகூட இந்த இரு அரசுகளிடையே பேசப்பட்டது. கடைசியில் எங்கே இந்த இரண்டு அரசுகளுக்கும் நல்ல பெயர் வந்து விடுமோ என்று எண்ணிய நல்ல மனம் கொண்டோர் சிலர் விடுத்த அறிக்கைகள், விடுத்த பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் காரணமாக வீரப்பன் தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு சொன்ன வாக்குறுதியின்படி 8 பேரை மட்டும் விடுவித்து விட்டு, தான் சரணடையத் தயாராக இல்லை என்று கூறிவிட்டார்.

அதற்குப் பிறகு இப்போது நடைபெற்று இருக்கின்ற இந்தச் சம்பவம் உள்ளபடியே நம்முடைய மன வேதனையை அதிகமாக்கக்கூடியது. இந்த அரசு எடுத்துக் கொண்ட அணுகுமுறை பற்றி நம்முடைய திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மற்றும் [illegible]சிய நண்பர்கள் எல்லாம் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அணுகுமுறை சிறந்த அணுகுமுறை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் முன்[illegible]ள் முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள [illegible]றிக்கையில் "இரண்டு ம[illegible]ல அரசுகளும் மத்திய அரசோடு சே[illegible] கூட்டு நடவடிக்கை எடுக்க முடியுமா" என்று ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு "கருணாநிதி [illegible]ந்தக் காரியத்தை மாநில அரசுகள்தான் செய்ய வேண்டும், மத்[illegible] அரசு உதவி தேவை என்று நானும் திரு. பட்டேல் அவர்களும் சேர்ந்து கோரினால் அவர்கள் உதவி அளிக்கத் தயாராக இருப்பார்கள். அதற்கிடையில் வீரப்பன் சரணடைவதுதான் நல்லது" என்று கருணாநிதி கூறியுள்ளார் என்று அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய

முற்பகல் 11-25

அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நீங்கள் கொஞ்சம் ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலே மத்திய அரசு தலையிட்டு ராணுவ நடவடிக்கை எடுப்பது இறுதி கட்டம். இதை நான் தடுக்கவில்லை. அதுதான் வழி, வேறு வழியே இல்லை என்றால் அதிலே யாரும் தலையிட விரும்பவில்லை. நானும் திரு. பட்டேல் அவர்களும் சேர்ந்தே அந்த உதவியை மத்திய அரசிடத்திலே கேட்கத் தயாராக இருக்கிறோம் என்றுதான் என்னுடைய பதிலிலே நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் கர்நாடக முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்களேகூட 13-ஆம் தேதி அன்று நிருபர்களைச் சந்தித்துப் பேசியபோது என்ன சொல்லியிருக்கிறார் என்றால்; 13-10-1997, பெங்களூரில் அளித்த பேட்டியில் அவர் சொல்கிறார்; "வீரப்பன் பிடியிலே சிக்கியுள்ள 6 பேரை மீட்க இராணுவத்தின் உதவியை மாநில அரசு கோரும். இருந்தபோதும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் தமிழக, கர்நாடக அரசுகள் ஒன்றாக இணைந்து இப்பணியில் ஈடுபட்டால்தான் வெற்றிகரமாக நடத்த முடியும்" என்று பொறுப்புள்ள முதலமைச்சர், அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், அவர் சொல்லியிருக்கிறார். பட்டேல் அவர்கள், "இராணுவம் வர வேண்டிய நிலை ஏற்பட்டால் மத்திய அரசு உதவியை நாடுவோம். இருந்தபோதும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் தமிழக, கர்நாடக அரசுகள் ஒன்றாக இணைந்து இப்பணியில் ஈடுபட்டால்தான் வெற்றிகரமாக நடத்த முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்; "எங்கள் அரசின் முக்கிய நோக்கம் பணயக் கைதிகள் அனைவரையும் பாதுகாப்பாக மீட்க வேண்டுமென்பதுதான். அதிரடியாகச் செயல்பட்டுத் துப்பாக்கிச் சூட்டில் பணயக் கைதிகளின் உயிருக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது". இது பொறுப்புள்ள நிலையிலே கர்நாடகத்தினுடைய முதலமைச்சா பட்டேல் அவர்கள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இருக்கின்ற வாசகங்கள். இது தமிழ்ப் பத்திரிகை மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளிலேயெல்லாம்கூட இது வெளி வந்திருக்கின்றது.

எனவே, இராணுவத்தை அனுப்புவது என்பது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. அனுப்பி விடலாம். இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, வீரப்பன் மாத்திரம் அந்தக் காட்டிலே இல்லை. காடு என்றால் ஏதோ மரங்கள் மாத்திரமே இருக்கின்ற இடம் என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. நூற்றுக்கணக்கான



கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இராணுவ நடவடிக்கை எடுக்கும்பொழுது, எந்த மாநில அரசும் இந்த இராணுவ நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் எந்த அளவிற்குத் தலையிட முடியும் என்பதை உணர்ந்தவர்கள்தான் உணர்ந்து பார்க்க முடியும். அந்த மக்கள் இராணுவ நடவடிக்கையின்பொழுது எந்தக் கதிக்கெல்லாம் ஆளாக நேரிடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் இதிலே ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ ஒரு முடிவு எடுத்து உடனடியாக இராணுவத்தை அனுப்புங்கள் என்று கூறுவதற்குப் பதிலாக மேலும் பேசிப் பார்த்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசும் எண்ணிக் கொண்டிருக்கிறது; அதே கருத்தைத்தான் கர்நாடக அரசுக்கும் இந்த அரசின் சார்பில் நான் கூறியிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய அ.தி.மு.க. சார்பில் பேசிய தாமரைக்கனி குறிப்பிட்டார்கள், கடந்த ஆட்சியிலே எப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்தோம் என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியிலும் வீரப்பன் இப்படிப் பலபேரைக் கடத்திச் சென்றிருக்கின்றார்.

3-12-1994 அன்று சந்தனக் கடத்தல் வீரப்பன், கோவை சிறுமுகை அருகே துப்பாக்கி முனையில், கோவை, பெரியார், நீலகிரி மாவட்ட இலஞ்ச ஒழிப்புப் போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உள்பட 3 பேரைக் கடத்திச் சென்றார். அவர்களை விடுவிக்க வீரப்பன் அப்போது விதித்த நிபந்தனை என்ன தெரியுமா?

"அதிரடிப்படை போலீசை வாபஸ் பெற வேண்டும்; தன்னைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்; தனது அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்; தான் சரண் அடைந்தால் தன் மீது வழக்குப் போடவே கூடாது." - வழக்கு போடவே கூடாது என்றார். இப்பவாவது வழக்குப் போடுவதை ஒத்துக்கிட்டு சரண் அடைகிறேன் என்று சொன்னார். "நான் சரண் அடைந்தால் என் மீது வழக்கு போடக் கூடாது; எனது கோரிக்கையை ரேடியோவில் அறிவிக்க வேண்டும்". இப்படிக் கோரிக்கை வைத்தார்.

உடனே அப்பொழுது இருந்த முதலமைச்சரோ அல்லது அப்பொழுது இருந்த அதிகாரிகளோ, "ஆகா, எங்களுக்கா கோரிக்கை வைக்கிறாய்? விட்டேனா பார்" என்றா பதில் சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதில் இங்கே இருக்கிறது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சி.வி. சங்கர். 4-12-1994 அன்று விடுத்த அறிக்கை வருமாறு: "வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே, வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டு விட்டது."

என்ன கிழிச்சீங்க அப்ப? (சிரிப்பு) நாங்க இப்ப கிழிக்கிறதைத் தான் அப்ப நீங்களும் கிழிச்சீங்க. "வீரப்பனால் கடத்தப் பட்டவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே, வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டு விட்டது" என்று கூறியிருக்கிறார் அரசு சார்பில் கலெக்டர்.

அப்போது வீரப்பன் எழுதிய கடிதத்திலே, "சரண அடைய விரும்புகிறேன். சரண் அடைந்தால் வழக்கு போடக் கூடாது. சரண் அடைவது சம்பந்தமாகக் கலெக்டர் என்னோடு பேச வேண்டும்". என்று இருக்கிறது.

நாங்களாவது நக்கீரன் கோபாலை அனுப்பினோம். அப்போது கலெக்டரே பேசினார். "கலெக்டர் என்னோடு பேச வேண்டும்; பேச்சுவார்த்தை சம்பந்தமாக அகில இந்திய வானொலியில் அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும்". அதற்குக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கர், 6-12-1994-லே கூறுகிறார்: "வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியில் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம்" என்றும், "அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது" என்றும் அப்போது கலெக்டர், "அவர், அவர்" என்றுதான் சொல்லியிருக்கிறார் - "அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்றும் உறுதி அளிக்கப்படுகிறது. மேலும் பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டு இருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்லத் தடை எதுவும் இருக்காது". இந்தப் பணயமாக இருக்கிறாங்களே, அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்லத் தடை எதுவும் இருக்காது. "அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வீரப்பன் ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து எந்தவித தடையும் இல்லாமல் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லலாம், அதற்குத் தடை கிடையாது".

முற்பகல் 11-30

இது 6-12-1994-ல் அந்த கலெக்டர் கூறியதாகும். அதே கலெக்டர் 8-12-1994-ல் ஒரு பேட்டி அளிக்கிறார். அதில் கேள்வி கேட்கிறார்கள்.



கேள்வி கேட்கிறவர்கள் அவன், இவன் என்றுதான் கேட்கிறார்கள். கேள்வி: வீரப்பன் தூதுவன் வர அரசு தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையில் தூதுவன் துப்பாக்கியோடு வந்து பேசுகிறான். இது சரியா?

இதற்கு கலெக்டர் சொல்கிறார் "அவர் சொந்தப் பாதுகாப்புக்கு துப்பாக்கி ஏந்தி வருகிறார், காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார், எனவே, துப்பாக்கி ஏந்தி வருகிறார்".

நீங்கள் ஏதும் நிபந்தனை விதித்தீர்களா என்று கேள்வி கேட்டதற்கு, 'இல்லை நான் அரசாங்கத்தின் தூதுவராகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்" என்று கலெக்டர் சொல்கிறார். அப்போதெல்லாம் முதலமைச்சர் பேசமாட்டார். இந்த முதலமைச்சரிடம் பேசலாம். அப்போது முதலமைச்சரை பார்ப்பதே கஷ்டம். நிருபர்கள் தவம் கிடக்க வேண்டும் பார்ப்பதற்கு. அதனால் கலெக்டர்தான் பேச வேண்டும் கலெக்டர் சொல்கிறார், நான் அரசாங்கத்தின் தூதுவராகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன். பேச்சு நடத்தத் தேவையான தடையில்லாத வசதி செய்துள்ளோம். கலெக்டர் மாத்திரமல்ல, சென்னையிலே 9-12-1994-ல் தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கர் - பலருக்குத் தெரியும் ஹரிபாஸ்கர் பற்றி - அவர் சொல்கிறார் பிரஸ்சிலே, "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார், ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டுவரும்போது எவ்வித துன்புறுததலுக்கும் ஆளாகக் கூடாது, மற்றொன்று, சிறையிலுள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும் என்று பேபி கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப் படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும் மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும். பேச்சுவார்த்தை முடிந்து பேபி மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்". இவைகளுக்குப் பிறகுகூட, வீரப்பனுடைய தம்பி அர்ச்சுனன் செய்தியாளர்களிடம் "நாங்கள் சரணடைய மாட்டோம், தண்டனை அனுபவிக்க மாட்டோம், எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து ஜனாதிபதி எழுத்துமூலம் உத்தரவு

கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்" என்று சொல்கிறார். அப்போது மறுபடியும் ஹரிபாஸ்கர் சொல்கிறார். "ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். பூலான் தேவியைப் போல. மான்சிங்கைப் போல நடத்தப்பட வேண்டுமென்று வீரப்பன் கேட்டால். பூலான் தேவியும். மான்சிங்கும் ஜெயில் தண்டனை அனுபவித்தார்கள். சட்டத்திலிருந்து யாரும் விலகிச் செல்ல முடியாது. போலீஸ் துணை சூப்பிரண்டெண்டெண்ட் மற்றும் இரு நபர்களை நாம் மீட்க வேண்டும்". வீரப்பன் இருக்கும் இடம் அரசுக்குத் தெரியுமா? இது கேள்வி. ஹரிபாஸ்கர் தலைமைச் செயலாளர் சொல்கிறார். "வீரப்பன் இருக்கும் இடம் அரசுக்குத் தெரியும், ஆனால் மூன்று பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது" யாருக்கும் யாருக்கும் உறவு! வீரப்பன் இருக்கின்ற இடம் தெரிந்த அரசு அது. தெரியாத அரசு இது. (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கும் யாருக்கும் உறவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே. இங்கே உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப்போல ஒரு அதிரடி. அல்லது ஆத்திரம். அவசரம் என்ற இந்த அணுகுமுறைகளை விடுத்து. அதற்குத் தேவைப்படும்போது அதைத் தவிர்க்காமல். இடையிலே மீட்கப்பட வேண்டிய உயிர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டும். நேற்றுமுன்தினம்கூட அந்த விஞ்ஞானியின் துணைவியார் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசினார். பேசும்போது ஒரு முதலமைச்சரிடம் பேசுவதற்கு எனக்கு அனுமதி கிடைத்ததே நான் செய்த பாக்கியம், நன்றி கூறிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அழுதார். பேச்சிலே பெரும் பகுதி அழுகையாகவே இருந்தது. கதறிக் கதறி அழுது தன்னுடைய கணவரை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மறுபடியும் ஃபேக்ஸ் செய்தியாக, கடிதம்கூட எழுதினார். பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. பத்திரிகையிலே அந்தக் கடிதத்தை வெளியிட்டதன் காரணம்கூட. வீரப்பன் அந்தப் பத்திரிகையைப் பார்க்க நேரிடும்; நேரிட்டால் அந்தப் பெண்மணியினுடைய கூக்குரலைக் கேட்டாவது மனம் இளகக்கூடும் என்ற அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் அந்தச் செய்தியைக்கூட பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறோம்.

நேற்றையதினம் நக்கீரன் ஆசிரியர் கோபாலை சந்தித்தோம். இதைப் பற்றி பேசியிருக்கிறோம். அவர் என்ன சொல்கிறார் என்றால், "நான் நல்ல எண்ணத்தோடு தமிழக அரசின் சார்பாக தூது சென்றதற்கு என்னைப் பற்றி மிகக் கொடுமையான வார்த்தைகளைக் கொண்டு



ஜெயலலிதா போன்றவர்கள் அர்ச்சனை செய்கிறார்கள். சில பத்திரிகைகள் பொறாமை எண்ணத்தோடு என்னைப் பற்றி எழுதுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் எதற்காக மறுபடியும் போக வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமல்ல, வீரப்பன் மிகவும் ஆத்திரத்தோடு இருப்பதாகவும், நான் சென்றால் முயற்சி இப்போது பலிக்குமா பலிக்காதா என்ற சந்தேகத்தில் தான் இருப்பதாகவும் நேற்றையதினம் என்னிடத்திலே சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். இருந்தாலும் யோசிப்பதாகக் கூறியிருக்கிறார். நானும் ஒரு risk எடுத்துக்கொண்டு, சென்றுதான் தீரவேண்டும் என்று பிடிவாதமாக அவரை அனுப்புவதற்கு விரும்பவில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை. மாண்புமிகு பட்டேல் அவர்கள், கர்நாடக முதல்வர் அவர்கள், டெல்லியிலிருந்து திரும்பிய பிறகு ஒரு வேளை நானும் அவரும் சந்திக்கக்கூடும். சந்தித்துப் பேசிய பிறகுதான் அடுத்த கட்ட நிலை பற்றி யோசிக்க முடியும் என்பதைத் தெரிவித்து, இந்தப் பிரச்சினை குறித்து இந்த அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறுத்தி அமைகின்றேன். வணக்கம்.

முற்பகல் 11-35

## (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்து கட்டண உயர்வு குறித்து கவன ஈர்ப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. டி. மணி, திரு. ஜி.கே. மணி, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், திரு. சி. வேலாயுதன் ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. வெங்கடசாமி மற்றும் சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. இ. கணேசன், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் க. கிருஷ்ணசாமி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். முதலிலே அறிவிப்புகளைக் கொடுத்த முறையின் அடிப்படையில் கட்சிக்கு ஒருவரை இந்தப் பொருள் குறித்துப் பேச அழைக்கின்றேன். முதலிலே திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியதினுடைய

விளைவாக ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும் இன்று பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே திடீர் என்று மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியதின் விளைவாக பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டதாக அறிவித்து, எப்போது மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தும் என்று காத்திருந்தே செய்துவிட்டதைப் போல, துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பஸ் கட்டணம் தமிழகத்திலே உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 1993 ஆம் ஆண்டு முந்தைய அரசு, திடீரென்று பஸ் கட்டணத்தை உயர்த்தியபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது அந்த அரசுக்குக் கடுமையான கண்டனக் குரலையெல்லாம் கொடுத்தார்கள். 26-11-1993, 12-12-1993, 20-12-1993 ஆகிய முரசொலி நாளிதழ்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல கருத்துக்களை அப்போது நாட்டுக்கு எடுத்துச் சொல்லி, "ஏற்கெனவே அ.தி.மு.க. அரசு பதவி ஏற்றவுடன் உர விலையை உயர்த்தினார்கள், பிறகு வீட்டு வரியை உயர்த்தினார்கள். இதையெல்லாம் சொல்வதற்கு நாங்கள் கலெக்டர் ஆபீஸுக்குப் போக பஸ் ஏறினால் பஸ் கட்டணத்தையும் உயர்த்திவிட்டார்கள்" என்றெல்லாம் கண்டனக் குரல் எழுப்பினார்கள். அவ்வாறு எழுப்பிய முதலமைச்சர் அவர்கள், இப்போது அரியணையிலே இருக்கக்கூடிய இந்த நேரத்தில் அவர்கள் இதை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போதைக்கு முரசொலியிலே எழுதியபோதுகூட, இதை ஓரளவு ஏற்றியிருக்கலாம் அல்லது படிப்படியாக ஏற்றியிருக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் அப்போது. தாறுமாறாக அந்த அரசு பஸ் கட்டணத்தை உயர்த்திவிட்டது என்றுகூட மிக அழகாக, தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அதேபோல் இப்போது பார்ப்போம் என்று சொன்னால், மத்திய அரசு இப்போது டீசல் விலையை உயர்த்தியதைக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மற்றும் எல்லோருமே இதை வேண்டாம் என்று எதிர்த்தார்கள். மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியிருக்கக் கூடாது, உயர்த்தியிருந்தாலும்கூட அவர்கள் எத்தனை விழுக்காடு டீசல் விலையை உயர்த்தி இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தனை



செய்து பார்க்க வேண்டும். அதேபோலவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். 29 சதவீதம் அவர்கள் டீசல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், டீசல் விலையை உயர்த்தியது 29 சதவீதம் என்று சொன்னால், நம்முடைய தமிழக அரசு இப்போது திடீரென்று, 40 சதவீதம், சிலவற்றில் 60 சதவீதம், 80 சதவீதம் என்று, அதாவது சூப்பர் டீலக்ஸ், விரைவுப் பேருந்து. சாதாரணப் பேருந்து என்று மூன்று வகைகளான பேருந்துகளில் 80 சதவீதம் அளவுக்கு பஸ் கட்டணத்தை உயர்த்தியது தமிழ்நாட்டு மக்களுக்கு நிச்சயமாக 'குருவித் தலையில் பனங்காயை வைத்தது' போல இன்று அவர்கள் எல்லாம் மிகவும் மாட்டிக் கொண்டு அவஸ்தைபடுகிறார்கள் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய தடத்தில் பேருந்தை இயக்க வேண்டும், பழைய பேருந்துகளை மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள். அதே போல் Central Purchase Committee வைத்து உதிரிப் பாகங்களை வாங்க வேண்டும் என்றெல்லாம் கட்டணத்தை ஏற்றியதற்கு நீங்கள் காரணங்களைச் சொல்லலாம். அதற்கு நிர்வாகச் சீர்திருத்தத்தை நீங்கள் கொண்டு வரலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் "வேறு எந்த மாநிலத்திலும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் இல்லை என்ற நிலை இருக்கிறபோதுகூட, தொடர்ந்து விவசாயிகளுக்கு நாம் இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்கிறோம்" என்று சொல்லி முன்னோடியாக மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதேபோல நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோ, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களோ எழுந்து, இப்போது என்ன சொல்லப் போகிறார்கள், 'மற்ற மாநிலத்தைப் பார்த்தீர்களா? அந்த மாநிலத்திலே இத்தனை பைசா அதிகமாக இருக்கிறது ஒரு கிலோமீட்டருக்கு, தமிழகத்தில்தான் குறைவு' என்று சொல்லப் போகிறார்கள்.

முற்பகல் 11-40

தமிழ்நாட்டினுடைய கட்டமைப்பே வேறு, மற்ற மாநிலங்களின் கட்டமைப்பே வேறு. தமிழக அரசு பஸ் போக்குவரத்தில் மற்ற மாநிலங்களைவிட முன்னோடியாக விளங்குகிறது என்பதை நம்முடைய தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். நாம் தொடர்ந்து போக்குவரத்துக் கழகத்தில் சிறப்பாக நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி சிறப்பான முறையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நீங்கள் இந்த பஸ் கட்டணத்தை மற்ற மாநிலங்களில் ஏற்றியிருக்கிறார்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [1997 அக்டோபர் 14

என்று சொல்லி, உயர்த்தியிருக்கிறீர்கள் என்று சொன்னால், அது நன்றாக இருக்காது. நாம் தமிழக மக்களுடைய வாக்கைப் பெற்றுத்தான் இங்கே வந்திருக்கிறோம். நாம் விலைவாசியை கட்டுப்படுத்துவதாகச் சொன்னோம். பஸ் கட்டணத்தை மற்ற அரசுகள் - அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் ஏற்றியபோதெல்லாம், கண்டனக் குரல் எழுப்பிய நாம், அரியணைக்கு வந்த பிறகு, நாமும் அதே தவறைச் செய்தால், இந்த நாட்டு மக்கள் நம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், நீங்கள் தயவுசெய்து எத்தனை விழுக்காடு டீசல் விலை உயர்ந்திருக்கிறதோ, அந்த விழுக்காடு அளவுக்கு மட்டும் பஸ் கட்டணத்தை உயர்த்துங்கள், மற்றபடி உதிரி பாகங்கள் விலை உயர்ந்துவிட்டது, அது வாங்கவேண்டும், இது வாங்கவேண்டும் என்று சொல்லியும், ஏற்கெனவே தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுத்தது, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே கொடுத்த கமிஷன் போன்ற கணக்குகளைப் பார்த்து, அதில் ஏற்பட்ட நஷ்டத்தையெல்லாம் ஈடு செய்வதற்காக, நீங்கள் தமிழக மக்கள் மீது பளுவை சுமத்துவீர்கள் என்று சொன்னால், தமிழக மக்கள் தாங்கக் கூடிய நிலையில் இல்லை என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கர்ம வீரர் காமராசர் ஆட்சிக் காலத்தில் 11 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தமிழகத்திற்கு வந்தன. (மணியடிக்கப்பெற்றது) 10 ஆலைகளுக்குத்தான் அவர்கள் முன்மொழிவினைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது ஒரு ஆலைக்கு 10% கமிஷன் என்று இருந்தபோது, இயந்திரங்கள் வாங்குவதில் 10% என்று சொன்னால், 10 ஆலைக்கு 100% வருகிறது. அந்த 100%க்கு நிச்சயமாக ஒரு ஆலை என்று சொல்லி 11 ஆலையாகக் கொண்டு வந்து சரித்திரம் படைத்தார்கள் காமராசர் அவர்கள். ஆனால் இப்போது சேஸிஸ் வாங்குவதில் வேண்டுமானால் கமிஷன் வரலாம். இதையெல்லாம் நீங்கள் அசெட்ஸ்ஸாகக் கிரியேட் செய்து, அதில் ஏதாவது சேமிப்பாக வைத்துக்கொண்டு, பஸ் கட்டணத்தைக் குறைப்பதிலே நீங்கள் நாட்டம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பஸ் கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



1997 அக்டோபர் 14]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நம்முடைய அரசு உயர்த்திய பஸ் கட்டண உயர்வு என்பது, நாட்டிலே இருக்கக் கூடிய அனைத்துத் தரப்பு மக்களையும் பாதிக்கக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் கட்டண உயர்வைப் பற்றிக் குறிப்பிடும்போது, புதிய பேருந்துகள் வாங்குவதற்காகவும், நிர்வாகச் செலவைப் பொறுத்தும், பஸ் கட்டண உயர்வு வருகிறது என்று சொன்னார்கள். அதே நேரத்திலே டீசல் விலை உயர்வைக் கருத்தில் கொண்டும் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியுள்ளார்கள். இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, டீசல் உயர்வு என்பது குறைவான சதமாக இருந்தும்கூட, அதற்குப் பல மடங்கு பஸ் கட்டண உயர்வு இந்த நாட்டில் அமைந்திருக்கிறது. அதைப்போல, நிர்வாகச் செலவு என்று வருகிறபோது, தனியார் பேருந்து முதலாளி ஒருவர் இரண்டு ஆண்டுகள் கழித்து ஒரு புது பஸ் வாங்கக்கூடிய நிலை இன்று தனியார் போக்குவரத்து நிறுவனங்களில் இருக்கிறது. இப்படி தனியார் முதலாளிகளெல்லாம் வருமானத்திலே அதிக அளவில் இயங்கிக் கொண்டு இருக்கும் நேரத்தில், நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் நட்டம் என்று சொன்னால், அந்த நட்டத்தை மாறுபாடு செய்ய வேண்டியது நம்முடைய கடமை என்பதை நமது அரசு உணர வேண்டும்.

அதுமட்டுமல்ல, இப்போது பஸ் கட்டண உயர்வுக்குப் பிறகு, தனியார் பேருந்து முதலாளிகள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் என்றால், இதற்கு முன்பு ஒரு நாளைய கலெக்‌ஷன் 4 ஆயிரம் ரூபாயாக இருந்தது. ஆனால் பஸ் கட்டணம் உயர்ந்த பிறகு, இப்போது 7 ஆயிரம் ரூபாய் வசூலாகிறது என்று அங்கே நடத்துனர்கள் எல்லாம் சொல்கிறார்கள். ஆகவே, இப்படி தனியார் பேருந்து முதலாளிகள் அதிக அளவில் கொள்ளை அடிக்கக்கூடிய கால கட்டத்திற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதையும், அது தமிழக மக்களுக்குப் பெரிய சுமையாக இருக்கிற காரணத்தால், நம்முடைய தமிழக அரசு கருணை கூர்ந்து, மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு என்பதாலும், நல்லரசு என்ற காரணத்தாலும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அக்கறை உள்ளவர்கள் என்ற காரணத்தாலும், நான் தமிழக அரசை வேண்டி விரும்பி வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதெல்லாம், பஸ் கட்டண உயர்வை மீண்டும் குறைக்க வேண்டும். 40% உயர்வு என்பது கொடுமையானது என்று சொல்லி, குறைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

முற்பகல் 11-45

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 8-9-1997 அன்று தமிழக அரசு பஸ் கட்டணத்தை, ஒரு மடங்கு அல்ல, இரு மடங்கு அல்ல, கிட்டத்தட்ட ஏற்கெனவே இருந்த கட்டணத்துடன் பாதி கட்டணத்தைச் சேர்த்து உயர்த்தி பொது மக்களுடைய சாபத்தை வாங்கிக் கொண்டிருக்கிறது. பொது மக்களெல்லாம் குறிப்பாக தாய்மார்களெல்லாம், பஸ்ஸிலே ஏறிச்செல்லும்போது, காய்கறிகளை வாங்கச் செல்லும்போது இந்த ஆட்சியை சபித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன்தான் இந்த ஆட்சி வந்ததோ? வந்தவுடன் பஸ் கட்டணத்தை ஒரேயடியாக இவ்வளவு உயர்த்தி விட்டார்களே என்று பொது மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள், ஆட்சியில் இருக்கும்போது ஒருவிதமாகப் பேசுவதையும், ஆட்சியைவிட்டு எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு விதமாகப் பேசுவதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 26-11-1993 அன்று சேலத்திலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு மாநாட்டில் நம்முடைய முதல்வர் அவர்கள் பேசிய பேச்சை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். "தனியார் பஸ் முதலாளிகளுடன் பேரம் பேசிக் கொண்டு, அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கும் விதத்தில் கடந்த காலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்திய ஜெயலலிதா அரசு எந்தவித நியாயமுமின்றி, ஏழையெளிய, நடுத்தர மக்கள் பாதிக்கப்படும் வகையில் பஸ் கட்டணத்தை தற்போது உயர்த்தி, அதனை வரும் டிசம்பர் 1 ஆம் தேதி முதல் அமல்படுத்துவது என்று அறிவித்திருப்பதை இந்தச் செயற்குழு கண்டிப்பதுடன், உயர்த்தியதை ரத்து செய்ய வேண்டும்" என்று சேலத்திலே நடைபெற்ற செயற்குழு மாநாட்டிலே தற்போதைய முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். மேலும் அவர் பேசும்போது, திடீரென்று பேருந்து கட்டணத்தை சாதாரணமாகக் கூட அல்ல, ஒரு அளவோடு மட்டுமல்ல, படிப்படியாக அல்ல, தாறுமாறாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று பேசியிருக்கிறார்கள். நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் — நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே பேசும்போது, பார்த்தீர்களா! பார்த்தீர்களா! அடுத்த மாநிலத்தைப் பார்த்தீர்களா,



கேரளாவைப் பார்த்தீர்களா, பாண்டிச்சேரியைப் பார்த்தீர்களா என்றெல்லாம் காரணத்தைக் காட்டுவார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்களைக்கூட உள்ளபடியே பாராட்டுகிறேன். உண்மையிலேயே அவர்கள் ஒரு போராட்டம் நடத்தி இந்த அரசுக்கு தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தை விட்டுவிட்டு, ஏதோ கூட்டணிக் கட்சியிலே இருக்கிறோம், நாம் இதைப் பற்றிப் பேசாவிட்டால் மக்கள் நம்மை நிராகரித்து விடுவார்களோ என்ற ஒரே காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை குறித்து சுருக்கமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அதுதான் சிறப்புக் கவன ஈர்ப்பு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்கள் என்ன கிழித்து விட்டீர்கள், நாங்கள் என்ன கிழிக்கவில்லை என்று நீங்கள் கூறாமல் இருக்க — நாங்கள் அன்றைக்கு கிழித்தது, சென்னை-சேலம் பேருந்து கட்டணத்தை ரூ. 42.50-லிருந்து ரூ. 49.50 என ரூ. 7/- தான் உயர்த்தினோம். ஆனால் இன்றைக்கு சென்னையிலிருந்து சேலம் செல்வதற்கு பேருந்துக் கட்டணம் ரூ. 60-லிருந்து ரூ. 84/- ஆக கிட்டத்தட்ட ரூ. 24/- உயர்த்தப்பட்டுள்ளது. நாங்கள் அன்று கிழித்தது சென்னை-கோவை பேருந்துக் கட்டணம் ரூ. 62/-லிருந்து ரூ. 72/-; ஆக ரூபாய் 10/- தான் உயர்த்தினோம். ஆனால் இன்றைக்கு சென்னையிலிருந்து கோவைக்கு பேருந்துக் கட்டணம் ரூ. 102/-லிருந்து ரூ. 148/-; ஆக கிட்டத்தட்ட ரூ. 46/- என உயர்த்தி நீங்கள் கிழித்திருக்கிறீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் 2 பைசாவை உயர்த்துகிறேன் என்று ஒட்டகத்தின் தலையில்.... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டண உயர்வைப் பற்றி பேசுகின்றபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் என்ன கிழித்தீர்கள், நாங்கள் அதைக் கிழித்தோம், இதைக் கிழித்தோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலத்திலே போக்குவரத்துத் துறையிலே கிழித்தது என்ன என்பதைப் பற்றி சொல்ல ஆடிட்டர் ரிப்போர்ட் இருக்கிறது. கடந்த 5 ஆண்டு காலத்திலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எத்தனை

பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன: அந்த பஸ்களெல்லாம் எப்படியெல்லாம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டன: முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது மட்டும் அல்லாமல் எத்தனை புதிய கண்டக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள்: அந்த நியமனங்களில் எப்படியெல்லாம் முறைகேடுகள் நடத்தப்பெற்றன: புதிய வாகனங்கள் வாங்கினார்கள். வாகனங்களை வாங்கிய மறுநாளிலேயே அதிலிருந்த டயர்கள் எல்லாம் இல்லாமல் போய்விட்டன. டயர்கள் இல்லாமல் போய்விட்டன என்பது மட்டுமல்ல. (குறுக்கீடு).

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பஸ் கட்டண உயர்வு பற்றி பேசச் சொன்னால்...

**திரு. டி. சுதர்சனம்:** அப்படியெல்லாம் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதன் காரணமாகத்தான் இன்றைக்கு இந்த பஸ் கட்டண உயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அது மட்டுமல்லாமல், என்ன கிழித்துவிட்டீர்கள், என்ன கிழித்துவிட்டீர்கள் என்று சட்டமன்ற விதிகளுக்கு மாறாகப் பேசுவது முறையற்றது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

*முற்பகல் 11-50*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் பேசியதற்கு நன்றி. ஏனென்றால், அவர்கள் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதை நியாயப்படுத்துகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசவேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபுகளுக்குப் புறம்பாக நான் எதையும் பேசவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீரப்பனைப் பிடிப்பதற்காக.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சுந்தரம் அவர்கள் எதைச் சொல்லி வருகிறாரோ அதைத்தான் இங்கே வலியுறுத்த வேண்டுமேயொழிய,



எங்களுடைய கட்சி உறுப்பினர் பஸ் கட்டண உயர்வை நியாயப்படுத்துகிறாரா என்று கேட்பதெல்லாம் நியாயமில்லை. காரணம், பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று நாங்கள் சொல்லிவிட்டோம். அவர்கள் 'கிழித்தோம், கிழித்தோம்' என்று பேசுவது பாராளுமன்ற முறைக்கு, மாபுக்கு மாறானது. முதல்வர் அவர்கள் சொன்னதைக்கூட, இவர் பேசியதையும் சேர்த்து, தாங்கள் அனுமதி அளித்தால் எடுத்து விடலாம். அதை விட்டுவிட்டு, இதை நாங்கள் நியாயப்படுத்துகிறோம் என்று சொல்வதை அவர் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒன்றும் நான் வாபஸ் பெற வேண்டிய அவசியமே கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், விதிகளுக்கு உட்பட்டு, 'கிழித்தது' என்று அவர்கள் பேசியிருக்கிற காரணத்தினால், நானும் அப்படியே நினைத்ததால், இந்த வார்த்தையைப் பேசினேனேயொழிய, அது சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பானது என்று நீங்கள் நினைத்தால், அதையும் எடுத்து விடுங்கள்; இதையும் எடுத்து விடுங்கள். எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

அடுத்தபடியாக, இந்த பஸ் கட்டண உயர்வைப் பொறுத்தவரையில், மக்கள் வெறுப்புற்றிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயன்படுத்தியது, தவறான நோக்கத்தில் அல்ல. இந்தச் சட்டமன்றத்திலே எத்தனை முறை தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்கள் வீற்றிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தியாவிலே மிகச் சிறந்த பாராளுமன்றவாதி என்று அரசியல் நோக்கர்களால் பாராட்டப்பெற்றவர் அவர். எனவே, அவர் பயன்படுத்துவதில் தவறில்லை. வேண்டுமென்றால் நீங்கள் சொல்லிவிட்டுப் போங்கள்; எங்களுக்குக் கிழிக்கத்தான் தெரியும், தைக்கத் தெரியாது என்று.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்கூட, போக்குவரத்துத் துறையில் இருக்கின்ற கண்டக்டர்கள், டிரைவர்களுக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். பஸ் கட்டணத்தை உயர்த்தியதன் காரணமாக பொதுமக்களெல்லாம் வெறுத்துப் போயிருக்கிறார்கள்; சில வேகமாக இருக்கிறார்கள்; கோபம் அடைந்திருக்கிறார்கள்;

இடங்களிலே பஸ்களையெல்லாம் பிடித்து சிறை வைத்திருக்கின்றார்கள்: ஆகவே, நீங்கள் கண்டக்டர்களாக இருந்தாலும் சரி, டிரைவர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களிடம் கனிவாக, பணிவாக நடந்து கொள்ள வேண்டுமென்று ஒரு அறிக்கைகூட அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கின்றேன். எப்படியோ, பொதுமக்கள் கோபமாக இருக்கிறார்கள் என்று அவர்கள் ஒத்துக் கொண்டுவிட்டார்கள். ஆகவே, இதை எப்போது அவர் தெரிவித்திருக்க வேண்டும்? பஸ் கட்டணத்தை உயர்த்தியதற்குப் பிறகு கூறியிருக்கிறார்கள். பஸ் முதலாளிகளிடமிருந்து நாங்கள் 6 கோடி ரூபாய் வாங்கினோம் என்று கூறினார்கள். நீங்கள் ஒரேயடியாக 50 சதவிகிதம் உயர்த்திவிட்டு, எத்தனை கோடி வாங்கினீர்கள் என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், திருநெல்வேலியில் நாங்கள் நடத்த இருக்கின்ற மாநாட்டிற்கு, ஜனவரி 1, 2, 3 ஆகிய நாட்களில் நடத்துகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டிற்கு எந்த பஸ் முதலாளியும் பஸ்களைக் கொடுக்கக்கூடாது என்று நீங்கள் வாய்மொழியாகக் கூறியிருக்கிறீர்கள் என்றுகூட மக்கள் தெரிவிக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மாதிரி பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. உரையை முடித்துக் விட்டீர்கள். திரு. பி. வெங்கடசாமி.

***THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker. Sir, people are really feeling very bad about the increase in bus fares by the Tamil Nadu Government Usually, the increases will be one paise or two paise per kilometre. But, this time. I came to know that you have increased the fare from 14 paise per kilometre to 22 paise per kilometre. It is very very abnormal. Atleast the Government should have thought of increasing the bus fare little by little. Then, the burden due to the increase in bus fare would have been less to the travelling public. Everywhere the people are talking only about the abnormal increase in bus fares. So. I request the Hon. Minister for Transport and the Hon. Chief Minister to see that the increase in bus fares is reduced. so that the people would be more happy. The private bus operators were earning profit even when the fare was 14 paise per kilometre. Now. you have increased the same by about 8 paise per kilometre. It will really help the private operators to get more money. You are indirectly supporting the private bus operators. You must keep this in mind. I once again request the Hon. Minister for Transport and Hon. Chief Minister



to atleast reduce the bus fare increase by 50% so that the people would be very happy. I request on behalf of the Janata Dal. to see that half of the fare increase is withdrawn.

முற்பகல் 11.55

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில், தமிழக அரசால் உயர்த்தப்பட்டிருக்கக் கூடிய பூதாகரமான பேருந்துக் கட்டணங்களால், கோடிக்கணக்கான ஏழையெளிய, உழைப்பாளி மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தக் கட்டண உயர்வு, சமீபத்தில் மத்திய அரசால் உயர்த்தப்பட்டிருக்கக் கூடிய டீசல் விலையைத் தொடர்ந்தது என்றாலும்கூட, அந்த டீசல் விலை உயர்வினுடைய விகிதாச்சாரத்திற்கும், பேருந்துக் கட்டணத்தினுடைய உயர்வுக்கும் பல மடங்கு வித்தியாசங்கள் இருக்கின்றன. எனக்குக் கிடைத்த தகவலின்படி, தமிழக அரசுக்கு இந்தப் பேருந்துக் கட்டண உயர்வால், ஏறக்குறைய ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக இலாபம் கிடைக்கும் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. பேருந்துக் கழகங்களைப் பொருத்தமட்டிலும், அவை சேவை நிறுவனங்களாக இருக்க வேண்டுமே தவிர, பொருள் ஈட்டக்கூடிய நிறுவனங்களாக இருக்கக் கூடாது. இந்தக் கட்டண உயர்வால், இன்று இந்த அரசுக்கு, ஏழையெளிய. உழைப்பாளி மக்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கெட்ட பெயரைத் துடைப்பதற்காகவாவது, பஸ் கட்டண உயர்வை வெகு அளவிற்குக் குறைக்க வேண்டும் என்பதுதான், இந்த நேரத்திலே நான் இந்த அரசுக்கு வைக்கக்கூடிய கோரிக்கையாகும். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சி. திரு. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டண உயர்வு என்பது, சாதாரணமாக டீசல் விலையை அனுசரித்து, டீசல் விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் எப்போதும் கூடிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த தடவை, டீசல் விலை உயர்வை விட, பல மடங்கு [illegible] விகிதாச்சாரத்தைவிட அதிகமாக பஸ் டிக்கட்டினுடைய க[illegible] கூடியுள்ளது. எனவே, டீசல் விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ,

அந்த அளவுக்கு பஸ் கட்டணத்தை உயர்த்தினால், மக்களுக்கு ஓரளவுக்குப் புரிந்து கொள்வது போன்றும், ஓரளவுக்கு இலாபகரமாகவும் இருக்குமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன். பாமர மக்கள் அத்தியாவசிய பொருள்களை வாங்கி வருவதற்குக்கூட சிரமப்படுகிறார்கள். அந்த பஸ் கட்டணம் கூடிய காரணத்தினால், அத்தியாவசிய பொருள்களினுடைய விலையும் ஏறியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டதைப் பொறுத்தமட்டில், ஜே.ஜே. பஸ் என்று முந்தைய அரசு காலத்தில் ஓடிக் கொண்டிருந்தது. அந்த பஸ்களுக்கு மட்டும் கட்டணத்தைக் கூட்டியிருந்தார்கள். தற்போது அந்த ஜே.ஜே. பஸ் என்ற அந்த பெயர் மட்டும் மாற்றப்பட்டுவிட்டதே தவிர, பஸ் கட்டணம் அதே அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்த ஜே.ஜே. பஸ்களுக்குண்டான கட்டணத்தைக் குறைத்து, மற்ற பஸ்களுக்குண்டான அளவுக்கு அதைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பஸ் கட்டண உயர்வு வந்ததற்குப் பிறகு, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கு முன்பு எந்த அளவுக்கு ஸ்டேஜுகள் இருந்ததோ, அதைவிட இன்னொரு ஸ்டேஜையும் அதிகப்படுத்தி, அதாவது பாயிண்டில் இருந்து இன்னொரு பாயிண்டுக்கும் இடையில், புதியதாக சில பாயிண்டுகளை—ஸ்டேஜுகளை— ஏற்படுத்தி, அதன் மூலமாகவும் பஸ் கட்டணத்தை உயர்த்தி, பாமர மக்களுக்கு அதன் காரணமாக அதிக பளு ஏற்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அனைத்து ஸ்டேஜுகளையும் மாற்றித் தரவேண்டும் என்றும், பஸ் கட்டண உயர்வை, டீசல் விலையினுடைய விகிதாசார அளவில் கூட்ட வேண்டுமென்றும், அதிகமாகக் கூட்டியதைக் குறைக்க வேண்டுமென்றும் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று, டீசல் விலை உயர்வின் காரணமாக, தமிழகத்தில் பேருந்துகளினுடைய கட்டணம் அதிகப்படியாக உயர்ந்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், அதன் அடிப்படையிலே இன்றைய உயர்வைச் சற்றுக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் முதலில் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, இந்தப் பேருந்துக் கட்டண உயர்வினால் ஏற்பட்டிருக்கிற சுமை என்பது, உழைப்பாளி



மக்கள், தொழிலாளிகள் மற்றும் நடுத்தர மக்கள் பேருந்துகளிலே அதிகப்படியாக பயணம் செய்வதற்குத்தான், பேருந்துகள் என்பதால், இது அவர்களுக்குப் பெரிய சுமையாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நண்பகல் 12.00

27 சதவிகிதம் டீசல் விலை உயர்ந்திருக்கிறது, என்று நான் ஒத்துக் கொண்டாலும், இன்று உயர்ந்திருக்கிற பேருந்து கட்டணத்தின் அளவைப் பார்க்கிறபோது அது மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் அதை மறுபரிசீலனை செய்து குறைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக 'ஃபேர் ஸ்டேஜ்' என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே மார்த்தாண்டம் காளைச்சந்தையிலிருந்து பஸ் புறப்படுகிறது. அது மார்த்தாண்டம் காந்தி மைதானத்திற்கு வருகிறபோது ஒரு ஸ்டேஜ் வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் அங்கு ஃபேர் ஸ்டேஜ் இல்லை. இப்போது புதியதாக ஒரு ஃபேர் ஸ்டேஜ் வைத்திருக்கிறார்கள். இதிலே சங்கடம் என்ன என்று சொன்னால்-எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், மக்கள் அரசைக் குறை கூறுவதாகச் சொல்கிறார்கள்—நான் சாதாரணமாக நகரப் பேருந்துகளிலே தினசரி 10 முறையாவது ஏறி இறங்குற பணியைச் செய்கிறவன். அதனால் இந்த பஸ் கட்டண உயர்வு குறித்து அங்கே இருக்கிற மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து குறை கூறுவதைக் கேட்க முடிகிறது. மக்கள் சரமாரியாக குற்றச்சாட்டுக்களை வைக்கின்றார்கள். தினந்தோறும் அந்தச் சங்கடத்தை அனுபவிப்பவன் நான். அதனடிப்படையில் பார்க்கின்றபோது 75 பைசா என்று இருந்த பஸ் கட்டணம் 1.00 ரூபாய் 1.50 என்றெல்லாம் உயர்ந்து போய்விட்டது. அதை மறுபரிசிலனை செய்ய வேண்டும். இந்த ஃபேர் ஸ்டேஜ்களை குறைக்க வேண்டும்.

அதுபோன்று சென்னையிலிருந்து மார்த்தாண்டம் செல்வதற்கு, நகர்கோவில் செல்வதற்கு பேருந்துகளிலே இதற்கு முன்னால் 125 ரூபாய், 127 ரூபாய் என்று இருந்தது, இப்போது 200 ரூபாய் 212 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. 2, 3 பஸ்களிலே 2, 3 மாடல்களிலே உயர்த்திருக்கிறார்கள். அதிலே சென்னையிலிருந்து மார்த்தாண்டம் செல்கிறவர்கள், நாகர்கோவில் செல்கிறவர்களில் பெருவாரியானவர்கள் சாமானிய மக்கள்தான். இது அவர்களுக்கு அதிகப்படியான சுமை. இந்தச் சுமையைக் குறைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய

வேண்டுகோளாக. இந்த பஸ் கட்டண உயர்வு சம்பந்தமாக நான் இந்த அரசுக்கு வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று நம்முடைய சிட்டி சர்வீசிலேகூட பல இடங்களில் இந்த ஃபேர் ஸ்டேஜ் வைத்திருக்கிறார்கள். எல்.ஐ.சி-க்கும் சிம்சனுக்கும் இடையிலே இருக்கும் குறைவான தூரத்தில் கூட சில ஃபேர் ஸ்டேஜ்களை மாற்றியிருக்கிறார்கள். அதைக்கூட மறுபரிசீலனை செய்து முன்னால் இருந்ததைப் போல இந்த ஃபேர் ஸ்டேஜின் அளவுகளை மாற்றும்படியாகச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விரைவுப் பேருந்துக்கு முன்னால் 18 ரூபாய். 21 ரூபாய் என்றிருந்தது. மார்த்தாண்டத்திலிருந்து திருவனந்தபுரம் போக கட்டணம் பஸ் கட்டண உயர்வால் இப்போது அதிகமாகக் கூடியிருக்கிறது. இவைகளையெல்லாம் மறுபரிசீலனை செய்து மக்களுக்கு பெரிய சுமை ஏற்படாமல் அதைக் குறைத்துத் தருமாறு கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த மன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பது போல் சமீபத்தில் உயர்த்தப்பட்டிருக்கிற பஸ் கட்டணம் என்பது ஏழையெளிய நடுத்தர மக்களைப் பெரிதும் பாதித்து இருக்கிறது. இருந்தபோதும்கூட பிற மாநிலங்களைக் காரணம் காட்டி மற்ற மாநிலங்களில் இருக்கும் பஸ் கட்டண உயர்வைவிட தமிழகத்தில் ஏற்றப்பட்டிருப்பது மிகக் குறைவு என்று தமிழக அரசு அறிவித்திருந்தாலும், நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் பஸ் கட்டண உயர்வு என்பது பெரிதாக மக்கள் மனதிலே பதிந்துள்ளது. காலப்போக்கிலே மக்கள் மறந்துவிடுவார்களென்று எண்ணினாலும்கூட உயர்த்தப்பட்ட நாளிலிருந்து இன்று வரையிலும் பொதுமக்களிடமிருந்து பஸ் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போலவே நானும் அதிகமாக பஸ்ஸிலே பயணம் செய்கிற காரணத்தினாலே எளிதாகவே சிகப்புத் துண்டை வைத்து என்னை மக்கள் அடையாளம் கண்டுகொள்கிறார்கள். துண்டு ஒரு அடையாளமாகி விடுகிறது (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் அவர்கள்



பஸ்ஸில் ஏறுகிறாரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. பொதுவாகவே மக்கள். அநேகமாக பெண்களிடமிருந்துதான் இந்தக் கோரிக்கை அதிகமாக வருகிறது. அவர்கள் உடனே சொல்கிறார்கள், நேற்றையதினம் 2.00 ரூபாய்க்கும், 2.50 ரூபாய்க்கும் போய்க் கொண்டிருந்தோம், இன்றைக்கு 5.75 காசு என்றால் நாங்கள் என்ன செய்வது. எங்கள் குழந்தைகளுக்கு 2.00 ரூபாய்க்கு ரொட்டி வாங்கிக் கொண்டு போகலாம் என்று வைத்திருந்த காசைக்கூட நாங்கள் பஸ் டிக்கட்டுக்காக கொடுத்துவிட்டுப் போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று மக்கள் வருத்தத்தோடும் மன வேதனையோடும் குறையை வெளிப்படுத்துகிற நிலை இருக்கிறது. அதற்காக பஸ் கட்டணம் உயர வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

ஏற்கெனவே இருந்த தமிழக அரசினுடைய, பல்வேறு பெயர்களால் இயங்கிக் கொண்டிருந்த பஸ் நிர்வாகம் எவ்வளவு சீர்கேடாக இருந்தது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னோம். இப்போது சமீபத்தில் அவையெல்லாம் புதிதாகப் புனரமைக்கப்பட்டு இப்போது எந்த பஸ்ஸும், எந்த இடத்திலும் ரோட்டிலே எண்ணுகிற அளவுக்கு நிற்கவில்லை ஓட்டிக் கொண்டிருக்கிறது. ஓரளவிற்கு பஸ் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இருந்தபோதிலும்கூட, இப்படி ஒரு அதிரடியான நடவடிக்கை என்பது அனைத்துத் தரப்பினரையும் பாதித்திருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்து இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். நாளடைவில் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தொடர்ந்து இந்தக் கோரிக்கைகள் வந்துகொண்டுதான் இருக்கும். இந்தச் சட்டமன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பாகக் கூட திருவள்ளுவர் பஸ்ஸிலே நான் வருகிறபோதுகூட சொல்கிறார்கள் எப்படியாவது முதலமைச்சரிடத்திலே சொல்லி இந்த பஸ் கட்டணத்தைக் குறைக்கச் சொல்லுங்கள் என்று. பஸ் கட்டணம் அதிகமாகியிருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அதை மறுபரிசீலனை செய்து மீண்டும் இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேருந்து கட்டண உயர்வைப்பற்றி, மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையிலே சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்கள் கட்டண உயர்வைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும், பெரும்பாலும் அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பேருந்துகள் தரமாக இருக்க வேண்டும், பேருந்துகள் உரிய நேரத்திற்கு வரவேண்டும், புதிய பேருந்துகள் விடவேண்டும் என்ற கோரிக்கைகளையும் அதிகமாக வைத்ததையும் சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள்.

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்கிறபோது டீசல் விலை உயர்வைப் பற்றி குறிப்பிட்டார்கள். டீசல் விலை ஏதோ 20, 22 சதவீதம்தான் உயர்ந்து இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அது தவறான புள்ளிவிவரமாகும். சென்ற முறை கட்டணம் உயர்த்தப்பட்டபோது அப்போதைய டீசல் விலை 6 ரூபாய் 97 காசு. இன்று டீசல் விலை 11 ரூபாய் 53 காசு. ஆக கிட்டத்தட்ட 56.08 சதவீதம் அளவுக்கு 4 ஆண்டுகளில் டீசல் விலை உயர்ந்திருக்கிறது. முன்பெல்லாம் கட்டணத்தை உயர்த்துகிறபோது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தியிருக்கிறார்கள். 7-10-1989-ல் டீசல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் 78 பைசா. அதற்குப் பிறகு 16-10-1991-ல் கட்டணத்தை உயர்த்துகிறபோது 2 பைசா உயர்த்தினார்கள். அப்போது டீசல் விலை லிட்டருக்கு 5 ரூபாய் 60 காசு. ஆக உயர்ந்திருப்பது ஒரு ரூபாய் 80 காசுதான். ஒரு ரூபாய் 80 காசு உயர்ந்து இருந்தபோது அவர்கள் கட்டணத்தை உயர்த்தியது 2 பைசா. இப்போது உயர்ந்து இருப்பது 6 ரூபாய் 97 பைசாவிலிருந்து 11 ரூபாய் 53 பைசாவாகும். கடந்த 4 ஆண்டுகளில் 3 முறை டீசல் விலை உயர்ந்திருக்கிறது. ரூ.7.85-க்கு ஒரு முறை உயர்த்தப்பட்டது. 9 ரூபாயாக மறுமுறை உயர்த்தப்பட்டது. 9 ரூபாயிலிருந்து 11 ரூபாய் 53 காசாக 3-வது முறை உயர்த்தப்பட்டிருக்கிறது. நான் சொல்வது முன்பு கட்டண உயர்வு உயர்த்தப்பட்டதற்கும் இப்போது கட்டண உயர்வு உயர்த்தப்பட்டதற்கும் இடையிலான 4 ஆண்டுகளில் நிகழ்ந்திருக்கிற டீசல் விலை உயர்வு பற்றியதாகும். இந்த டீசல் விலை உயர்வானது 56.08 சதவீதமாகும். ஆக 4 ரூபாய் 56 பைசா என்ற அளவில் ஒரு லிட்டருக்கு உயர்ந்திருக்கிறது.

ஒரு ரூபாய் 80 பைசா உயர்ந்தபோது, கடந்த கால ஆட்சியில் 2 பைசா கட்டணத்தை உயர்த்தினார்கள். இப்போது 4 ரூபாய் 56 பைசா உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் அதற்குப் பிறகு இடையிலே கட்டணத்தை உயர்த்தியிருக்கலாம். 1996-ல் டீசல் விலை உயர்த்தப்பட்டபோது பத்திரிகைக்காரர்கள் கேட்டார்கள். ரூ. 7.85-லிருந்து 9 ரூபாயாக டீசல் விலை உயர்ந்திருக்கிறதே நீங்கள் பேருந்து கட்டணத்தை உயர்த்தப்போகிறீர்களா? உயர்த்தப்போகிறீர்களா? என்று கேட்டார்கள். நான் முதலமைச்சர் அவர்களை சந்தித்து கேட்டபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த நிலையிலே கட்டணத்தை உயர்த்தினால் மக்களுக்கு இன்னும் கோபம் வரும் என்று சொன்னார்கள். ஏனென்றால் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்கு அறிவார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது சென்னையிலே பார்த்தால் பாதி வண்டிகள் நின்றுகொண்டிருக்கும். வெளியிலே சென்று பார்த்தால் பாதி வண்டிகள் 'பிரேக் டவுன்' என்று நின்றுகொண்டிருக்கும். உதிரிப் பாகங்களின் மோசமான நிலையையும் நன்றாக உணர்ந்திருப்பீர்கள். இப்போது ஓடாத பேருந்துகளை வைத்துக்கொண்டு, ஒழுகும் பேருந்துகளை வைத்துக்கொண்டு கட்டணத்தை உயர்த்தினால் மக்கள் மேலும் வெறுப்பு அடைவார்கள், ஆகவே சிறிது காலம் பொறுத்திருந்து உயர்த்தலாம் என்று கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.



உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப் போல், எப்போது டீசல் விலை உயர்த்தப்படும் என்று எதிர்பார்த்து கட்டணத்தை உயர்த்தியதாகச் சொன்னாலும், எங்களுக்கும் ஒரு காரணம் வேண்டும். அதே நேரத்தில் டீசல் விலை கிட்டத்தட்ட 56.08 சதவீத அளவுக்கு உயர்ந்ததற்குப் பிறகுதான் இந்தக் கட்டண உயர்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுவும்கூட 22 பைசா என்று அறிவிக்கப்பட்டு அரசியல் தலைவர்களுடைய கருத்துக்களை ஏற்று, பொது மக்களுடைய கருத்துக்களை ஏற்று பிறகு அது 20 பைசாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதேசிகன் அவர்கள் சொல்கிறபோது 'நீங்கள் அதை எல்லாம் சொல்லுவீர்கள்' என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஞானதேசிகன் அல்ல ஞானசேகரன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு ஞானமே கிடையாது. (சிரிப்பு).

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதனால்தான் சேகரிக்கிறார் (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பேசக்கூடாது நாம் தமிழகத்து மக்களுடைய வாக்குகளைப் பெற்றுதான் வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர் ஒன்றை மறந்து இருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்று சொன்னபோது, மற்ற மாநிலங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அளவுக்குச் சம்பள உயர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதை ஞானசேகரன் அவர்கள் புள்ளிவிவரங்களோடு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எடுத்துச்சொல்லி, அதுபோல் இங்கே எங்களுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கேட்டதுபோல மற்ற மாநிலங்களுடைய பேருந்து கட்டணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துதான் செய்ய வேண்டும். ஏனென்றால் இது 'இண்டர் ஸ்டேட்' தொடர்புடையதாகும். அதுவும் குறிப்பாக கர்நாடகத்தில், கேரளத்தில் நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறபோது அந்த மாநிலங்களின் கட்டணங்களோடு ஓரளவுக்கு ஒத்துப்போகிற அளவில்தான் கட்டணங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் மற்ற மாநிலங்களில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் சுமுகமாக நடக்க முடியும் குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் ஒரு கிலோமீட்டருக்கு 14 பைசா இருக்கிறபோது, கேரளாவில் ஒரு கிலோ மீட்டருக்கு 22 பைசா வாங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது கேரள போக்குவரத்துக் கழகப் பேருந்து தமிழகத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும். ஏனென்றால், கேரள எல்லையில் அவர்கள் ஓட்டுகிறபோது கிலோ மீட்டருக்கு 22 பைசா டிக்கெட் வாங்குகிறார்கள், தமிழகத்தினுடைய எல்லையில் ஓட்டுகிறபோது 14 பைசா வாங்குகிறார்கள். அவர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதனால் அவர்கள் இங்கே வருவதில்லை. நம்முடைய பேருந்துகள் அங்கே செல்வதற்கும் அவர்கள் அனுமதிப்பதில்லை. ஆனால் நமது பேருந்துகள் அங்கே சென்றால் நமக்கு லாபம் கிடைக்கும். நம்முடைய மண்ணிலே கிலோ மீட்டருக்கு 14 பைசா. ஆனால் கேரளாவிற்குச் செல்லுகிறபோது அங்கே 22 பைசா என்றால் நமக்கு லாபம் கிடைக்கும்.





பிற்பகல் 12-10

ஆகவே, அந்த இண்டர்-ஸ்டேட் பெர்மிட் என்று சொல்கிற அளவில் கூட மாநிலங்களுக்கிடையில் போக்குவரத்து நடத்துகிறபோது. கேரள அரசாங்கமும் இன்றைக்குப் பேருந்துகளை அனுமதிப்பதில்லை. அது போலத்தான் கர்நாடக அரசாங்கமும்.

மாண்புமிகு ஜனதா தள உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, பெங்களூருக்கு அதிக பேருந்துகள் விட வேண்டும். விட வேண்டு என்று கேட்கிறபோதெல்லாம் நானே இந்தச் சட்டமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். மற்ற மாநிலங்களோடு போக்குவரத்தை நடத்துகிறபோது அந்த மாநிலங்களோடு ஓரளவுக்காவது ஒத்துப் போகிற அளவிற்கு. கட்டண உயர்வை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதிலும், மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்திலே கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். கேரளத்தில் கிலோ மீட்டருக்கு 22 காசு, ஆந்திராவில் கிலோ மீட்டருக்கு 22 காசு, கர்நாடகத்தில் கிலோ மீட்டருக்கு 23.17 காசு, மேற்கு வங்காளத்தில் கிலோ மீட்டருக்கு 22 காசு, உத்திரப்பிரதேசத்தில் கிலோ மீட்டருக்கு 27.8 காசு, மத்தியப் பிரதேசத்தில் கிலோ மீட்டருக்கு 24 காசு, ராஜஸ்தானில் கிலோ மீட்டருக்கு 23.75 காசு. இந்த டீசல் விலை உயர்வுக்குப் பிறகு, இப்போது ஆந்திராவிலே 22 காசிலிருந்து 24 காசாக உயர்த்தி இருக்கின்றார்கள். நம்முடைய மாநிலத்திலே மட்டும் தான். எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு கிலோ மீட்டருக்கு 20 பைசா என்பது குறைவாகத்தான் இருக்கின்றது. இந்த 6 பைசா உயர்வு என்பது ஒரே நேரத்திலே செய்யப்பட்டாலும், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு செய்யப்பட்டிருக்கிற உயர்வு என்பது கருதுகிறபோது நிச்சயமாக நாம் இதனை குறைவாகத்தான் கணக்கிட வேண்டும்.

மேலும், இந்த அரசு என்ன கிழித்தது என்றெல்லாம் கூட திரு. கந்தாம் அவர்கள்கேட்டார்கள். குறிப்பாக பழைய அரசிலே டிக்கட் கிழித்ததிலே எவ்வளவு கிழித்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதை நான் சொன்னால் இங்கே தெளிவாகத் தெரியும். பழைய அரசு காலத்திலே ஒரு போக்குவரத்து கழகத்தில் ஆயிரம் டிக்கட்டுகளைக் கொண்ட ஒரு புத்தகத்தை அச்சடிக்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கான செலவு 760 ரூபாய். இப்போது பேப்பர் விலை எதுவும் குறையவில்லை. பிரிண்டிங் சார்ஜ் எதுவும் குறையவில்லை.

ஆனால் இன்றைக்கு ஆயிரம் புக்கிற்கு. 475 ரூபாய்க்கு ஆயிரம் புக்கிற்கு நான் சொல்வது, இதிலே கோடிக்கணக்கிலே மிச்சம். இந்த 200 ரூபாயை யார் கிழித்தது? இதனை எதற்காக எடுத்துக் கொண்டு போனார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சிந்திக்க வேண்டும். டிக்கட் கிழிப்பதிலே 3 கோடி, 4 கோடி ரூபாய் தான் வரும். இந்த பஸ்-பாடி கட்டுவதிலே 50 கோடி, 60 கோடி, 100 கோடி வருவது மாதிரி கிழிக்கலாம். அதிலே கிழித்திருப்பது, 1995-96-இலே, முன்பு இருந்த ஆட்சி ஒரு பேருந்து கட்டுவதற்கு-2-டன் வீல்பேஸ் மொபசல் டைப்—கிளாஸ் விண்டோஸ்—ஏன் சொல்கிறேன் என்றால், நாங்கள் கட்டியது ரொம்ப தரமான பஸ் என்று சொல்லிவிடுவார்கள், அதனைப் பற்றி மக்களிடம் கேட்டால் தெரியும், என்னென்ன பஸ் எப்படி எப்படி இருக்கிறது என்று—எனவே இந்தப் பேருந்தை கட்டுவதற்கு 1995-96-ல் அப்போதிருந்த சேரன் போக்குவரத்துக் கழகத்திலே பொருள் வாங்குவதற்கு மட்டும் 3,03,000 ரூபாய். இன்றைக்கு எவ்வளவு தெரியுமா? ரூ. 1,82,000 ஒரு பேருந்துக்கு. இப்போது 2,000 பஸ் கட்டுவதனால் 20 கோடி ரூபாய் வரை மிச்சப்படுத்தியிருக்கிறோம். உதிரி பாகங்களில் மட்டும் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்திலே இதே மாதிரி ரூ. 3,03,000. இன்றைக்கு 1,97,000 ரூபாய். பேருந்துகள் வாங்கியதிலும், டிக்கட்டுகளை அச்சடிப்பதிலும் குறைத்து இருக்கிறோம். அதே மாதிரி அப்போதிருந்த எம்.பி.டி.சி-லே 3.38 லட்சம், இன்றைக்கு 1.99 லட்ச ரூபாய். இதே மாதிரி பல போக்குவரத்து கழகங்களிலும் நிலைமை இருக்கிறது. ஆர்.எம்.டி.சி.-ல் அன்று 2,86,000 ரூபாய். இன்றைக்கு 1,99,000 ரூபாய். கே.டி.சி.-ல் அப்போது ரூ. 3,08,000 இன்று 2,54,000 ரூபாய், தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இவை உண்மையா என்பதை வேண்டுமானால் தெரிந்துகொள்ளலாம். ஒரு பேருந்தினுடைய கட்டுமான பணியிலே மட்டும் குறைந்தபட்சம் ஒரு லட்ச ரூபாயை மிச்சப்படுத்தியிருக்கிறோம். இவ்வளவு குறைத்து இருக்கிறீர்களே, அப்போது ஏன் கட்டணத்தை ஏற்றினீர்கள் என்று கேட்கலாம். நியாயமாக இருப்பதாகத் தெரியும். ஆனால் இந்தப் பேருந்துகளை கட்டுவதெல்லாம் மூலதனச் செலவிலேதான் வரும். இது அன்றாட இலாப நட்ட கணக்கிலே வருடாவருடம் வராது. மூலதனச் செலவிலே இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக கிட்டத்தட்ட ரூ.100 கோடி ரூபாய் வரை மிச்சப்படுத்தியிருக்கிறோம். பேருந்து உதிரி பாகத்தில் 'ஸ்பிரிங்' ஒன்று வாங்குவார்கள். அது பற்றி இங்குள்ளவர்களுக்குத் தெரியும். அதிலே மட்டும் 35,000 ரூபாயக்கு மேலே வாங்கினார்கள். இப்படி....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாராளுமன்ற முறைக்கு சற்று மாறுபாடாக ஏதோ தெருக்களில் சண்டை போடுவது போல அடிக்கடி 'கிழித்தது' என்ற வார்த்தை வந்து போய் கொண்டிருப்பது இந்த அவைக்கு நல்லதல்ல. எனவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் திரு. சுந்தரம் மற்றும் அமைச்சர் அவர்கள் 'கிழித்தது' என்று கூறிய வார்த்தைகளை எடுத்துவிடுவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாராளுமன்ற மரபுக்கு மீறிய வார்த்தையல்ல.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதிரி பாகங்கள் வாங்குவதிலே மட்டும்—ஸ்பிரிங் என்ற ஒரு பொருள் வாங்கியதற்காக - பழைய ஆட்சிக் காலத்திலே செய்த செலவு சராசரியாக ஒரு ஸ்பிரிங்குக்கு ரூ.35,000/-. ஆனால் இன்று ஒரு ஸ்பிரிங் ரூ.29,870-தான் ஆகிறது. ஒரு ஸ்பிரிங்குக்கு மட்டும் கிட்டத்தட்ட 5,300 ரூபாய் மிச்சம்: ஒரு வருடத்திற்கு 7,000 மெட்ரிக் டன் வாங்குகிறோம்: அதிலே மட்டும் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் மிச்சம். ஒவ்வொரு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதில் — ஒவ்வொரு உருப்படியின் — விலை இப்போது குறைந்து இருக்கிறது. அதற்குப் பிறகு நாங்கள் வாங்கிய பொருள்களின் எண்ணிக்கையும் அதிகம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். பழுதுபார்க்க வேண்டிய நிலையில் ஓட்டையோடு விட்டுவிட்டு போனவற்றையும் சீர் செய்ய வேண்டிய நிலைமை இருந்த காரணத்தால், அவைகளுக்கு எல்லாம் அதிகப் பொருள்கள் வாங்க வேண்டியிருந்தது. ஒரிஜினல் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டியிருந்தது. இவைகளையெல்லாம் வாங்கியதன் விளைவாகத்தான் — இன்று சி.பி.ஐ. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல — பல இடங்களில் பேருந்துகள் பழுதுபட்டு நிற்கக்கூடாது என்ற அளவுக்குப் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு, ஓரளவுக்கு அவைகள் செம்மையாக்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்றபோது இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை — 1995-96-லே இருந்தது - 15,857; இந்த

வருடத்தில் இப்போது அக்டோபர் மாதம் வரை 16,710 பேருந்துகள்: 883 பேருந்துகள் உயர்ந்திருக்கின்றன— புதிய பேருந்துகள் வாங்கியது மட்டும்; ரிபிளேஸ்மென்ட் கிடையாது — வழித்தடங்கள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. புதிய வழித்தடங்களில் மட்டும் 659 பேருந்துகள்: எண்ணிப்பார்க்க வேண்டும்: இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 17 மாதங்களில் 659 புதிய வழித்தடங்கள், பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. வழித்தடங்கள் நீட்டிப்பு போன்றவைகளின் மூலமாக 1,250 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 1,909 புதிய வழித்தடங்கள், வழித்தடங்கள் நீட்டிப்பு போன்றவற்றை இந்த 17 மாத காலங்களில், இதுவரை எந்தக் காலத்திலும் செய்யப்படாத அளவில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு செய்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 வழித்தடங்கள் என்ற அடிப்படையிலேயும் பேருந்துகள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன.

கடந்த கால ஆட்சியிலேதான் — மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடனே கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தது — பஸ் முதலாளிகளிடம் பேசி அவர்களின் மூலமாக கிராமப்புறங்களில் ஓடிக்கொண்டிருந்த தனியார் பேருந்துகளையெல்லாம், ஓடிக்கொண்டிருந்த தடங்களை விட்டுவிட்டு, முக்கிய வழித்தடங்களிலே ஓடலாம் என்ற அடிப்படையில். அப்போது இருந்த பஸ் முதலாளிகளிடம் ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அளவிற்கு வசூல் செய்து அவைகளைக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருந்த காலக்கட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். நமது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அதனை ரத்து செய்துள்ளார்கள். அதற்குப் பிறகு இன்று தனியார் முதலாளிகள் அனைவருமே. பல முறை முறையிட்டும்கூட. சட்டப்படி கிராமங்களிலே ஓட்டினால்தான் உங்களுடைய லைசன்ஸ் இருக்கும் என்று அவர்களிடமும் சொல்லி, கோர்ட்டுக்குப் போனவர்களையும் போகக் கூடாது என்று சொல்லி அந்த முறையை ரத்து செய்தார்கள். 20 கோடி ரூபாய் லஞ்சம் அவர்கள் யாருக்குக் கொடுத்தார்கள் என்று இன்றும் தெரியாது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். அப்போதிருந்த அந்தச் சூழ்நிலைகளை எல்லாம் ரத்து செய்து, மீண்டும் கிராமங்களுக்கு அரசுப் பேருந்துகளை விடச் செய்ததுடன், தனியார் பேருந்துகளையும் விடச் செய்திருக்கிற அரசுதான் இந்த அரசு. கலைஞர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியது அப்போதிருந்த தனியார்களிடம் வாங்கியதைப் பற்றித்தான். ஆனால் இந்த அரசு வாங்கியதாக நீங்கள்



எப்போது சொன்னாலும். நிச்சயமாக நாங்கள் மறுத்து அதற்குப் பொறுப்பேற்கத் தயாராக இருக்கிறோம். தனியாரிடம் வாங்க வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை; தனியாரிடம் வாங்கியதும் இந்த அரசு இல்லை; தனியாரிடம் யாருக்காக பேருந்துகளை இலவசமாக வழங்குங்கள் என்று கேட்கிற அரசும் இந்த அரசு இல்லை; கடந்த காலங்களில் அழைத்துக் கொண்டு சென்றதையெல்லாம் பஸ் முதலாளிகளே பல இடங்களில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைகளை எல்லாம் நீக்கியதன் விளைவாகத்தான் புதிய பேருந்துகள் விடப்படுகின்றன.

டீசல் கிட்டத்தட்ட 56% உயர்ந்ததற்குப் பிறகும், பல்வேறு பொருட்களின் விலை உயர்ந்ததற்குப் பிறகும், இன்று 47% தான் கட்டணம் உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால் நட்டம் அதிகம் வந்துவிடக்கூடாது என்ற காரணத்தால்தான். கடந்த காலங்களிலே 300 கோடி ரூபாய் அளவில் நட்டம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த ஆண்டு டீசல் விலை உயர்ந்திருக்கிற காரணத்தால், மேலும் 100 கோடி ரூபாய் வரும் என்ற அடிப்படையில் 400 கோடி ரூபாய் நட்டம் வரும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே 20 பைசா என்ற கட்டண உயர்வைக் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலமாக இந்த 400 கோடி ரூபாய் நட்டத்தைச் சீர்செய்ய முடியும். நிச்சயமாக வருகிற ஆண்டுகளில் — இலாப நோக்கோடு செய்யப்பட்ட உயர்வு அல்ல — இலாப நட்டம் இல்லாமல் இருந்தாலே போதும் என்ற நோக்கத்தோடுதான் இந்தப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் முன்வைத்திருக்கிற கருத்துக்களையெல்லாம் நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். ஒரே நேரத்தில் இவ்வளவு உயர்த்திவிட்டீர்களே என்ற குறை இருந்தாலும்கூட — உங்களுடைய கோரிக்கைகள், மக்களுடைய கோரிக்கைகள் — கிராமங்களுக்குப் பேருந்துகள் விட வேண்டும், அதுவும் குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிளஸ்-2 வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்களை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் கொடுத்துவிட்ட காரணத்தால் கிராமங்களுக்குச் சென்றால், பேருந்துவிட வேண்டுமென்று கூறுகிறார்கள் என்று சொன்னார்கள். அவைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கிறது. பஸ் பாஸ்களை கொடுத்துவிட்டு, பஸ் இல்லை என்று சொன்னால் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே புதிய பேருந்துகளை,

புதிய தடங்களை இயக்குவதற்கு இந்தச் செலவுகள் எல்லாம் ஆகும் என்கிற காரணத்தால் இந்த உயர்வு 4 வருடத்திற்குப் பிறகு, ஒரே நேரத்தில் சற்று அதிகமாக இருந்தாலும்கூட, செய்யப்போகிற நன்மைகளை எதிர்பார்த்து செய்திருக்கிற நன்மைகளைக் கருத்திற்கொண்டு, அருள் கூர்ந்து இந்தக் கட்டண உயர்வை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையே நான் பதிலாக அளித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இதில் இல்லை. உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** அவருடைய கருத்தைக் கூற அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் வக்காலத்து வாங்குகிறீர்களா அவர்களுக்கு. உட்காருங்கள் இல்லையென்றால் இந்த இருக்கைக்கு நீங்கள் வந்து உட்காருங்கள்; அவையை நடத்துங்கள், திரு. இரா. தாமரைக்கனி.

*பிற்பகல் 12-20*

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவ... அவர்களே, பஸ் கட்டண உயர்வை நியாயப்படுத்தி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள், கருத்துக் களைச் சொல்கிறார்கள். பஸ் கட்டணம் எவ்வளவு உயர்த்தினோமோ, அதை பூராவுமே ரத்துச் செய்ய வேண்டுமென எங்களுடைய அனைத்திந்திய அண்ணா தி.மு.க., ம.தி.மு.க., ஜனதா கட்சி போன்றவை எல்லாம் போராட்டம் நடத்தி தாலுகா அலுவலகங்களில் மனுக்கள் கொடுத்தோம். அதையும் இந்த அரசு கவனிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், எல்லா கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் வற்புறுத்தியும் பஸ் கட்டணத்தை முழு அளவும் குறைக்காத காரணத்தால், ஏற்றிய கட்டணத்தை முழு அளவும் குறைக்காத காரணத்தால், அமைச்சருடைய பதில் திருப்திகரமாக இல்லாத காரணத்தால், எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்யாமல் அமர்ந்து இருக்கின்ற கட்சிகளின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தந்து இருக்கின்ற உறுதிமொழி, இந்த பஸ் கட்டண உயர்வு 2001 வரையில் அப்படியே இருக்கும்; இடையிலே எத்தனை முறை, (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை முறை டீசல் விலை உயர்ந்தாலும், பஸ் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என்ற உறுதியை அளித்து, எல்லோரும் அரசோடு ஒத்துழைத்து நட்டத்தை ஈடுகட்டுவதில் நீங்களும் பங்கு பெற்று எங்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்று பொறுப்போடு அமர்ந்து இருக்கின்ற எல்லா கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்பு

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர் பெருமக்களை இப்பேரவையின் 4-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்

திரு. இரா. ஆவுடையப்பன்

டாக்டர் லை. இராமசாமி

திரு. செ. இராமலிங்கம்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

திரு. கே. சுப்பராயன்

[1997 அக்டோபர் 14

# 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) சென்னை மாநகர காவற் படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு சென்னை மாநகர காவற் படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னை மாநகர காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) இந்திய சாலைச் சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997- ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**(ஊ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையில் ஒரு ஆலோசனையை நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Presiding Officers போடுவதில், J.C.L. மூன்று ஆண்டு காலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், Consideration-ல் official ஆகப் பேசலாம். இப்போது unofficial-ஆக அமைச்சரிடம் இதைச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு ஆலோசனை என்னவென்றால், மூன்றாண்டுகள் என்று இருப்பது பொருளற்றதாக இருக்கிறதே, அதை - மூன்றாண்டுகள என்று சொல்லியிருப்பதை நீக்கிவிடுவதற்கு அரசாங்கமே ஒரு திருத்தத்தை முன்மொழியலாமே என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குறித்துத் திருத்தம் கொடுக்கலாம். இப்போது அறிமுக நிலையில் குறிப்பிடுகிறார். இருந்தாலும், இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது, அவர்கள் சொல்கிற கருத்தையும் எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம்.





**(எ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஏ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. புலவர் பூ.ம. செங்குட்டுவன்] [1997 அக்டோபர் 14

"1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-30

## 6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98 - அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997-98 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். (a) மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 953 கோடி 58 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 453 கோடி 58 இலட்சம் வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 500 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

(a) 252-254-ம் பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன.



1997 அக்டோபர் 14] [கலைஞர் மு. கருணாநிதி]

2. 1997-98-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்த பின்னர் சில எதிர்பாராச் செலவினங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் சில அவசரச் செலவினங்களை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு எதிர்பாராச் செலவு நிதியிலே அனுமதிக்கப்பட்ட தொகையை ஈடு செய்வதற்காகவே முக்கியமாக இத்துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகவே கூற விழைகின்றேன்.

3. தமிழ்நாடு சட்டமன்றத்தின் பவள விழா, தமிழ்நாடு சட்டப் பேரவையின் வைர விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான செலவை ஏற்பதற்கென, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 28 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 7 - மாநிலச் சட்டமன்றம்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. 1988-ம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே, மாவட்ட நீதிபதிகள் பதவி நிலையிலே உள்ள தனி நீதிபதிகள் தலைமை வகிக்க வேண்டிய மூன்று கூடுதல் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு அரசு, அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலேயிருந்து ரூபாய் 19 இலட்சத்து 32 ஆயிரம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 13 - நீதி நிருவாகம்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. 1996-97-ஆம் ஆண்டில் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தல் இரண்டாம் கட்ட திட்டம் தொடர்பாக, அரசு, ரூபாய் 1 கோடி 10 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 14 - சிறைச் சாலைகள்" மற்றும் "மானியக் கோரிக்கை 56 - பொதுப் பணிகள் - கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. காவல் துறைப் பணியாளர்களுக்கு உணவளிப்பதற்கான கட்டணங்களை உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கு முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலேயிருந்து ரூபாய் 2 கோடி 73 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை

மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 15 - காவல் துறை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. சேலம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளியில் காவல்துறை ஆணையர் அலுவலகங்கள் புதிதாகத் தொடங்கவும், அங்குக் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும் தொலைபேசி, மோட்டார் வண்டிகள் போன்ற தொடரா இனச் செலவுக்கு அரசு அனுமதி வழங்கி முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 14 கோடி 7 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 15 - காவல் துறை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. காவல்துறைப் பிரிவுகளுக்கு பயனற்றதென்று ஒதுக்கப்பட்ட மோட்டார் வண்டிகளுக்குப் பதிலாக 76 புதிய மோட்டார் வண்டிகளை வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 3 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 15 - காவல் துறை" என்ற தலைப்பின் கீழ சேர்க்கப்பட்டுள்ளது.

9. மாவட்டங்களுக்கும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை மாற்றி 15 பல்கலைக் கழகங்களில் அந்தத் தலைவர்களின் பெயர்களால் 28 அறக்கட்டளைகள் ஏற்படுத்துவது என்று அரசு முடிவு செய்து அதற்கு ரூபாய் 7 கோடி துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 13, 17, 18, 20, 22" ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்காக அவசர சிகிச்சை வேன்கள் வாங்க ரூபாய் 9 கோடி 91 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 9 கோடி 91 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 18 - மருத்துவம்" மற்றும் "மானியக் கோரிக்கை 19 - மக்கள் நல்வாழ்வு" என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.



11. திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரில் அரசினர் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் திருச்சிராப்பள்ளியில் தொடங்குவதற்காகவும், அதன் பணியாளர்களுக்கும் அக்கல்லூரி தொடர்பாக ஏற்படக்கூடிய தொடரா இனச் செலவிற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 3 கோடி 45 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 18 - மருத்துவம்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. 1997-98-ல் மாண்புமிகு முதலமைச்சரின் "பெருமளவில் மரம் வளர்க்கும் திட்டத்"தைச் செயல்படுத்துவதற்காக அரசு, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 7 கோடி 35 இலட்சம் முன்பணம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. 1997-98-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் ம. சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், மீனவர்களுக்கு 1000 வீடுகளைக் கட்டுவதற்காக, அரசு கூடுதலாக ரூபாய் 10 கோடி 80 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 21 - மீனளம்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க, அரசு 826 கால்நடை வளர்ப்பு உதவியாளர் பதவிகளுக்கு அனுமதி வழங்கியது. இதற்கு முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 62 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 22 - கால்நடை வளர்ப்பு" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

15. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு சேலை, வேட்டிகள் இலவசமாக வழங்குவதற்கு ரூபாய் 21 கோடி கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 25 - கைத்தறியும் துணித் தொழிலும்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 அக்டோபர் 14

பிற்பகல் 12-35

16. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு 1992-93-லிருந்து
1995-96 வரையிலான கால அளவிற்குரிய நிகரச் செலவு மானிய
நிலுவைத் தொகையை வழங்குவதற்காக அரசு ரூபாய் 13 கோடி 70
இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில்
"மானியக் கோரிக்கை 26 - கதர்-கிராமத் தொழில்கள்" என்ற தலைப்பின்
கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

17 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 384 புதிய ஜீப்புகளை வாங்க அரசு
அனுமதித்து மொத்த செலவுத் தொகையில் ஒரு பகுதியை பத்தாவது
நிதிக்குழுவின் நிதியிலிருந்து செலவிடுவதற்கும், எஞ்சியுள்ள தொகை
ரூபாய் 5 கோடியை மாநில நிதியிலிருந்து செலவிடுவதற்கும்
ஆணையிட்டுள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய்
5 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை
மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்ற
தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

18. கவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம் நினைவு ஊரக மேம்பாட்டுத்
திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, ரூபாய் 1 கோடி 5 இலட்சம்
அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக்
கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ்
சேர்க்கப்பட்டுள்ளது.

19. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்
திட்டத்தின்கீழ் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும்
பணிகளை மேற்கொள்வதற்காக தொகுதி ஒன்றிற்கு ரூபாய் 25 இலட்சம்
வீதம் மொத்தம் ரூ. 58 கோடி 75 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.
இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 27 - ஊரக
வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

20. 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட
'அண்ணா மறுமலர்ச்சி' திட்டத்திற்காக ரூபாய் 50 கோடி அரசு
அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக்
கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ்
சேர்க்கப்பட்டுள்ளது.

21. "நமக்கு நாமே" என்ற மற்றொரு புதிய திட்டத்திற்காக இந்த
அரசு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை துணை



1997 அக்டோபர் 14] [கலைஞர் மு. கருணாநிதி]

மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்ற
தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

22. 1997-98 ஆம் ஆண்டிற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
திருமண உதவித் திட்டத்திற்கு கூடுதலாக ரூபாய் 21 கோடி 15
இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை, துணை
மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற
தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

23. முடமானவர்களைத் திருமணம் செய்து கொள்ளும்
சாதாரணமான நபர் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 வீதம் 145 நபர்களுக்கு
உதவித் தொகை வழங்குவது தொடர்பாக அரசு, ரூபாய் 7 இலட்சத்து
25 ஆயிரம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில்
"மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற தலைப்பின்கீழ்
சேர்க்கப்பட்டுள்ளது.

24. தற்போது நடைமுறையிலுள்ள பெண் குழந்தைகள் பாதுகாப்புத்
திட்டத்தை ஒரு பெண் குழந்தை மட்டும் பயனடையும் வரைமுறையை
திருத்தியமைத்து இரு பெண் குழந்தைகள் பயனடையும் வகையில்
விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு கூடுதலாக ரூபாய் 4
கோடி 5 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை
மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்ற
தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

25 இந்திய விடுதலைப் பொன் விழா ஆண்டையொட்டி
சமத்துவபுரம் என்ற பெயரால் 50 இடங்களில் குடியிருப்புகளை நிறுவ
அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி ஒவ்வொரு குடியிருப்பிலும்
அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழும் வகையில் 100
குடும்பங்களுக்கு அரசு, மானியத்தோடு எல்லா வசதிகளோடு வீட்டு
வசதி செய்து கொடுக்கும். இதற்காக அரசு ரூபாய் 5 கோடி
முதற்கட்டமாக அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில்
"மானியக் கோரிக்கை 30 - பட்டியல் பழங்குடியினர், பட்டியல்
சாதியினர் முதலியோர் நலன்" என்ற தலைப்பின் கீழ்
சேர்க்கப்பட்டுள்ளது.

26. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழைகளுக்கு வீட்டுமனை
வழங்கும் திட்டத்தை அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்
முன்னேறிய வகுப்பினருக்கும் அரசு நீட்டியுள்ளது. இதற்காக
கூடுதலாகத் தேவைப்படும் ரூபாய் 16 கோடி துணை மதிப்பீடுகளில்

"மானியக் கோரிக்கை 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

27. குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளின் சுற்றுப்புறங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மானியமாக அரசு, ரூபாய் 9 கோடி 50 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

28. காவிரி கழிமுகப் பகுதிகளிலுள்ள ஆறுகள், கால்வாய்கள், குளங்கள், வடிகால்கள் ஆகியவற்றில் தூரெடுப்பதற்கும், சேதமடைந்த கல்கட்டுமானங்களைப் பழுதுபார்ப்பதற்கும் நெய்வேலி காட்டாமணக்குக் களைகளை அகற்றுவதற்கும் ரூபாய் 10 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதித்துள்ளது. இது தவிர தஞ்சாவூர், நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் இச்செடிகளை களைக்கொல்லிகளைப் பயன்படுத்தி அழிப்பதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1 கோடி 2 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இச்செலவினங்கள் முறையே "மானியக் கோரிக்கை 35 - பாசனம்" மற்றும் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" ஆகியவற்றின் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

29. புதிதாக ஏற்படுத்தப்பட்ட கடல்சார் பணி வாரியத்திற்கு மானியமாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 50 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 39 - சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

30. முதலிபாளையம் (திருப்பூர்) பின்னல் ஆடை தயாரிப்புத் திட்டத்தில் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோருக்கு மூலதன உதவிக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு ரூபாய் 13 கோடி 32 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 47 - ஊரகத் தொழில்கள்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

31. காமராசர் சாலையில் உள்ள அண்ணா சதுக்கத்தினை மொத்தம் ரூபாய் 64 இலட்சம் செலவில் புதுப்பிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது.



இதுதவிர, அண்ணா சதுக்கத்தில் கூடுதலாக அருங்காட்சியகம் ஒன்று கட்டுவதற்காக ரூபாய் 29 இலட்சத்து 50 ஆயிரம் அரசு அனுமதித்துள்ளது. இச்செலவினங்கள் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 56 - பொதுப்பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

32. தமிழ்நாடு மின்வாரியத்திலிருந்து அரசுக்கு சேரவேண்டிய கடனாக இருந்த ரூபாய் 448 கோடி 28 இலட்சத்தை மாநில அரசின் சமபங்கு மூலதனமாகக் கருதவேண்டுமென்று அரசு உத்திரவிட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 61 - பல்வகை மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

33. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழுவிவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

34. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகின்றேன். வணக்கம்.

(241-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**1997-98 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள்**

கோரிக்கை :

(ரூபாய் ஆயிரத்தில்)

**அ. வருவாய்க் கணக்கில் செலவு**

| | | |
|---|---|---|
| 2 | மாநில ஆயத்தீர்வைத் துறை— | 12,70 |
| 7 | மாநிலச் சட்டமன்றம்— | 28,00 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்— | 51,90 |
| 11 | மாவட்ட நிருவாகம்— | 1,82,58 |
| 12 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்— | 90,00 |
| 13 | நீதி நிருவாகம்— | 71,32 |
| 14 | சிறைச்சாலைகள்— | 71,00 |
| 15 | காவல் துறை— | 25,88,37 |
| 17 | கல்வி— | 6,08,00 |
| 18 | மருத்துவம்— | 11,49,22 |
| 19 | மக்கள் நல்வாழ்வு— | 1,49,00 |
| 20 | வேளாண்மை— | 16,29,56 |
| 21 | மீனளம்— | 12,56,58 |
| 22 | கால்நடை வளர்ப்பு— | 1,59,82 |
| 23 | கூட்டுறவு— | 28,36 |
| 24 | தொழில்கள்— | 12,93,00 |
| 25 | கைத்தறியும் துணித்தொழிலும்— | 21,57,27 |
| 26 | கதர்-கிராமத் தொழில்கள்— | 13,70,00 |





கோரிக்கை :

(ரூபாய் ஆயிரத்தில்)

**அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி**

| | | |
|---|---|---|
| 27 | ஊரக வளர்ச்சி— | 1,45,24,01 |
| 28 | தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்— | 24,55 |
| 29 | சமூக நலன்— | 29,83,97 |
| 30 | பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன்— | 6,40,13 |
| 31 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்— | 16,98,18 |
| 33 | நகர்ப்பகுதி வளர்ச்சி— | 24,02,41 |
| 34 | நுகர்ப்பொருள் வழங்கல்— | 6,14,17 |
| 35 | பாசனம்— | 14,36,43 |
| 39 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்— | 75,00 |
| 41 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்— | 45,59 |
| 42 | பல்வகை— | 7 |
| 43 | எழுதுபொருள்-அச்சுத்துறை— | 19,39 |
| 44 | காட்டு வளத் துறை— | 1,21,75 |
| 46 | செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்— | 71,55 |
| 47 | ஊரகத் தொழில்கள்— | 13,32,00 |
| 48 | குடிநீர் வழங்கல்— | 10,68,28 |
| 49 | நகராட்சி நிருவாகம்— | 38,60,00 |
| 50 | சுற்றுலா— | 60,49 |
| 52 | சுற்றுச் சூழல்— | 8,65,17 |
| | மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **4,53,39,85** |

[1997 அக்டோபர் 14

கோரிக்கை :

(ரூபாய் ஆயிரத்தில்)

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.**

| | | |
|---|---|---|
| 53 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு— | 1,00 |
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு— | 10,00 |
| 56 | பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு— | 9,21,59 |
| 57 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு— | 16,76,22 |
| 59 | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு— | 1,09,99 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு— | 4,52,88,09 |
| | மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **4,80,06,89** |

**இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

| | | |
|---|---|---|
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்— | 19,93,31 |
| | பெரு மொத்தம் | **9,53,40,05** |

பிற்பகல் 12-40

## 4. அறிவிப்பு—தொடர்ச்சி

### (ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1997-98 — வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-98 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அளித்து இருக்கிறார்கள். அதிலே குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் கீழே வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், அவற்றை பேரவை 190-வது விதியின்கீழ், 15-10-1997 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 அக்டோபர் 14] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-10-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

86. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 9-9-1996 ஆம் நாளிட்ட 1311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

87. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 31-5-1997 ஆம் நாளிட்ட 827 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

88. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 6-9-1996 ஆம் நாளிட்ட 330 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு பதிவு செய்தல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89ஏ(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

89. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் அட்டவணை 1-ல் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 28-5-1997 ஆம் நாளிட்ட 198 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

90. வருவாய்த் துறையின் III எண் 351/1965-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரி மற்றும்

அறநிலையத் துறையின் 20-6-1997 ஆம் நாளிட்ட 231 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/1997) 2 மற்றும் 3 ஆகிய பிரிவுகள் 1-6-1997 முதல் அமுலுக்கு வருவதாக அமைக்கப்பட்டது குறித்து வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 20-5-1997 ஆம் நாளிட்ட 178 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

92. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

9. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

10. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

D
V211,31'N97
N97-37.2

218442

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.